நாவாந்துறைப் படிப்பகம்


# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 13 புதன்கிழமை (27.03.2002) தொலைபேசி 3378 ஒலி ·98


மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2480



நேற்று முன்தினம் வன்னி வந்து சேர்ந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் படகில் இருந்து இறங்கும் போது தலைவர் பிரபாகரன் கைகொடுத்து உதவுவதை முதலாவது படத்திலும், திருமதி அடேல் பாலசிங்கம், நோர்வேப் பிரதிநிதி ஆகியோருக்கு பிரபா கைகொடுத்து வரவேற்பதை 2வது, 3வது படங்களிலும் காணலாம்

### தாய்லாந்தில் பேசுவதென முடிவு

# புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதும் சமாதானப் பேச்சு ஆரம்பமாகும்

## அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

(வவுனியா விசேட நிருபர்)

**அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணரவு உடன்படிக்கை அமுல் படுத்தப்பட்டு- இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டு புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின்பு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் இப் பேச்சுவார்த்தையை தாய்லாந்து நாட்டில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளம் ஒன்றில் நேற்றுக் காலை 10 மணிக்கு நோர்வேயின் தூதுக் குழுவினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திருமதி அடேல் பாலசிங்கம் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

நோர்வேக் குழுவில் சிறப்புத் தூதுவர் எர்க் சொல்ஹெய்ம் இலங்கைத் தூதர் ஜோன்வெஸ்பேர்க் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த இரு ,

(2ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் உருவப்படம் பருத்தித்துறையில் திரைநீக்கம்

(மந்திகை)

பருத்தித்துறை மெத்தைக் கடைச் சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் ஆறடி உயரமான உருவப்படம் நேற்று திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை முன்னாள் நகர சபைத்தலைவர் வின்சன்டி போல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவீரர் ரஞ்சன் சித்தப்பாவின் தாயார், உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதேவேளை உருவப்படம் திரைநீக்கம் செய்யப்படுவதற்கு முன்னதாக பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்திவரை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பாட சாலை மாணவர்கள்,

(2ம் பக்கம் பார்க்க)

### யாழ்- கண்டி வீதி

## ஏப்ரல் 8ந் திகதி திறக்கப்படும் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி கண்டி வீதியை (ஏ-9 பாதை) ஏப்பிரல் மாதம் 8ம் திகதி திறப்பதற்கு அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று தெரிவித்துள்ளார்.

இப் பாதைதிறக்கப்படும் போது அரசினதும் புலிகளினதும், சார்பில் இருவர் வீதம் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் விடுதலைப்புலிகளின் தரப்பில், கேணல் தீபனும், பானுவும் கலந்து கொள்ளவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது

அரச படைத்தரப்பில் கலந்து கொள்வார்கள் என்று பெயர் குறிப்பிடப்படாத போதிலும் படைத்தளபதிகள் இருவர் கலந்து கொள்ளவுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ரான் அமைப்பு விரைவில் கலைக்கப்படும்

### பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு காலத்தில் அமைக்கப்பட்ட வடக்கு புனர்வாழ்வு,புனரமைப்பு அதிகாரசபை (ரான்) கலைக்கப்பட்டு புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

தமிழர் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்டம் தொடர்பாக நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே இத் தகவல்களை பிரதமர் வெளியிட்டார்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினைக் கலைத்து விட்டு உருவாக்கப்படும் புதிய சபைக்கு நீண்டகாலமாக

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## வடக்கு- கிழக்கு இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்படும்

### மே மாதம் நடக்கும் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்திய போது பிரதமர் இம்முடிவை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உருவாகியுள்ள சமாதானச் சூழலை அடுத்து, புலிக்ளிடம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகசபையை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகளும் உரிய அதிகாரங்களுடன் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள் ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கட்சி கூட்டமைப்பு பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மாலை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு அதிக தொகை ஒதுக்கப் பட்டமை மற்றும் வடக்கு கிழக்கு பகுதிக்கு புனர்நிர்மாணத்துக்கு நிதி ஒதுக்கப்படாமை ஆகியவற்றுக்கு தமிழ்க்கட்சி கூட்டமைப்பினர் எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்ததுடன் சமாதான முயற்சிகள் குறித்தும் பிரதமருடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வரவு செலவுத்திட்ட

(2ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### காணவில்லை

காரைநகர் சிவன் கோவில் சூழலில் அல்லது தீர்த்தக் கரையில் A.P. என பெயரிட்ட எமது எழுத்து மோதிரம் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4881)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து நியாயவிலையில் 24மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். 61 இராமநாதன் வீதி (மிலேனியம் பாருக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4874)

### தேவை

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆடைத் தொழில் சாலைக்கு துணிவெட்டுபவர், தைப்பவர், பூவேலை செய்பவர் தேவை. அனுபவம் வாய்ந்தவர் பயிலுநர்கள் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல.-241, மே/பா, வலம்புரி. (சி-3757)

## இன்றுதேர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஹரிகரபுத்திர ஐயனார் ஆலயத் தேர்த்திருவிழா இன்றும், தீர்த்த உற்சவம நாளையும் இடம்பெறவுள்ளது. (து)

● ● ●

(இணுவில்)

இணுவில சிவகாமி அம்மன் தோத்திருவிழா இன்று மு.பகல் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூசையையடுத்து மு.ப 10.00மணிக்கு அம்பாள் தேருக்குளயூந்தருளி வருவார். (எ-49)

---

இணுவை சிவகாமி அம்மன் தேர்த்திருவிழாவை ஒட்டிய கவிதை

## மலமதனை மாய்த்திருவாய்

சீர்பூத்த இணுவையம் பதியின் சிவகாம சுந்தரித்தாயே
பங்குநீ யாகிய திங்களின் பதின் மூன்றாம் நாள்
சிங்காரமான சித்திர லோகத் தேர் இவர்ந்தே
எங்கள் மலமதனை மாய்த்திடுவாய் தாயே
சித்தத்துள் தித்திக்கும் சிவன் தன் காமினியே
முத்திக்காம் வீட்டினையே தந்திடுவாய்.

பண்டிதை திருமதி தா. தேவராஜா
இணுவில்.

---

# சேதமடைந்த நிலையில் 80 வீதமான வீதிகள்

### மாநகர முதல்வர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் வீதிகளுள் 80 சதவீதமானவை நீண்ட காலமாக எவ்வித திருத்தவேலைகளும் செய்யப்படவில்லை. அதன்காரணமாக பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் செல்லன் கந்தையன் நேற்று முன்தினம் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார்.

அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றஇக்கலந்துரையாடலின் போது, அமைச்சர்கள் ஜயலத் ஜயவர்த்தனா, ஏர்ள் குணசேகரா ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

முதல்வர் செல்லன் கந்தையன் அங்கு தொடர்ந்து கூறுகையில்;

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கு போதிய நிதிவளம் இல்லாமல் இருப்பதுடன் போதிய ஆளணியினருக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்தவகையில் சிவில் பொறியியலாளர் யந்திர பொறியியலாளர், எழுதுவினைஞர்கள், கணக்காளர்களுக்கும் தட்டுப்பாடு உள்ளது என்றும் குறிப்பிட்டார். (உ-77)

### தலைவர்

மற்றும் பொதுமக்கள் என பலநூற்றுக்கணக் கானோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாக காணப்பபட்டது.

தமிழீழ வரைபடத்துடன் வெள்ளைப் புறா ஒன்று பறந்து வருவது போன்ற பின்னணியுடன் வரையப்பட்டதலைவர் பிரபாகரனின் படம் கம்பீரமாக கட்சியளிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-23-245)

### தமிழ்க்கட்சி

ஒதுக்கீடு குறித்து பிரதமர்கருத்து தெரிவிக்கையில்

கடந்த அரசாங்க காலத்தில் கடனுக்கு வாங்கப்பட்ட ஆயுத தளபாடங்களுக்கான கடனதொகையை செலுத்தவும், படையினருக்கான கொடுப்பனவுகளை வழங்கவுமே பாதுகாபபு செலவீனத்துக்கு அதிக தொகை ஒதுககப்பட்டுள்ளதாகவும், இந்நிலைமை தொடர்ந்து இரண்டு வருடங்களுககு நீடிக்குமெனறும் கூறினார்.

இந் நிலையில் அரசின் வரவுசெலவுத்திட்டம் குறித்து தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு எம்.பிககளிடையே கருத்து வேறுபாடுகளும் உட்பூசல்களும வலுவடைந்திருப்பதாக தெரியவருகிறது. (இ)

### ஏப்ரல்

ஏபபிரல் மாதம் 8ம் திகதி காலை 10 மணிக்கு வைபவரீதியாக நடைபெறவுள்ள இப்பாதை திறப்பு விழாவின் போது நோர்வேயின் கண்காணிப்புக்குழு த் தலைவரும கலந்து கொள்ளவுள்ளார்.

கண்டிவீதி ஏ-9 பாதை திறப்புவிழாவை அடுத்து பொதுமககளும், தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளும் அப்பாதையூடாகப் பயணத்தைத் தொடக்கிவைக்கவுள்ளனர்.

பயணிகள் போக்குவரத்தை அடுத்து வாகனப்போக்குவரத்து தொடர்பாகவும் நோர்வே குழுவினருடன் அன்ரன் பாலசிங்கம் பேசியுள்ளார். (வ)

---

## இதயபூர்வமான நன்றிகள்

2002-03-17ஆந் திகதி யாழ். சந்திரபுர ஸ்கந்த வரோதய ம. வி. (மட்டுவில்) தில் மட்டுவில் மத்தியின் கிராம உத்தியோகத்தர் திரு. க. வாமதேவன் அவர்களால் சிறப்புற நடத்தப்பட்ட பாரிய சிரமதானச் செயற்பாட்டிற்கு பொருட்கள். சேவைகள் என்ற வகையில் பங்களிப்புச் செய்த கிராம உத்தியோகத்தர் திரு. க. வாமதேவன், கைதடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி ப. கூ. ச., சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் 522ஆவது இராணுவத் தொகுதியும், 521ஆவது இராணுவப்பொறியியற் தொகுதியும், ஈ. பி. ஆர். எல். எவ். (வரதர் அணி). புளொட் அமைப்பு, திரு. வி. கதிரவேலு (மட்டுவில்), திருமதி சுகிதா துஷ்யந்தன் (கைதடி நுணாவில்). சினனத்தம்பி செல்வராசா (மட்டுவில் தெற்கு), திரு. எஸ். தவயோகச் செல்வகுலசிங்கம் (உழவு எந்திர உரிமையாளர்), திரு. இராசமணி நடராசா (மட்டுவில்), மட்டுவில் மத்தி, கல்வயல் கி. உ. பிரிவினரும் பிற பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகளும் ஆகிய பொதுமக்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

அதிபர்
ஆசிரியர்கள்

யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

(சி 3766)

---

## அனுமதிஅட்டைகளைப் பெறலாம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரிஉள்ளகபயிற்சி மாணவர்களுக்கு அடுத்த மாதம் 4ந் திகதி இறுதிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை நாளைகாலை 10 மணிக்கு கல்லூரியில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார். (இ)

### புலிகள் மீதான

பிரதிநிதிகள் நோர்வேதூதரகத்தின் 2வது செயலர் தோமஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பேச்சுவார்த்தை தொடர்பாக நேற்றுமாலை கிளிநொச்சியில் அன்ரன்பாலசிங்கம் கருத்து தெரிவிக்கையில்

போர்நிறுத்தஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என தலைவர் வே. பிரபாகரன் நோர்வேத் தூதுக் குழுவிடம் வற்புறுத் கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

- தமிழ் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் முற்றாகக்களையப்பட வேண்டும்.
- போக்குவரத்துக்குகான பாதைகள் திறக்கப்படவேண்டும்.
- தமிழர் தாயகப்பகுதிகளில் உள்ள மீன்பிடிப்பதற்கான தடைகள் நீக்கப்பட்டு சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படவேண்டும்.
- புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த முப்பதுநாட்களில் ஆயுதம் தரிக்காத அனைத்துப் போராளிகளும் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்கு சுதந்திரமாக நடமாடி அரசியல் வேலைகளை மேற்கொள்ள வழிஏற்படுத்தப் படவேண்டும் என்றும் பிரபாகரன் வலியுறுத்தியதாகயும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையின் போது கிழக்குமாகாணத்தில் சிறிலங்கா அரசபடையினரால் ஏற்படுத்தப்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்தும் அரசியல் பேச்சுவார்த்தையை எங்கு? எப்போது? நடத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

பேச்சு வார்த்தைக்கான இடம் தொடர்பாக ஆராயப்பட்டபோதுதனது உடல்நலக் குறைவு காரணமாக இந்தியாவின தமிழ் நாட்டில் ஒரு இடத்தில் பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்பதற்கு இந்தியா மௌனம் சாதித்து வருவதனால் நோர்வே நாட்டின சிபார்சுடன் தாய்லாந்தில் பேச்சு வார்த்தையை நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளதையும் பாலசிங்கம் தெரிவித்தார்.

### இடைக்கால நிர்வாக சபை

வடக்குகிழக்கு மாகாணங்களின் இடைக்கால நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பில் விடுவது தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தையின் போது விரிவாக ஆராயப்பட்டுள்தாகவும் தெரிய வருகிறது. (வ)

---

## இலவசபரீட்சை வழிகாட்டல்

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம்ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணி வரை மானிப்பாய் ஸ்ரீசத்திய சாயிசேவாநிலையத்தில் நடைபெறும் (ந-5)

## பாணின் விலை குறையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள பாண் உற்பத்தி நிலையங்களை 450கிராம் பாணின் விலையை ஒருரூபாவால் குறைக்குமாறு மேலதிக அரசாங்கஅதிபர் து. வைத்திலிங்கம்கேட்டுள்ளார்.

நாளைபுதியவிலை நடைமுறைக்கு வரும்என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பிறிமாஆலையில் இருந்து குடாநாட்டிற்கான மாவை எடுத்துவரும் பொறுப்பை வி.எஸ் பி. குறூப் யாழ்மாவட்டவிவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியன ஏற்றிருப்பதும் மாவின்மொத்த விற்பனைவிலை ஒருரூபாவால் குறைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கடமையாற்றிய நால்வர் பதவிஉயர்வுடன் ஏப்ரல் மாதம் முதலாம்திகதி இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

திருமதி யோகா செல்வரத்தினம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக மன்னாருக்கும், மற்றும் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக எஸ். திருச்செல்வம் முல்லைத்தீவிற்கும், என். தவநாதன் கிளிநொச்சிக்கும், செல்வி ஆர். இராசரத்தினம் வவுனியாவிற்கும்இடமாற்றம் பெறறுள்ளனர். (வ)

## கமலாசினி வித்தி. தரம் 5 மாணவருக்கு

(யாழ்ப்பாணம்)

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப் பப்படிவத்தில் கையொப்பமிடுவதற்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலய தரம் 5 மாணவர்களையும் அவர்களதுபெற்றோரையும் இன்றுகாலை 10 மணிக்கு முனனதாக நெல்லியடியிலுள்ள தனது வீட்டிற்கு வருகைதருமாறு அதிபர்கேட்டுள்ளார். (ந-5)

### ரான் அமைப்பு

காலிஅரச அதிபராகவும் தற்போது எரிபொருள்மின் சக்தி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் இருந்து வரும் எஸ். சிவானந்தன் தலைவராக நியமிக்கப்படவிருப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

---


ஓம்

புதுக்கடைத் திறப்புவிழா

# அபிராமி எலக்றிக்கல்ஸ்

# ABIRAMY ELECTRICALS

62/31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாளை பங்குனி 28 03-2002 காலை 9-10 மணி தொடக்கம் 9.50 (புதிய நேரம்) சுபவேளையில் புதிதாக ஆரம்பிக்கப்படும் எமது வியாபார நிலையத்திற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

திரு, திருமதி சி. நடராசா குடும்பத்தினர்.

(சி 3570)

## திம்புக் கோட்பாடே
# இனப்பிரச்சினைக்கான இறுதி
# தீர்வாக அமையமுடியும்!
## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வாக அமையமாட்டாது. திம்புக்கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வுகாண அரசு முன்வர வேண்டும் என யாழ் மாவட்ட எம் பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தெரிவித்துள்ளார்.

தில்லை கூத்தன் எழுதிய, ‘நாம்யார்க்கும்குடியல்லோம் என்னும் நூல் வெளியீட்டு விழாவில் நூலுக்கான ஆசியுரை வழங்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் இவ்வெளியீட்டு விழா இடம் பெற்றது.

இவ்விழாவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிமேலும் கூறியதாவது:

புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்திற்கான ஒருபடியாக அமைந்திருந்தது. ஆனால்தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்டம் சமாதானத்தைப்பின் நோக்கிச்செல்லவைத்துள்ளது இந்தவரவுசெலவுத் திட்டத்தில் யுத்தத்திற்கு பெருமளவு நிதிஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தயுத்தநிறுத்தம் ஒருநிரந்தரமான யுத்தநிறுத்தமல்ல என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வெளியீட்டுவிழாவில் தமிழர்தேசியகூட்டமைப்பை சேர்ந்த எம்.பிக்கள் அ.விநாயகமூர்த்தி,யோசப்பரராசசிங்கம் மனோகணேசன்எம்.பி என்.குமரகுருபரன்’சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்படபலர் உரையாற்றினர். (வ)

## கிராமசேவகர் தெரிவு
## போட்டிப் பரீட்சை விரைவில்

(கொழும்பு)

நாடாளாவிய ரீதியில் கிராம சேவகர்களை தெரிவு செய்யும் நோக்குடன் போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

உள் நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார இதனைத் தெரிவித்துள்ளார்.

1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 40 ஆயிரம் பேர்சித்தியடைந்துள்ள போதிலுப், அரசு ஆயிரத்து 400 பேரையேநியமித்திருந்தது.

ஆயிரத்து 778 சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இச்சேவையில் அமர்த்தப்பட்டனர்.

போட்டிப் பரீட்சையடிப்படையில் தகுதி வாய்ந்தவர்கள் பலர் இனம்காணப்பட்ட போதிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை நியமித்தது தவறு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ–8)

## மாணவர் மத்தியில்
## பண்ணிசைப் போட்டி

(இணுவில்)

ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலயமஹோற்சவத்தையொட்டி இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் மாணவர்களிடையே நடத்தும் பண்ணிசைப் போட்டிக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

4பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் மே மாதம் 5ஆம் திகதியாகும். (உ-49)

## புத்தூர் மத்திய மருந்தகம்
## செல்வோர் ஏமாற்றம்

(புத்தூர்)

புத்தூர் மத்திய மருந்தகம் செல்லும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்படி மருந்தக வைத்திய அதிகாரி லீவில் கொழும்பு சென்றுள்ளதையடுத்து அவரின் இடத்திற்கு எவரும் நியமிக்கப்படாததாலே இந்நிலை எழுந்துள்ளது.

இதனால் மேற்படி பகுதி மக்கள் தற்போது அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையை நாடவேண்டி உள்ளது. (உ-235)

## இன்றும் நாளையும்
## நிவாரண அனுமதி
## பத்திரங்களை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்களுக்கான இம்மாத நிவாரண அனுமதிப் பத்திரம் இன்றும் நாளையும், புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும்,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட தினங்களில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளை பிரதேச செயலக உப அலுவலகத்திலும் வைத்து வழங்கப்படஇருக்கிறது.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் தங்கியுள்ள பளை பிரதேச மக்களுக்கான நிவாரண அனுமதிப் பத்திரம் பருத்தித்துறைபிரதேச கிராம உத்தியோகத்தர்களால் வழங்கப்படவுள்ளது.


மேற்குறிப்பிட்டதினங்களில் தவறாது சமுகமளித்து நிவாரண. அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறுபச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (உ)

## போயாதின
## ஆன்மீக
## நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை போயா தினத்தை முன்னிட்டு மு.ப. 9.00 மணி தொடக்கம் காயத்திரிமந்திர ஜெபம், இலட்சார்ச்சனை, பண்ணிசை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (செ)

## வண்ணை சிவன்
## தேர் உற்சவம்



### வடம்பிடித்தே இழுத்திடுவோம்

வண்ணை நல்லூர் வீதியிலே
பஞ்சரதக் காட்சிகாண்போம்
ஆனைமுகன் ஏறிவரும்
அழகுரதம் முன்னால்வரும்
வேலவனும் வள்ளியுடன்
தேவயானைத் தேரும் வரும்
வாலாம்பிகை அம்மை தேரை
பெண்ணடியார் தானிழுப்பர்
வைத்தீசர் அருகினிலே
வாலாம்பிகை சேர்ந்திருக்கும்
வண்ண ரதம் விண்ணை முட்ட
உயர்ந்து காட்டும் அழகுரதம்
வடம்பிடித்தே இழுத்திடுவோம்
இடம்பிடிப்போம் முத்தியிலே

கவிஞர் கந்த முருகேசதாசனார்

### நல்லதொரு வாழ்வு வரவேண்டும்

வல்லகண நாதர் செல்லமுடி சூடி
அல்லலறு யானை-முகனோடு
வெள்ளிமலை வாச வள்ளல்குமரேசன்
வள்ளிதெய்வ யானை-புடைசூழ
சொல்லுபயன் சேர எல்லவரும் தேடு
வல்லவசன் டீச-னவன்கூட
துள்ளுமிடை யாட மெள்ளநடை போடு
கிள்ளைமொழி வாலாம்-பிகையோடு
கொல்லுவினை மாள நல்லமனர் வாழ
பல்லருளை வாரத்-தேரேறி
கொள்ளையழ கோடு வள்ளலெனப் பாத
முள்ளுபவர் காண-வருவானே!
தொல்லையில தான நல்லதொரு வாழ்வு
வல்லபுவி மீது-வரவேணும்
தெள்ளுதமிழ் நாவ ருள்ளமது வாழும்
வண்ணைநகர் மேவு-வைத்தீசா!

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

### தேரேறி வருகிறான்

‘திருவண்ணை நற்பதியில் நெடிய திருவீதியிலே
பாரோர் விண்ணோர் பரவியேத்தும் வைத்தீஸ்வர நாதன்
மனமென்னும் மலர்குவித்துப் பணிந்திடும் அடியார்க்கு
நினைவில்காத்து நின்று சூழும் தீவினைப் பலன் நீக்க
எழில் பரமனப் பூங்கொடி தையல் நாயகியுடன்
கோலாகலமாய்த் தேரேறி எழிலாக வருகிறான்
சரணம் என்பவர்க்கே சங்கடங்கள் தீர்த்திடவே’

நயினை விஜயன்

# ஜனாதிபதி- உள்துறை அமைச்சர்
# காரசாரமான கடிதப் பரிமாற்றம்

(கொழும்பு)

தேர்தல்வன்முறைகள் அதிகரித்து வந்த நாட்களில், பொலிஸாருக்கு உதவியாக ஆயுதப்படைகளையும்கடமையில் ஈடுபடுத்தும்படி வேண்டுகோள் விடுக்கும் கடிதத்தை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பவேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசாவிடம் நீர் கேட்டுக்கொள்ளவில்லையா? என்று ஜனாதிபதி சந்திரிகா உள்துறை அமைச்சர்ஜோன் அமரதுங்கவை எச்சரிக்கும் விதத்தில் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

கடந்த 18 திகதி அமைச்சர் ஜோன் அமரதுங்க எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கும் விதத்தில் எழுதிய மேற்படி கடிதத்தில் மேலும்,

தேர்தல் கடமைகளுக்கு முப்படையினரினதும் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில், அரசியற் சட்டத்தின் 17 வது திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபர்தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கவேண்டும் என்று கபடம்எதுவும் அறியாதவர் போல் எனக்கு கடிதம் எழுதிய நீர், கடிதம் எழுத வேண்டாம் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் அவரை பமுனுகம என்னுமிடத்திற்கு 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அழைப்பித்து கேட்டுக்கொண்டீரல்லவா?

பதில் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசாவும், தேர்தல் ஆணையாளரும்படையினரை சேவையில ஈடுபடுத்த பெரிதும் விருப்பங்கொண்டிருந்தனர். ஆனந்தராசா கடிதம் எழுதுவதற்குவிருப்பம்கொண்டிருந்தார்.

ஆனால், நீர் அதனைத் தடுத்துவிட்டீர். ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியாகவும் உள்ள ஒருவர் பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சராகவும் இருந்து கொண்டு தேர்தல் வன்முறைகளை தடுப்பதற்கு முயற்சியெடுக்கவில்லை.

இது வேதனைக்குரியது இவ்வாறு 18 ஆம் திகதி அமைச்சர் ஜோன் அமரதுங்க எழுதிய கடிதத்திற்கு ஜனாதிபதி எழுதியபதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மத்திய கிழக்கில்
## இன்னலுறும் பெண்களைத்
## திருப்பியழைக்க முடிவு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப்பணிப் பெண்களாக பணியாற்றி பல கஷ்டங்களிற்கும், இன்னல்களுக்கும் ஆளான இலங்கை பெண்களை வெகுவிரைவில் திருப்பியழைக்கப் போவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை எடுத்துக் கூறும்வகையில்நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் இன்னல்களுக்கு இலக்காகி வரும் பெண்கள் அங்குள்ள இலங்கை தூதரகங்களில் முறைப்பாடுகளும் செய்து வருகின்றனர்.

இதற்கமைய கடந்த வருடத்தில் மாத்திரம் ஆயிரத்து 315 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

குவைத், சவுதியரேபியா, யோடான், சைபீரியா, லெபனான் போன்ற நாடுகளிலேயே அதிகமாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர்.

லெபனானில்வீட்டுப்பணிப் பெண்களாக பணிபுரிந்த 400 இலங்கைப் பெண்கள் குழந்தைகளை பிரசவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-8)

# அம்பாறை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்
# அனைத்து சபை அதிகாரங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட சிங்களப் பிரிவுகளில் உள்ள 15 உள்ளூராட்சி சபைகளில் 8 சபைகளிற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இத்தேர்தலில் அனைத்து சபை அதிகாரங்களையும் ஐக்கிய தேசிய கட்சி கைப்பற்றியுள்ளது.

இதுவரை நடைபெற்று முடிந்த 230 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஐ.தே.கட்சி 225 உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை தனதாக்கி கொண்டுள்ளது.

அம்பாறையில் 8சபைகளில் ஐ.தே. கட்சி சார்பாக 68 உறுப்பினர்களும், பொ. ஐ. முன்னணி சார்பாக 21 உறுப்பினர்களும் மக்கள் விடுதலை முன்னணி சார்பாக 4 உறுப்பினர்களும் சுயேச்சைக் குழு 1, 3 சார்பாக தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர்.

(உ-9)

## 22 மாவட்டங்களில் 425 நடமாடும் சேவைகள் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள 22 மாவட்டங்களில் 425 நடமாடும் சேவைகள் நடத்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசியல் காரணங்களாலோ அல்லது வேறு காரணங்களாலோ தீர்க்கப்படாமல் இருந்து வந்த மக்கள் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கும் முகமாகவே இந்நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் அடையாள அட்டை வழங்கல், வாகன அனுமதிப் பத்திரம் வழங்கல், பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ், ஓய்வூதியம், சமுர்த்தி கொடுப்பனவு உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. (உ-9)

## பிந்துனுவெவ படுகொலை 9 சந்தேக நபர்களுக்கு 2 இலட்சம் சரீரப் பிணை

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் சம்பந்தமான ட்ரயல் அற் பார் விசாரணைகள் நேற்று முன்தினம் மேல்நீதிமன்ற நீதியரசர்கள் சரத் அம்பேபிட்டிய, எரிக் பசநாயக்க, உபாலி அஹேத்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 41சந்தேக நபர்களுக்கும் குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டன.

41 சந்தேகநபர்களில், 9பேர் கிரமமான முறையில் பதுளை நீதிமன்றத்தில் சமுகமளிக்கத் தவறியதை அரச சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், அவர்களுக்கு பிணை நிபந்தனைகள் விதிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து 9சந்தேக நபர்களுக்கும் தலா10 ஆயிரம் ரூபா காசுப்பிணையும் இரண்டு இலட்சம் ரூபா சரீரப்பிணையும் சமர்ப்பிக்கவேண்டுமென உத்தரவிடப்பட்டது.

(உ)

## படையினரின் ஆயுதங்களை திருடி விற்று வந்த இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இராணுவத்தினரின் ஆயுதங்களைக் களவாடி விற்பனைசெய்து வந்த இராணுவ வீரர் ஒருவர் உட்பட இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரமனாலங்குளம் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரரும் மற்றொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக இவர்கள் ஆயுதங்களைத் திருடி விற்று வந்தனர், இவர்களிடமிருந்து ரி-56 ரகத்துப்பாக்கி-4, ரவைகள் -30 என்பன மீட்கப்பட்டுள்ளன. (உ)

## அன்னை பூபதியின் நினைவு அலங்காரங்களை நாம் அறுத்து எறியவில்லை

### பாதுகாப்பு இணைப்பு அதிகாரி

(கொழும்பு)

அன்னை பூபதி நினைவாக மட்டக்களப்பு கிரானில் கட்டப்பட்டிருந்த அலங்காரங்களை தாம் அறுத்தெறியவில்லை என படைத்தரப்பினர் மறுப்பு அறிக்கை விடுத்துள்ளனர்,

இது குறித்து இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பு அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் வீ.ஆர்.எல். அன்ரனி தெரிவித்துள்ளார்.

இவ்வலங்காரங்களை கட்டாக்காலி மாடுகளே துவம்சம் செய்துள்ளன என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதாகைகள் அகற்றப்பட்டு எரிக்கப்பட்டதாக கூறப்பட்ட குற்றச்சாட்டிலும் எவ்வித உண்மையுமில்லை என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## கைக்குண்டுடன் கைதானவர் புலிகள் உறுப்பினர் அல்லர்

### அரசியல் துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் கைக்குண்டு, சைனட் வில்லை மற்றும் இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளுடன் கடந்த 22-ம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அமிர்தவாசன் என்று அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த நந்தகுமார் என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் அல்லர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அமிர்தவாசன் விடுதலைப் புலி உறுப்பினராக இருந்து கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் விலகியவர் என்றும் அவருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் தற்போது உறுப்பினர் என்ற வகையில் எத்தகைய தொடர்பும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-9)

## இராசிபலன்

27-3-2002

(பங்குனி 13, புதன்)
சதுர்த்தசி பி இ 3. 10 வரை
பூரம் மு.இ 8.30 வரை
ராகுகாலம் 12. 14-1.44
நல்லநேரம் 4.44-6.14
அமிர்தம்

**மேடம்**
குடும்பக் கவலை, உடல் வியாதி, காரிய தாமதம், வியாபார நன்மை.

**இடபம்**
வாக்கு மேன்மை, ரோக பயம், மாணவர் கல்விச் சிறப்பு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
தனவரவு, காரிய அனுகூலம், வாக்கு மேன்மை, இனிப சம்பவம்.

**கடகம்**
செல்வாக்கு குறைவு, காரிய தாமதம், நிலைமாற்றம், அபகீர்த்தி.

**சிங்கம்**
பெரியோர் மதிப்பு, கற்பனை மிகுதி, முயற்சி பலிதம், சயனசுகம்.

**கன்னி**
அலைச்சல், வீண் செலவு, முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம்.

**துலாம்**
கீர்த்தி, காரிய நன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி, தன வரவு.

**விருச்சிகம்**
பிறர் உதவி, முயற்சி ஜெயம், தூரதேசச் செய்தி, தொழில் விருத்தி.

**தனுசு**
பிரயாணம், உடல் வியாதி, காரிய தாமதம், பிதாசிந்தை.

**மகரம்**
வீண் தொல்லை, முயற்சி தாமதம், வியாதி, தொழில் கஷ்டம்.

**கும்பம்**
களஸ்திர சுகம், சுவாரஸ்யம், தொழில் நன்மை, பிரயாண நன்மை.

**மீனம்**
காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு, செய் தொழில் விருத்தி, சத்துரு ஜெயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## செய்தித் துளிகள்

### கிரிக்கெட் சபை இடைக்கால நிர்வாகக் குழு

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கான இடைக்காலக் குழுவை தெரிவு செய்ய இருப்பதாக இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்சன் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்வு இந்த வார இறுதிக்குள் இடம்பெறும் என்றும், இக்குழுவில் 5 தொடக்கம் 7 பேர் வரையானோர் அங்கம் வகிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-9)

### பதிவை மேற்கொள்க

(தென்மராட்சி)

ஏனைய பாடசாலைகளில் தற்காலிகமாகக்கல்வி பயிலும் யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி. இன் தரம் ஐந்து மாணவர்களை இன்று யா/ கரவெட்டி விக்னேஸ்வரவித்தியாலயத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென அதிபர் மு.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (உ- 77)

### வருடாந்த மஹோற்சவம்

(உடுவில்)

மானிப்பாய் மருதடி அருள்மிகு விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினைந்து நாட்கள் திருவிழா நடைபெற்று ஏப்ரல் 14ஆம் திகதி புதுவருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ- 129)

### கரப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம், கிராமஅபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நடத்தி வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில், இன்று பி.ப 4.00 மணிக்கு வைத்தீஸ்வரா வி.க எதிர் வளர்பிறை வி.க, பி.ப 5.00 மணிக்கு கலைமதி வி.க எதிர் கொக்குவில் மேற்கு வி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

### பலகல்ல ஏப்ரலில் ஓய்வு

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல எதிர் வரும் ஏப்ரல் மாதம் ஓய்வுபெறவுள்ளார்.

இத் தகவலை பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

இவருடைய சேவை இரு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதே வேளை, ஏப்ரல் மாதம் மேலும் பல இராணுவ உயரதிகாரிகள் ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது' (உ)

### அலங்கார உற்சவம்

(அராலி)

வட்டுக்கோட்டை வடக்கு இலுப்பையடி அருள்மிகு மகாமாரி அம்மனின் அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை பங்குனி உத்தர விஷேட அபிடேகம் பூஜைகளுடன் நிறைவு பெறுகின்றது. (செ-214)

### 12வருடங்களின் பின் மைதானத்தில் விளையாட்டுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

யா/வேலணைசேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயத்தின் பிரதான விளையாட்டு மைதானத்தில் அண்மையில் வேலணை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர்போட்டி இடம்பெற்றது-

கடந்தபன்னிரண்டுவருடங்களின் பின் மேற்படி மைதானத்தில் கோட்ட மட்டப் போட்டிகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்படி மைதானம் இம்மாதம் ஆரம்பம் முதல்மாணவர்களின் பாவனைக்கு இலங்கைக் கடற்படையினர் அனுமதி வழங்கியிருந்தமை தெரிந்ததே. (உ-75)

### வி மைதானத்தை புனரமைக்குமாறு வேண்டுகோள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மைதானங்களைப் புனரமைக்கவேண்டும் என, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-75)

### பிரதி அதிபரிடம் பதில்கடமை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் நீண்ட சுகவீன விடுமுறையில் சென்றிருப்பதால் கல்வி உயர் கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகக் கிளை பிரதம ஆணையாளரின் பணிப்புரைக்கிணங்க பிரதி அதிபர் ஐ. புவனேந்திரன் நேற்று முதல் பதில் அதிபர் கடமையை ஏற்றுள்ளார். (உ)

### வன்னிப் பகுதிக்கு மேலதிக பண உதவி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உதவித் திட்டத்தின் கீழ், வன்னிப் பகுதியின் அபிவிருக்கு மேலதிக பண உதவி வழங்கப்படவுள்ளதாக கொழும் பிலுள்ள ஐக்கியநாடுகள் சபையின் காரியாலயம் தெரிவித்துள்ளது. (உ)

### முதலாவது அமர்வு ஏப்ரல் 5இல்

அரசியல் அமைப்புச் சபையின் முதலாவது அமர்வு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (செ)

### வசந்த கோட்டம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பிரதேசசெயலகத்தினால் அமைக்கப்பட்ட வசந்த கோட்டம், அரங்கின் திறப்பு விழாவும் கலைநிகழ்ச்சிகளும் உலக நாடக தினமாகிய இன்று இடம் பெறவுள்ளன.

பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ் விழாவிற்கு தலைமை தாங்கும் திருமதி ப. திலகநாயகம் போல் மேற்படி அரங்கினைத் திறந்து வைப்பார்.

ஒரு தோப்புக்கிளிகள்' என்ற நாடகம், பட்டிமன்றம்மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் (எ)

## இன்று ஒரு தகவல்

# முட்டாள் வணிகன்

ஓர் ஊரில் முட்டாள் ஒருவன் இருந்தான். அவனிடம் சிறிது பொருள் இருந்தது. அதை முதலாக வைத்து மளிகைக் கடையொன்றைத் தொடங்கினான். விரைவில் பெரும் பணம் சேர்க்க நினைத்த அவன் நெய்யில் விளக்கெண்ணையைக் கலந்து விற்பனை செய்தான். அவன் கடையில் வாங்கிய நெய்யில் சமைக்கப்பட்ட உணவை யாராலும் சாப்பிடமுடியவில்லை. எல்லோரும் என்ன நெய் விற்கிறாய்? என்று கடையின் முன் நின்று கூச்சல் போட்டார்கள். அங்கு வந்த காவலர்கள் கடையிலிருந்த நெய்யுடன் கடைக்காரனையும் இழுத்துக் கொண்டு நீதிமன்றம் சென்றார்கள்.

நெய்யின் கெட்ட வாசனையைப் பார்த்தவுடன் நீதிபதி அது கலப்படம் செய்யப்பட்ட நெய் என்று உணர்ந்தார். கலப்படமான நெய்யை விற்கிறாய்? உனக்கு இன்று தண்டனை தரப்போகிறேன். மூன்று தண்டனைகளைக் கூறுவேன். அவற்றுள் உனக்குப் பிடிக்கின்ற ஏதேனும் ஒரு தண்டனையை 'நீ அனுபவிக்கலாம்' என்றார். என்ன தண்டனை என்று கேட்டான் வணிகன். 'இந்தக் கலப்படமான நெய் முழுவதையும் நீ சாப்பிட வேண்டும். அல்லது நூறு கசையடி வாங்க வேண்டும். இல்லாவிட்டால் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும்' என்றார் நீதிபதி.

வணிகன் சிந்தித்தான். நாம் அந்த நெய்யையே எளிதாகச் சாப்பிட்டு விடுவோம் என்ற எண்ணத்தில் நீதிபதியைப் பார்த்து 'முதல் தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன்' என்றான் நெய்யிருந்த பாத்திரம் அவன் முன் வைக்கப்பட்டது. அதிலிருந்து ஒரு கரண்டி நெய்யை எடுத்து வாயில் போட்டான். நாற்றம் தாங்க முடியவில்லை. குமட்டிக் கொண்டு வந்தது. இருந்தாலும் சகித்துக்கொண்டு இன்னொரு கரண்டி நெய்யை எடுத்து வாயில் போட்டான். அவ்வளவுதான் அவன் தலை சுற்றத்தொடங்கியது. மயக்கம் வரும்போல இருந்தது. தன்னால் அந்த நெய் முழுவதையும் சாப்பிட முடியாது என உணர்ந்தான் அவன். 'நீதிபதி அவர்களே! முதல் தண்டனையை என்னால் தாங்க முடியாது. நூறு கசையடி வாங்கிக் கொள்கிறேன்' என்றான். உடனே நீதிபதி கசையடி தருமாறு கட்டளையிட்டார். கசையால் அடிப்பவன் வணிகனை ஓங்கி ஓங்கி அடித்தான். கசை அடி தாங்காமல் அவன் உடல் எல்லாம் வீங்கிவிட்டது. நாற்பது கசையடி கூட முடியவில்லை... நிறுத்துங்கள், என்னால் இனி ஒரு அடி கூடத் தாங்க முடியாது. நான் ஆயிரம் ரூபா அபராதம் கட்டுகிறேன். என்னை விட்டுவிடுங்கள்' என்று கெஞ்சினான் அவன். இதைக் கேட்ட நீதிபதி கசையடியை நிறுத்துமாறு கட்டளையிட்டார். வணிகன் ஆயிரம் ரூபா அபராதம் கட்டியபின் அவனை விடுதலை செய்தார். இவ்வாறாக வணிகன் தன் முட்டாள் தனத்தால் ஒரு குற்றத்திற்கு மூன்று தண்டனைகளைப் பெற்றான். ●

நன்றி
கோகுலம்.

## இலங்கையரை திருப்பி அனுப்பவேண்டாம்

# வெளிநாட்டுத் தூதரகங்களிடம் விநாயகமூர்த்தி எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை வெளிநாடுகளிலுள்ள தமிழர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி கேட்டுள்ளார்.

பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாட்டுத் தூதரகங்களிடமே அவர் இவ் வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

ஜேர்மனிய அரசாங்கம் இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவுடனேயே அகதிகளைத் திருப்பியனுப்பும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதனால் அவர்களின் வாழ்வில் பாரிய ஆபத்தான விளைவுகளை எதிர் நோக்க வேண்டிவரும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## விசேட ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தின் பெரியவியாழன், பெரியவெள்ளி, மற்றும் பெரியசனி வழிபாடுகள் மூன்று தினங்களும் தினமும் மாலை 5.30 மணிக்கு விசேட ஆராதனைகளாக நடைபெறவுள்ளன. (இ-5)

## மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நிகழ்த்தும் 'நெஞ்சுறுத்தும் கானல்' மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை இன்று மு. ப. 11.30 மணிக்குவேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-3)

## கட்சி அலுவலகங்கள் பொலிஸ் பாதுகாப்பில்

(மந்திகை)

வல்வெட்டித்துறை, மந்திகை, நெல்லியடி ஆகிய இடங்களிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகங்களுக்கும் நெல்லியடியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகத்துக்கும் 24 மணி நேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இக் கட்சிகள் ஆயுதங்களைக் கையளித்ததை அடுத்தே கட்சி அலுவலகங்களுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-5,23)

## விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்விபத்தில் வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நாவலர் வீதி அரியாலையைச் சேர்ந்த நாகமணி நடராஜா (வயது 78 என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார். (இ)

## 83-வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு ஞானபாஸ் கரோதய சங்கத்தின் 83-வது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 30ந் திகதி மாலை 5மணிக்கு நிலையத் தலைவர் ரீ. சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வை முன்னிட்டு நாளைகாலை 7 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியும், எதிர் வரும் 30-ந் திகதி காலை 7 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளன. (இ)

## ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்ற பிரேரணை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவிற்கு எதிராகப் பாராளுமன்றத்தில் அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி தயாராகுவதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்தில் நடைபெறும் வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் முடிவடைந்ததும் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் எனவும் அக்கட்சி வட்டார உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (செ)

## வடக்கு- கிழக்கில், தேர்தல் ஒத்திவைப்பு பவ்ரல் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில்அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமையை பவ்ரல் அமைப்பு கண்டித்துள்ளது.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலேயே தேர்தல்கள் இடம்பெறுகின்றன.

முஸ்லிம் மக்களின் பிரதேசங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்கம் இன ரீதியில் வேறுபாடு காட்டுவது, சம்பந்தப்பட்ட இனங்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

அரசு பொறுப்புடன் வாக்காளர்களின் விருப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதே எமது கருத்தாகும் என்றும் பவ்ரல் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## க.பொ.த.உ.த பரீட்சை தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தொகை பெரும் வீழ்ச்சி

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில், குறைந்த எண்ணிக்கையிலேயே தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 பாடங்களிற்கு தோற்றும் முறை மாற்றம் செய்யப்பட்டுள்ளதால்இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஏப்ரல்மாதம் நடைபெறவுள்ள இப்பரீட்சை தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் கல்விப் பணிப்பாளர்களிற்கான விசேடகூட்டம் நாளை பத்தரமுல்லையிலுள்ள இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட சகல மாவட்டங்களையும் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள்இந்தகூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-9)

## இளங்கலைஞர் மன்றத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழாவில் 5 ஆம் நாளான இன்று பி. ப 3.30 மணி முதல் மங்கள இசை, வயலின் இசை, பாட்டு, வீணை இசை, இசைக்கச்சேரி என்பன இடம் பெறவுள்ளன. (உ-3)

## இலங்கை-சவூதிஅரேபியா வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையும் சவூதி அரேபியாவும் விரைவில் வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன.

இவ்விருநாடுகளுக்கிடையேயும் அரசியல், கலாசார, சமூக ரீதியில் உறுதியானநல்லுறவு நிலவுகின்றமையினால் வர்த்தகம் பொருளாதாரம்தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகவுள்ளது. (செ)

## பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ளசகல பல்கலைக்கழகங்களுக்கும்மானிய ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட பேரவை உறுப்பினர்களையும் இராஜினாமாச் செய்யுமாறும் தொடர்ந்தும் அப்பதவிகளில் இருக்கவிருப்பமா?என்றும் கேட்டு அரசு உரியவர்களுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

அரசு அனுப்பிவைத்த இக்கடிதத்தைத் தொடர்ந்து யாழ்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேரவை உறுப்பினர்கள் 13பேரும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளதுடன் தொடர்ந்துஅப்பதவியில் இருப்பதற்கும் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## வல்வெட்டித்துறை வைத்தியசாலைக் காவலாளி கத்திக்குத்துக்குப் பலி

(மந்திகை)

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலையின் இரவு நேரக்காவலாளி நேற்று முன்தினம் கத்திக்குத்துக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கரவெட்டிமேற்கைச்சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் நவராசா (வயது44) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இரவுநேரக்காவல் கடமையை முடித்துக்கொண்டு காலைவீடுதிரும்பிக் கொண்டிருந்த இவரை நெல்லியடி நவிண்டில் குளங்கரைப் பகுதியில் வைத்து கத்தியால் குத்தியதாக தெரியவருகிறது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அன்னலிங்கம்பிறேம் சங்கர் மரணவிசாரணையை மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் மாலை சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவர் நெல்லியடிபொலிஸில் சரணடைந்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5,23)

## சிந்தனைக்கு விருந்து

### கொடும்நோய்க்கு மருந்து இல்லை

காலினில் விரலில் நாட்பட்ட ரணத்தைக்
கொண்டவர் நீரிழி வுற்றால்
காலையோ அன்றி விரலையோ கழற்றிக்
காக்கலாம் உயிரினைப் பன்னாள்
தூலமாம் உடலின் நோய்களைத் தணித்துச்
சுகம்பெற வழிகளுண்டாயின்
கோலமே வெளியில் தோற்றிடா உளத்தின்
கொடும்பிணி போக்கிடல் அரிதே

தூலம்- (கண்ணுக்குப்) புலனாவது

'பழையவன்'

## இந்தியா-பாகிஸ்தான் இடையே

# அணுவாயுத போருக்கு வாய்ப்பு

# இல்லை என்கிறார் வாஜ்பாய்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் அணுவாயுதப் போருக்கு இடமில்லை என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

எல்லைப்புறங்களிலிருந்து இந்தியா ஒருபோதும் படைகளை விலக்கிக்கொள்ளாதென்றும் எந்த நிலை வந்தாலும் இந்தியப் படைகளால் சவால்களை எதிர்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள இந்தியா விரும்புகிறதென்றும் ஏற்ற சூழல் வரவில்லையென்றும் தெரிவித்தார். (து)

# பிலிப்பைன்ஸில் கடும்புயல் 32 மீனவரை காணவில்லை

(டாக்கா)

பங்களாதேஷின் தென்பகுதியில் வீசிய கடும் புயற்காற்று காரணமாக 32 மீனவர்கள் காணாமற்போயுள்ளனர். இவர்கள் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

90 மைல் வேகத்தில் வீசிய இந்த கடும் புயற்காற்றினால் பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன ஆயிரத்திற்கும் அதிகமானோர் தமதுவீடுகளை இழந்துள்ளனர்.

மீட்புப் பணிகளும், நிவாரணப்பணிகளும் துரித கதியில் இடம் பெற்று வருவதாகவும் காணாமற்போன மீனவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

# வெட்டப்பட்ட நாக்கு மீண்டும் ஒட்டப்பட்டது

(சென்னை)

ஜெயலலிதா மீண்டும் முதல்வர் ஆனதற்காக அவரது ஆதரவாளர் ஒருவர் தனது நாக்கைத் துண்டித்து திருப்பதி கோவில் உண்டியலில்போட்டு காணிக்கை செலுத்தியிருந்தார்.

அவரது நாக்கு மீண்டும் ஒட்டப்பட்டு சிகிச்சை செய்யப் பட்டுள்ளது.

இந் நாக்கைப் பொருத்துவதற்கான செலவுகள் அனைத்தையும் முதல்வர் ஜெயலலிதாவே பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஜெயாவின் ஆதரவாளர் நாக்குத் துண்டித்த சம்பவம் கடந்த 8ஆம் திகதி இடம் பெற்றுள்ளது. (செ)

# உலக தரிசனம்

# ஆப்கானுக்கு 1700 பிரிட்டிஷ் படைகள் முதற்கட்டமாக அனுப்பிவைப்பு

(லண்டன்)

அமெரிக்கப் படையினருடன் இணைந்து ஆப்கானிஸ்தானில் பணியாற்றுவதற்கு ஆயிரத்து 700 பிரிட்டிஷ் கடற்படையினர் நேற்று முன்தினம் ஆப்கானுக்குச் சென்றுளனர்.

தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளுக்குஎதிராக போரிடுவதற்கு பிரிட்டிஷ் படைகளை ஆப்கானுக்கு அனுப்புமாறு அமெரிக்கா உத்தியோக பூர்வமாக பிரிட்டனை கோரியிருந்தது.

இதனை அடுத்தே முதற்கட்டமாக ஆயிரத்து 700 பிரிட்டிஷ் படையினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தலிபான் மற்றும் அல்செய்டா போராளிகளுக்கு எதிரான தாக்குதல்கள் இன்னும் முடிவடையவில்லை என்றும் கலைந்து சென்ற தீவிரவாதிகள் மீண்டும் ஒன்று சேர்ந்து தீவிர தாக்குதல்களில் ஈடுபடலாமெனவும் அமெரிக்கா அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைகருத்தில் கொண்டே பல்வேறு நாடுகளின் படையினரையும் தலிபான்களுக்கு எதிரான போரில் ஈடுபடுத்துவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக நம்பப்படுகிறது. (உ-5)

# ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் தலிபான்களின் முக்கிய தளபதி கைது

(காபூல்

ஆப்கானிஸ்தானின் தென்பகுதி நகரமொன்றில் மறைந்திருந்த தலிபான் இயக்கத்தின் முக்கிய தளபதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆப்கான் இராணுவம் தெரிவித்துள்ளது.

கந்தகார் நகருக்கு50கிலோமீற்றர் தொலைவிலுள்ள தென்பகுதி நகர்ஒன்றிலிருந்த முல்லா ரஹ்மத்துல்லா என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தலிபான் இயக்கத்துடன் சேர்ந்து போராடியபலவெளிநாட்டுப் போராளிகளுக்கு இவர் பொறுப்பாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள முல்லாதீவிரபுலன்விசாரணைகளுக்கு உட்படுதப்பட்டுள்ளதாகவும், இவரது கைதை அடுத்துஇன்னும்பலபோராளிகள் கைது செய்யப்படலாமெனவும் நம்பப்படுகிறது.

வெளிநாட்டு தீவிரவாதிகளுக்குப் பொறுப்பாகஇருந்த முல்லா கைது செய்ப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாடுகளில் தலிபான் போராளிகளது செயற்பாடுகள்தொடர்பாகவும் மேலும் பல தகவல்கள் கிடைக்கலாமென அமெரிக்க அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ-5)

# அரபு உச்சிமாநாட்டில் அரபாத் கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டும்

## இஸ்ரேலிடம் அமெரிக்கா வலியுறுத்து

(வாஷிங்டன்)

பாலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத் மீது விதிக்கப்பட்டிருக்கும் பிரயாணத் தடையை நீக்கி, அரபு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு அமெரிக்கா இஸ்ரேலிடம் வலியுறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிடையே நடைபெற்று வரும் போர்நடவடிக்கைகளை நிறுத்தி, சமாதானத்தைக் கொண்டுவருவது பற்றி அம் மாநாட்டில் ஆராயப்பட வேண்டும் என அரபாத் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரபாத் அம் மாநாட்டில் கலந்துகொள்வது ஆக்க பூர்வமான பலனை தரும் என வெள்ளை மாளிகை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பெய்ருட்டில் நடைபெறவிருக்கும் உச்சி மாநாட்டில் அரபாத் கலந்து கொள்வாரானால், மூன்று மாதங்களிற்கு முன்னர் இஸ்ரேல் அவர் மீது பிரயாணத்தடையை விதித்த பின் முதற்தடவையாக அவர் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். (உ-8)

## யுத்தநிறுத்த அழைப்பை அரசு நிராகரிப்பு

# தீவிரவாதிகள் சரணடையும் வரை எதிர் தாக்குதல் தொடரும்

### பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைத்தளபதி அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அபுஸாயி தீவிர வாதிகள் விடுத்த யுத்த நிறுத்த அழைப்பை பிலிப்பைன்ஸ் அரசு நிராகரித்துள்ளது.

தீவிரவாதிகள் விடுத்துள்ள யுத்த நிறுத்த அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும் என்றும் பிலிப்பைன்ஸ் ஆயுதப் படைகளின் தளபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை, அபுஸாயி தீவிர வாதிகள், அமெரிக்க மிஷனரி தம்பதியர் உட்பட மூன்று பேரை பணயக்கைதிகளாகப் பிடித்துவைத்துள்ளனர்.

பணயக்கைதிகளைநிபந்தனையின் விடுதலை செய்வதுடன், தீவிரவாதிகள் முழுமையாக சரணடையும் வரை அவர்களுக்கு எதிரான போர் தொடரும் என ஆயுதப்படைகளின் தளபதி கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, அபூஸாயி தீவிர வாதிகளை முற்றாக ஒழித்துக்கட்டும் முகமாக அமெரிக்கப்படையினர் பிலிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கி வருவதுடன்,

தீவிரவாதிகள் பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். (உ-5)

## பங்குனி மாத நினைவலைகள்



வண்ணை

## அருளம்பலம் பொன்னம்மா

ஆனந்தக் கூத்தன் ஆடும் ஆட்டத்தினை அன்னை இயற்கையின் பூ இதழ்களில் 'ஆடும் போகேன்விலா? விழாச்கோலம் என்று படுக்கையில் இருந்து பூரிப்பார். ஆண்டுதோறும் வரும் தைப்பொங்கல் மற்றும் கொண்டாட்டங்களில் (முன்னர்) ஆவலோடு பட்டாஸ் கொளுத்த நாம் காத்திருக்கும் போதெல்லாம் ஆகாதவற்றை செய்யாதீர், ஆகாயத்தை அசுத்தமாக்காதீர் ஆனாலும் பூந்திரியாவது(நாம்) சுழற்ற அவர் பொறுத்துவிடுவார். ஆடிப்பாடி நாம்கூட்டிக் குவிக்கும் குப்பைகளையோ எரிப்பது நன்றன்று, புதைப்போமென்பார். ஏன் அப்படி என்று நாம் வினவினால் எரியும் போது குப்பையுடன் சேர்ந்து மண்புழுக்களும் மண்ணிலுள்ள கண்ணுக்குத் தெரியாத உயிரெல்லாமே எரிந்து விடும் என்பார் கவலையோடு, தனியே இருக்கும் போது தற்பாதுகாப்பிற்காக துவக்கு முதன்முறை ஏந்தியபொழுது, சிவன தனயனே தவறுதலாகவேனும் காக்கை ஒன்றைக் கூட இதனால் ஒருபோதும்என்னால் வீழ்த்த விடாதீர் என்று வேண்டினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில்
பிறந்த இவ்வம்மையாருக்கு,
இருபதாம் நூற்றாண்டு மத்தியின் பின்
உருவெடுத்த சூழல் மாசுறல் பற்றி
யார் புகட்டினார்?
ஆங்கிலம், கணிதம் தாவரவியல் மட்டுமல்லாது
கோலாட்டம், கும்மி, பலே (Ballet)
கற்பித்து பின்னர்,
இறைவனடி சேர்ந்தார்
நிறை தொண்ணூறு வயதில்
இருபத்தேழு பங்குனி எண்பத்தெட்டில்.

**வண்ணை நவமணி செல்வராஜா**

57, அரசடி வீதி.
யாழ்ப்பாணம். (4864)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

-குறள்

## வலம்புரி

### ஐ.நா வில் புலிக்கொடி

சுவிஸின் தலைநகர் ஜெனிவாவிலுள்ள ஐ.நா சபையின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தமிழ்க் குரல்கள் வான் முழங்கியுள்ளது. உலகின் பல பாகங்களிலும் உள்ள ஈழத் தமிழர்கள் ஓரணியில் ஒன்று திரண்டு விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை வலியுறுத்தியதுடன் புலிக் கொடியையும் ஐ. நா சபையின் மைதானத்தில் - உலக நாடுகளின்தேசியக்கொடிகளுக்கு இணையாக ஏற்றி வைத்துள்ளனர்.

கடந்த இருபதுவருடங்களுக்கு முன்னர் ஐ. நா சபைக்குள் நுழைந்த ஈழத்தமிழரான வைகுந்தவாசன் தமிழர்களின் சுதந்திரமுடக்கம்குறித்து முழககமிட்டார். அனறு அவரின் துணிவு உலகத தலைவர்களை ஒருகணம் நிலை குலையச் செய்த தெனினும அவரின் உரை குறிதது ஐ.நா சபை ஆகக பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது துரதிஷ்டவசமானது.

அதன் விளைவேநேற்று முனதினம் ஐ.நா சபையன் முன்னால இடம் பெற்ற ஈழத தமிழ மக்கள்ின மாபெரும் பேரணியாகும்.

உலகுவாழ் ஈழத் தமிழ் மக்கள் ஒன்றிணைநது நிற்பது தமிழாகளின் வரலாறறில் பெரியதொரு மாறறமாகும். புலிகளின தலைவர் பிரபாகரனின் உருவப்படம் உலகுவாழ் ஈழத தமிழ் மககளால ஜெனிவா நகரத்தில் ஏந்திச செலலபபட்ட தெனில் தமிழீழத்தில் மட்டுமல்ல உலகுவாழ் அனைத்துத் தமிழ மககளும் தமது ஏகதலைவனாகப் பிரபாகரனை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனபதை உலகிற்கு உணர்ததியுள்ளது.

ஐ.நா சபையின்மைதானததில் திரணட ஈழத் தமிழர்கள் தலைவர் பிரபாவின உருவப்படத்தைத் தாங்கியவாறு நின்றனரெனில் தமிழினம் ஓர் தலைவனின்கீழ் ஓரணியில் ஒன்று திரண்டுவிட்டதென்பதே அதன் பொருளாகும். தமிழனுக்கு நாடில்லை என்றகுரல் ஓங்கி இன்று ஐ.நா சபைக்கு முன்னே புலிக்கொடியும் பறந்ததெனில் தமிழன் உலகில் ஒரு படி உயர்ந்து விட்டான் என்பது உறுதியாகிறது.

# ஆடல், பாடல்களிற் சிறந்து விளங்கிய மாதவி

# கற்பெனும் திண்மை பெற்ற மாதருலகமணி

**வ. மகாலிங்கம்**

கற்பின் மறுபெயர் கண்ணகி என்று தமிழர் நாட்டில் கருதப்படுகிறது. கற்புத் தெய்வமென்று கண்ணகிக்குக் கலைவிழா எடுக்கிறார்கள். மாதவி என்னும் பெயரில் மாசு மலிந்துள்ளதாக ஒரு தவறான எண்ணம் நிலவுகிறது. இதன் காரணமாகப் பிற்கால நாடகாசிரியர், நாழிகைக்கொரு நாயகனைத் தேடி நடமாடும் நாசகாரியாக மாதவியைப் பொது மக்களுக்குக் காட்டி, அவளுடைய சிறந்தபண்புகளைத் திரையிட்டு மறைந்து விட்டது தான். ஆனால் இளங்கோவடிகள் ஈந்த இன்பக் காவியத்தில் மாதவி எழிலரசியாகவும், ஆடலரசியாகவும் காட்சி அளிக்கிறாள். 'கற்பு என்பதைப் பெண்மையின் உரைகல்லாகக் கொண்டு மாதவியின் பண்பு நலன்களை ஆராயுமிடத்து, கண்ணகியின் கற்பிலும் மாதவியின் கற்பு குறைந்ததல்ல என்னும் உண்மை புலனாகும்.

ஆடல் பாடல் முதலாய கலைகளில் ஏழு ஆண்டுகள் பயின்று, சோழ மன்னனின் அவையில் பரிசில் பெற்றவள் மாதவி. ஆடலிலும் பாடலிலும் அக்காலத் தமிழ் நாட்டு வேத்தியல், பொதுவியல் இரண்டிலும் தன்னிகரற்று விளங்கியவள் மாதவி. ஆனால் மாசற்ற மனமுடையவளாக வாழ்ந்தும், கணிகையர் குலத்துப் பிறந்தாள் என்ற காரணத்துக்காக மாதவிக்கு அக்காலச் சமுதாயம் மதிப்புக் கொடுக்கவில்லை. சமுதாயம் தனி மனிதனின் பண்புகளை மாற்றியமைக்கிறது. வேசியரை வெறுத்த, சமுதாயம், வேசியரின் வேட்கையால் உந்தப்பட்டு, ஒழுக்கத்திற் தவறும் பணம்படைத்தோரைக் கட்டுப்படுத்தவில்லை. அன்றைய தமிழ் நாட்டில் அரசருக்கு அடுத்தபடியில், பணம் படைத்தோரும் ஆதிக்கம் செலுத்துவோருமாகிய, வணிகர் இருந்தனர். வணிகர் குலத்திற் பிறந்த கோவலன் கலைஞன் என்று கருதப்படாவிடினும், கலாநுட்பங்களைச் சுவைத்து மகிழும் பண்பு வாய்ந்தவன் என்று கூறலாம். கலை, மனத்தை நெகிழ்வித்து, புலன்களை நுண்மைப்படுத்தி அறிவை அதன் உரிமையான பீடத்தினின்றும் அகற்றி, அப்பீடத்தைப் புலன்களுக்கு வழங்குவது. இவ்வுண்மையின் ஒளியில் கோவலன்-மாதவி தொடர்பை ஆராயின், அத்தொடர்பு மன்னிக்கப்படக் கூடியதாகத் தெரியும். கலை இருவருக்கும் தொடர்பை ஏற்படுத்தியது மட்டுமன்றி அத்தொடர்பை அதிக காலம் நீடிக்கவும் செய்தது. கண்ணகியுடன் வாழ்ந்ததிலும் பார்க்க, மாதவியுடன் கோவலன் அதிக காலம் வாழ்ந்தான். மாதவியும் தன் வாழ்வுமுழுவதும் ஒரே நெறியான மனத்துடன் வாழ்ந்தாள். கணவனை தெய்வமெனக் கருதினாள்.

மாதவியின் அணைப்பிலிருந்து கோவலனை 'விதி' பிரித்து விட்டது. கற்பரசி மாதவியைக் காமக் கன்னியென்று கருதிக் கோவலன் பிரிந்தான். ஆனால் அப்பிரிவை;

''வசந்தமாலைவாய்
மாதவி கேட்டுப்
பசந்த மேனியள் படர்
நோயுற்று
நெடுநிலை மாடத்து இடை
நிலத்து ஆங்கோர்
படைஅமை சேக்கைப்
பள்ளியுள் வீழ்கிறாள்''

மேலும், பிரிந்த காதலனைப் பின்தொடர்ந்து, தன் உள்ளத்தைத் திறந்து தீட்டப்பட்ட ஓர் ஓலையை,

''கண் மணியனையாற்குக்
காட்டுக என்றே
மண்ணுடை முடங்கல்
மாதவி ஈந்ததும்''
(புறஞ்சேரி)

''காதலன் உற்ற கடுந்
துயர் கேட்டுப்
போதல் செய்யா
உயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப்
பொருளுரை இழந்து
நற்றொடி நங்காய்
நாணுத் துறந்தேன்''
(மணிமேகலை)

என்று கூறுவதும், மாதவியின் சீரிய ஒழுக்கத்தையும், செம்மையான மனப்பான்மையையும் சித்திரித்துக்காட்டுகிறது. கண்ணகியிடம் காணாத சில பண்புகளைக் கோவலன் மாதவியிடம் கண்டான். மாதவியிடம் வாழும் காலத்தில், 'நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம் நுண்ணிடைப் பெண்ணொருத்தி 'பணியிலே' என்றபாரதியின் கூற்றுப்போல, அந்தணன் ஒருவனை ஒரு யானையின் பிடியினின்றும், கோவலன் விடுவித்தான். மாதவியுடன் வாழ்ந்த காலத்தில் துன்பத்தின் சாயலையே கோவலன் காணவில்லையென்றால் அதற்கு முக்கிய காரணம் மாதவியே. 'கானல் வரி' பாடியமாதவி, வேறொருவன் மேல் காமுற்றுப் பாடுகிறாள் எனத் தவறாக எண்ணிக் கோவலன் கண்ணகியிடம் சேருகிறான், அப்பொழுதும் மாதவி கோவலன் மேல் வைத்த அன்பு அணுவளவாவது குறையவில்லை. குறைந்திருப்பின் 'கண்மணியனையான்' என்று தான் எழுதிய ஓலையில்கூறியிருக்கமாட்டாள். தனது மாசற்றஅன்பை நிராகரித்து விட்டு, கண்ணகியுடன் கோவலன் வேறூர் சென்றான் என்னும் செய்தியைச் செவியுற்ற மாதவியின் காதல், பக்தி கலந்த அன்பாக மாறுகிறது. தன் முதலாவது ஓலையில் 'கண்மணி' என்று அழைத்தவள் இரண்டாவது ஓலையில் பக்தியுடன்வேண்டுகிறாள்.

'அடிகள் முன்னர் யானடி
வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்
கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியும்குலப்
பிறப் பாட்டியோ
டிரவிடைக்கழிதற் கென்
பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடிதல்
வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரை
யோய் போற்றி'
(-புறஞ்சேரியிறுத்த காதை)

இவ் வோலையை ஒரு மனைவி கணவனுக்குத் தீட்டலாம். ஒரு மாணவன் ஆசிரியருக்குத் தீட்டலாம். ஒரு தனையன் தந்தைக்குத் தீட்டலாம். இவ்வோலையைப் பெற்ற கோவலன், எவ்வித மாற்றமும் செய்யாது தனது தந்தைக்கு அனுப்பி வைக்கிறானென்றால், மாதவியின் அறிவு மேம்பாட்டை விளக்க வேறு உதாரணம் வேண்டியதில்லை. கோவலனைப்பிரிந்த மாதவி இன்னொருவனுடன் வாழ்க்கைநடத்தியிருக்கலாம். அவள் அவ்வாறு செய்திருப்பினும் அக்காலத்துச் சமுதாயம் அவளைக் கண்டித்திருக்கமுடியாது. ஆனால் மாதவி 'கற்பெனும்திண்மையுண்டாகப்' பெற்ற மாதருலகமணி.

இளங்கோவடிகள் சித்திரிக்கும் மாதவி மாசற்றவள். மாதர் குலத்தின் மாணிக்கமெனக் கொண்டாடக் கூடியவள். எந்தக் கணிகையர்குலத்திற் பிறந்தாளோ, எந்தக் குலத்திற் பிறந்ததற்காகக் கேடர் சமுதாயத்தின் மூடச் சட்டங்களால் ஒதுக்கப்பட்டாளோ, அந்தக குலத்திலே கற்புநெறி தவறாது வாழ்ந்தது மட்டுமன்றி, அந்தச் சீர் கெட்டகுலத்தை வேரொடு சாய்க்கச் சீறிட்டெழுந்து போரும்புரிந்தாள். கோவலன் பிரிந்ததும் கோலாகல வாழ்வை உதறித் தள்ளி பௌத்த சமயத்தின் அன்புக் கரங்களில் துறவியாகச் சரணமடைந்தாள். பொருளாதார மேடுபள்ளங்கள் நிறைந்த பொல்லாத சமுதாயத்தில்கற்புடைமகளிர் கண்ணியமாக வாழ முடியாதென்று தீர்மானித்துத் தன் மகள் மணிமேகலையையும், பருவத்துடிப்புகளாற் பந்தாடப்படக் கூடிய பருவத்தில் துறவியாக்கித் தமிழ் நாட்டுக்கு புனிதமான இன்னொரு காவியத்தையும் ஈந்தாள். மாதவிக்கு இலக்கிய உலகில் மட்டுமன்றி மாதர் மன்றத்திலும்மதிப்புக் கொடுக்க வேண்டும்.

நன்றி
இளங்கதிர்

### திருக்குளிர்த்தி வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளிகோவிலில் நாளை வியாழக்கிழமை திருக்குளிர்த்தி வைபவம் நடைபெறவுள்ளது.

(செ-124)

## தினசரி தியானம்

### உபரதி

வாதுக்குவந்தெதிர்த்தமல்லரைப் போல்பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே.

-தாயுமானவர்

குணம் குறியெல்லாம் கடந்த பேருணர்வே, கூத்தாடும் எனது மனது குவலயத்தின் கூத்தைப் பார்த்துப் பாராமுகமாயிருக்கக் கற்றுக் கொள்வதாகுக.

கேடுகளைக் கண்டு சோர்வடைகின்றவன், ஆவல் கொள்கின்றவன், தொந்தரவடைகின்றவன், எரிச்சல் எழப்பெறுபவன் அக்கேடுகளைக் களைய மாட்டான். எரியும் தீயில் எண்ணெய் வார்த்தாற் போன்று அவன் இன்னும் அதிகக் கேடுகளில் உழல்வான். ஆனால் சஞ்சலப்படாத மனதின்முன் சிறுமைகளும் கேடுகளும் தமது வலிவை இழக்கின்றன. எதற்கும் அசையாது மனது உபரதி பெற்றிருப்பதே கேட்டைக் களைதற்கு உற்ற உபாயம்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (43)

**புனித வாரம் (ஊதா)**

**திபா 69:8-10, 21-22,31,33-34**

**"உமது பேரன்பின் பெருக்கினால் எனக்குப் பதில் மொழி தாரும்"**


இயேசுவின் மரணத்திற்கு யூதாசு காரணமல்ல! மானிடமகன் மாந்தர் அனைவரின் விடுதலைக்காகத் தம்முயிரை விலையாகத் தரவேண்டும் என்பது மறைநூல்வாக்கு. இந்த மறைநூல் வாக்கு நிறைவேறா விட்டால் மனித இனத்தின் மாண்பு மண்ணுக்குள் புதைந்திருக்கும். மாட்சிபெற்று உயிர்த்திருக்காது! ஆனால் பாத்திரத்தில் இயேசுவோடு தொட்டு உண்ணும் யூதாஸ். இயேசுவின் நம்பிக்கையைப் பெற்ற தோழன், சீடன், நண்பன் எனும் விலைமதிப்பற்ற மாண்பை இழந்து போகிறார்! இயேசுவைக் காட்டிக் கொடுத்தால் என்ன தருவீர்கள்? ஏன் தன் உயிர் நண்பருக்கு, தன் குருவுக்கு, விலைபேசிய செய்தி மனித வரலாற்றிலே மாபெரும் கறுப்புச் செய்தியோ எனவேதான் ''அம்மனிதன் பிறவாதிருந்தால் நலமயிருக்கும்'' என்று இயேசு வேதனைப்படுகிறார்.

ஒவ்வொரு முறையும் நற்கருணைப் பந்தியில் இயேசுவின் பாத்திரத்தில் தொட்டு உண்ணும் நாம் நமது வாழ்வுச் சூழலில், இயேசுவை விலை பேசுகிறோமா? என்று கேட்க வேண்டியது அவசியமன்றோ?!

காவலன்

மானிப்பாயில் ஆடைத்தேவைகளுக்கு ஓர் புதிய அறிமுகம்


## நந்தா புடவையகம் & பான்சி ஹவுஸ்



ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ரெடிமெட் ஆடைகள்
சாறிவகைகள்
சல்வார்கமிஸ்
ஜீன்ஸ் துணிகள்
துணிவகைகள்
அழகுசாதனப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

நந்தா புடவையகம் & பான்சி ஹவுஸ்
யாழ்.வீதி. மானிப்பாய்.
C/3769

ஐ.நா.சபைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஈழத் தமிழர்கள் தலைவர் பிரபாகரனின் படத்தை தாங்கிய வாறு நிற்பதைப் படத்தில் காணலாம்


## KINGS ELECTRONICS

ஒரு வருட உத்தரவாதத்துடன்

Pentium III, Pentium IV Computer's Deskjet Printer, Laserjet Printer, CD-ROM, CD Writer, Capture Card, Scanner, Digital Camera, Empty Cds and all type of Computer Accessories.

புதிய பாடல்கள்
ஜெமினி, ஸ்ரீ, சாமுராய், ஐலவ்யூடா, ரோஜாக் கூட்டம்

| | |
|---|---|
| சார்லி சாப்லின், கன்னத்தில் முத்தமிட்டால்.... | 225/= |
| பார்த்தாலே பரவசம், மனதைதிருடிவிட்டாய்..... | 200/= |
| Remix பாடல்கள் | 150/= |
| இடைக்கால பாடல்கள் | 100/= |

மற்றும் பக்திப்பாடல்கள், VCD Songs,

T.V, VHSடெக், VCDடெக், MP3 டெக், மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை

No 64, Stanley Road, Jaffna

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.




## வடபகுதியிலே எங்குமே பார்த்திராத மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

(பூங்கன்றுகளும் கனிமரங்களும் பூங்கனிச் சோலை)

இம் மாதம் 29ம், 30ம், 31ம் (வெள்ளி, சனி, ஞாயிறு) திகதிகளில் காலை 8 மணிமுதல் இரவு 10மணிவரை எமது தாயகத்திலே எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் வடிவமைக்கப்பட்ட பசுமையான இயற்கை எழில் நிறைந்த கண்ணைக்கவரும் காட்சிகளுடன் பூங்கனிப் பூங்கா அமைந்துள்ளது.

### காட்சிகள்

இராட்சத மலையில் இருந்து நீர்வீழ்ச்சி.
பேசும் கிளி
பிறையின் பின் சுழலும் நட்சத்திரங்கள்
பொறிமுறை உயர்த்தி
மலைக்குகை
தண்ணீர் சிந்தும் பொம்மை
பல்லினப் பறவைகள்
பல வர்ண மீன்கள்
இராட்டினங்கள்
சொகுசு ஊஞ்சல்



இரண்டு தட்டு சுழல் இராட்டினம்
டைனோசர்
சுழல்குடை
பசும்புற்றரைகள்
புல்மேடைகள்
பலவித தண்ணீர்த் தொட்டிகள்
தாமரைத் தடாகத்தினுள் தண்ணீர் சிந்தி
பலவர்ணக் கூம்புகள்
பலவர்ண மின்குமிழ் பூம்பந்தல்

பிரவேசம்: ரூபா 10
சிறுவர்களுக்கு மட்டும் இலவசம்

எமது தாயகத்தில் உள்ள உள்ளூர்வளங்களைக் கொண்டு மேலைத்தேய காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள பூங்கனிச் சோலையின் எழிலை கண்டு களித்து மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- எமது புகைப்படப்பிடிப்பாளரால் புகைப்படம் எடுத்துக்கொள்ளக் கண்காட்சி நாட்களில் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன (3 நாள்களில் படம் வழங்கப்படும்)

வீடியோ புகைப்படப்பிடிப்பாளர் கவனத்திற்கு எதிர்வரும் 29ம், 30ம், 31ம் திகதிகளில் வீடியோ மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்புக்களைத் தவிர்த்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எம்மிடம் விற்பனைக்குள்ள பூங்கன்றுகள் பலவர்ண றோஜாச் செடிகள் பல இன செவ்வரத்தை, பல இனக்குறோட்டன், சைபிறஸ், அரக்கேரியா, சிவப்பு, வெள்ளை றோஸ் மொசந்தாஸ், அந்தூரியம் அஸ்பரஸ், எவகிறீன் மற்றும் பல

விற்பனைக்குள்ள கனிமரங்கள்
நல்லின எலுமிச்சை தோடை, மினி எலுமிச்சை ஜம்பு நாவல் மற்றும் பல பயன்தரு கனிமரங்கள்

முடமாவடி,
திருநெல்வேலி
T.P:-2976


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

பக்கங்கள் - 16

# சங்கு நாதம்


Sankunatham

சங்கு:~ 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி:~ 13 புதன்கிழமை (27.03.2002) தொலை பேசி 3378 நாதம்:~ 05

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## இந்தியாவின் மௌனம் தொடர்ந்தால்


# பலாலி படைத்தளம் அமெரிக்காவிடம்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# இந்தியாவின் மௌனம் தொடர்ந்தால்......

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தொடர்ந்தும் மௌனத்தையே கடைப்பிடித்து வருகிறது. அமைதிப்படை என்ற போர்வையில் இந்தியப் படைகள் இலங்கைக்குள் புகுந்து அமளிப்படையாக மாறிய



## பலாலி படைத்தளம்

தன் விளைவே இந்தியாவின் மௌனத்திற்குக் காரணம் காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் அரசியல் அனுபவமும் காலஞ்சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் அனுபவமின்மையும் இன்றைய சூழ்நிலைக்குக் காரணம் என்பதையும் மறந்து விட முடியாது.

இலங்கையின் இன விவகாரத்தில் அவசர முடிவை ராஜீவ் காந்தி எடுத்ததன் மூலம் அமைதிப்படையினர் ஆயிரக்கணக்கில் உயிரிழந்து போனதும், உலக அரங்கில் இந்தியா தனக்கு அவப்பெயரைச் சூடிக் கொண்டதும் தேவையற்ற விவகாரங்கள் என்பது இந்திய அரசியல் வாதிகளின் கருத்து

### இந்தியாவின் ஆட்சிமாற்றம்

ராஜீவ் காந்திக்கு நேர்ந்த கதிக்குப் பழிவாங்க வேண்டு

**விதுரன்**

மென்பது இந்திராகாங்கிரசின் நிலைப்பாடு, ஆனால் அதற்கு இந்திய மக்கள் இடம் தரவில்லை. ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின் நேரு குடும்பத்தின் ஆளுகை முடிவுக்கு வந்து விட்டது. இந்தியாவில் நேரு குடும்பத்தின் அவல மரணங்களோடு தனிக்கட்சி ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டதை அடுத்து ''கூட்டாட்சி'' என்பதே சாத்தியமாயிற்று, கூட்டாட்சி பாரதத்தில் சாத்தியமான போது இலங்கை இன விவகாரம் குறித்தும், தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்தும் ஓர் ஸ்திரமான கொள்கை எடுக்கப்பட்டது. அதாவது இலங்கைத் தமிழர்களின்



இன விவகாரத்திலோ அன்றி விடுதலைப் புலிகளின் விவகா

ரத்திலோ எவ்வகையிலும் தலையிடுவதில்லை என்பதே அதுவாகும்.

இது இந்தியாவின் பிரதமராக இருந்த ஐ.கே. குஜ்ரால் கொழும்பு வந்த பொழுது பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு வழங்கிய பதில் சான்றாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடாதா? என்பதே பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வியாகும். இதற்கு இந்தியா

மீண்டுமொரு முறை நெருப்பில் கை வைக்க விரும்பவில்லை என்பது குஜ்ராலின் பதிலாக அமைந்திருந்தது.

ஐ.கே. குஜ்ரால் அளித்த பதில் அவரின் தனிப்பட்ட பதிலன்று பாரததேசத்தின் ஒட்டுமொத்தமான பதில் அதிலிருந்து வாஜ்பாயின் பாரதீய ஜனதாக் கட்சியும் இம்மியும் விலகவில்லை. நடப்பவைகளை பார்ப்போம் என்பதும், இலங்கை இனவிவகாரத்தை எவராலும் தீர்க்க முடியாது என்பதும் இந்தியாவின் அடிப்படைக் கருத்தாக இருந்து வருகிறது.

### அமெரிக்காவின் கழுகுப்பார்வை

இலங்கையில் தனது அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் நீண்ட காலஆசை அதை நிறைவேற்றுவதற்கு தடையாக இந்தியாவே இருந்தது. ஆனால் அமெரிக்காவின் மீது இடம் பெற்ற விமானத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை, அடுத்து பாகிஸ்தான் மீது தனது பழியைத் தீர்க்கவேண்டு மெனக்காத்திருந்த இந்தியா அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டது. அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு இறுக்கமானதல்ல எனினும் இருதரப்பும் தத்தம் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சந்தர்ப்பவசத்தால் சேர்ந்த கூட்டாகும். ஜே. ஆர். ஜெயவர்த்தனா ராஜீவ் காந்தியை எப்படிப் பயன்படுத்தினாரோ அதே போல இந்தியா அமெரிக்காவைப் பயன் படுத்தும் ஓர் தந்திரமே இரு நாட்டுக்குமான உறவாகும் எனினும் முன்னீனயதில் ராஜீவ் காந்திக்கு இலங்கை மீதான தலையீட்டில் உள்ளார்ந்தமான நோக்கம் இல்லை ஆனால் அமெரிக்காவுக்கு, இலங்கைக்குள் நுழைவது இலக்காக உள்ளது.

### இந்தியாவின் மௌனம் கலைய வேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா மௌனமாக இருக்குமாயின் அதன் விளைவு அமெரிக்காவின் தலையீடாக இருக்கும், ஏனெனில் அமெரிக்காவை வைத்துக் கொண்டே விடுதலைப்புலிகளின் போராட்டத்திறனை அடக்க முடியு மென்பது புதிய அரசின் முடிவு அதற்கு ஏதுவாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி வருகிறார்.

அமெரிக்கா இலங்கைக்குள் வருவதைத் தடுக்கும் தகுதி இந்தியாவுக்கு மட்டுமே உண்டு. ஆனால் இந்தியா மௌனமாக இருப்பதால் அமெரிக்காவின் ஊடுருவல் சாத்தியப்படும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

### இந்தியாவே மத்திய இடம்

இனப்பிரச்சினை குறித்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை இந்தியாவில் நடத்த வேண்டுமென்பது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு புலிகளின் அந்நிலைப்பாட்டில் நிறைந்த அர்த்தமுண்டு. அண்டைநாடான இந்தியாவில் நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சு நடத்தப்படுமாயின், திம்புக் கோட்பாடு- இலங்கை இந்திய ஒப்பந்தங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியும். அரசு - புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இந்தியாவில் நடைபெறுமாயின் அமெரிக்காவின் ஊடுருவல் தானாகவே தடுக்கப்பட்டு விடும். இல்லையேல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சர்வதேச கண்காணிப்புக் குழுவிற்கு மேலாக அமெரிக்காவே கண்காணிக்கும். அமெரிக்காவின் கண்காணிப்பு அரசுக்கு சாதகமாக அமையுமே யொழிய தமிழ் மக்களுக்கு ஒரு போதும் நியாயமானதாக அமையாது.

### இந்தியவிற்கும் ஆபத்தாக அமையும்

விடுதலைப்புலிகளை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாதென்ற இந்தியாவின் முடிவு ராஜீவ் காந்தியை மையமாக வைத்து எடுக்கப்பட்டதாயினும் கடந்த காலச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால முடிவுகளை தீர்மானிப்பது எல்லா இடத்திலும் பொருந்துமென நினைப்பது தவறாகும். அத்தகையதொரு தவறான முடிவையே இந்தியா, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

அண்டை நாடான இந்தியா நமக்கேன் வீண்வம்பு எனக் கருதுமாயின் அஃது அந்நாட்டின் இறைமையைப் பெரிதும் பாதிக்கும் என்பதும் இங்கு நோக்குதற்குரியதாகும்.

### பலாலிப் படைத்தளத்தில் அமெரிக்கப் படையினர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த 14ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த போது அதற்கு அமைவாக அமெரிக்காவின் தென்கிழக்காசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் வருகை தந்திருந்தார். பிரதமர் ரணிலை மட்டும் அவர் சந்திப்பதற்காக இருந்தால் கொழும்பில் பிரதமரின் அலுவலகத்தில் சந்தித்திருப்பதே உசிதமானதாக இருந்திருக்கும். மாறாக பலாலி படைத்தளத்தில் அமெரிக்கப் படைகளுடன் வருகை தந்து பிரதமர் ரணிலை அமெரிக்க அமைச்சர் சந்தித்துள்ளாரெனில் அதற்குள் உள்ளார்ந்தமான பல விடயங்கள் இருக்கின்றன என்பதை எவரும் மறந்து விடலாகாது.

### பிரதமர் ரணிலின் அபாரத் துணிச்சல்

விடுதலைப் புலிகளுடன் பிரதமர் ரணில் செய்து கொண்ட ஒப்பந்தம் இலங்கை அரசியலில், முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாக விளங்குகிறது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறியுள்ளார். அவ்வகையில் இனயுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தீர்வு காண்பதாக அமைகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு கடற்பரப்பில் புலிகளும் கடற் படையினரும் மோதியதுண்டு.

புலிகளுக்கு கடலினூடாக ஆயுதம் எடுத்துச் செல்லப்படுவதாகப் பிரதமர் ரணிலிடம் பேரினவாதிகளால் கூறப்பட்டதும் தெரிந்ததை ஆனால் அது பற்றி பிரதமர் ரணில் அலட்டிக் கொள்ளவில்லை, அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம் அதில் ஒன்று:-



சமாதானத்தீர்வு காண்பதெனப் புறப்பட்ட பின்பு இவற்றுக் கெல்லாம் செவிசாய்த்தால் சமாதான இலக்கை அடைய முடியாது இத்தகைய மோதல்களும் முறைப்பாடுகளும் இடையிடையே வரவே செய்யும் நாம் நிதானமாக நடந்து கொண்டால், மக்களுக்கு அளித்த வாக்குறுதியை - சமாதானத்தீர்வை எட்ட முடியும் என்ற உறுதியான நம்பிக்கையில் பிரதமர் இருந்திருக்கலாம். அல்லது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீறினால் அதனை அமெரிக்கா பார்த்துக் கொள்ளும் உன்னால் இயன்ற வரை சமாதான முயற்சியை முன்னெடுத்துக்கொள் அதற்கு விடுதலைப்புலிகள். இணங்கா விட்டால் மிகுதியை நான் பார்த்துக் கொள்கிறேன் என அமெரிக்கா பிரதமர் ரணிலுக்கு வழங்கிய உத்தரவாதம் காரண மாகவும் ரணில் நிதானமாக இருந்திருக்கலாம்.

### பலாலி படைத்தளம் அமெரிக்காவிடம்?

விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்பது உலகறிந்த உண்மை. அதேவேளை புலிகளுடன் பேச்சு நடத்தி அரசுக்கு

## அமெரிக்காவிடம்

றைத் தீர்வுகள் கொடுத்து விடுதலைப்புலிகளைச் சமாளித்து விட முடியாதென்பதும் அரசுக்கு நன்கு தெரியும். இந் நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதாயின் அவர்கள் மீது விதிக்கப்பட்டதடையை நீக்குவது அரசின் முதற் பணியாக இருக்க வேண்டும் அத்தோடு வடக்குக் கிழக்கில் படையினரை வைத்துக் கொண்டு சமாதானக் தீர்வு

என்பது சாத்தியபடாது. எனவே படை யினர் எங்கோ ஓர் இடத்தில் முடங்க வேண்டும் முடக்கப்பட வேண்டும் அவ்வாறு படையினர் குறித்த ஓர் இடத்தில் முடங்குவார்களாயின் அதன் பின்பான இலங்கையின் வடக்கு கிழக்கு சார்ந்த இறைமை எப்படி அமையும் என்ற எதிர் நோக்கு அரசிடம் இருக்கவே செய்யும் எனவே இவையெல்லாவற்றிற்கும் தீர்வு காண்பதாக இருந்

**குருஷேத்திரம்**

தால் பலாலி படைத்தளத்தை அமெரிக்காவிடம் ஒப்படைத்து விடுவதே ஒரே வழியென்ற கருத்து பிரதமர் ரணில் தலைமையிலான அரசியல் நிலவுகிறது. அமெரிக்காவிடம் பலாலி படைத்தளத்தை ஒப்படைத்து விட்டால் வடக்குக் கிழக்குப் பிராந்தியமும் அமெரிக்காவின் கண்காணிப்பிற்குள் இருக்கு

மென்பதும் அரசின் மற்றொரு நம்பிக்கை இதற்கு இந்தியாவின் மௌனமும் சாதகமாக இருப்பதால் பலாலிப் படைத்தளம் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படும் சாத்தியம் உண்டு. இதனை அமெரிக்க அமைச்சர் மற்றும் படை அதிகாரிகளின் பலாலி விஜயம் உறுதிப்படுத்துவதாக அமையும்.


யாழ் இலக்கிய வட்டம்
நடாத்தும்
ஈழத்து மூத்த எழுத்தாளர்
'வரதர் பவள விழா'

28 - 03 - 02 வியாழன் (போயா) காலை 9.30 மணிக்கு
நல்லை ஆதீன கலா மண்டபத்தில்

தலைவர் : கலாநிதி, க. குணராசா (செங்கைஆழியான்)

வாழ்த்துரைகள் :
✧ நல்லை ஆதினம் ✧ தென்னிந்திய திருச்சபை
✧ மாவை ஆதினம் ✧ துர்க்கை அம்மன் தேவஸ்தானம்

கௌரவிப்புரை : கலாநிதி, க. சொக்கலிங்கம் (சொக்கன்)

பொன்னாடைபோர்த்தி. வாழ்த்துதல் :
துணைவேந்தர், பொ. பாலசுந்தரம்பிள்ளை

- இயற்றமிழ் வாழ்த்துக்கள்
- இசைத்தமிழ் வாழ்த்துக்கள்
- தேனீர் விருந்துபசாரம்
- சபையோர் கௌரவிப்பு
- நட்புரை வாழ்த்துக்கள்

நூல்கள் வெளியீடு:
I. ஈழத்துச் சிறுகதை வரலாறு
(பவளவிழா நினைவு வெளியீடு - "செங்கை ஆழியான்")
வெளியீட்டுரை : கலாநிதி. எஸ். சிவலிங்கராசா
II. பவள விழா மலர் :
வெளியீட்டுரை : புத்தொளி ந. சிவபாதம், ஜே.பி.

ஆறு தசாப்தங்களாகத் தமிழிலக்கியத்துக்கு சேவை செய்து வரும் எங்கள் மூத்த எழுத்தாளரைக் கௌரவிக்க வருகை தருமாறு இலக்கிய ஆர்வலர்களையும் அன்பர்களையும் அழைக்கிறோம்.

- யாழ் இலக்கிய வட்டம்

# கவிக்குயில் காதலித்த இசைக்குயில்

இலக்கிய நயம்

கலாநிதி க.சொக்கலிங்கம்

காக்கை குருவி எங்கள் சாதி நீள்கடலும் மலையும் எங்கள் கூடடம்'' என்றும் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா உன்றன் கரிய நிறம் தோன்றுதையே'' நந்தலாலா என்றும் காகத்தையும் குருவியையும் கண்டு களியாட்டம் கொண்டு ஆடிப்பாடியவன் பாரதி. அவன் வேதாந்தி. பிரபஞ்சம் அனைத்துமே பரம்பொருள் என்பது உண்மையானால் காகம் மட்டுமென்ன? அழுக்கில் நெளியும் பூச்சி புழுக்களையும் சமத்துவ நோக்கில் கண்டு உறவு கொள்வது அவனுக்குக் கடினமன்று.

'ஆன்ற தமிழ்ப்புலவர் கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?

என்ற தனது உள்ளார்ந்த வேட்கையைப் புலப்படுத்திப் பாரதி பாடியது குயிற்பாட்டு. கருமையும் அழகின்மையும் பொதிந்த பறவை ஒன்றின் தேனமுதத் தீம்பாட்டிலே அவன் அடைந்த தன்வயமிழந்த மெய்ம்மறதியே குயிற்பாட்டாக விரிந்தது.

"பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைங்கனவின் நிகழ்ச்சியிலே''

அவன் கண்டமானதக்காட்சி, தமிழில் இன்று வரை வெளிவந்துள்ள கதைப் பாடல்களிலே தன்னிகரற்று விளங்குகின்றது என்று தயங்காது கூறலாம்.

பாரதியின் புனை பெயருள் ஒன்று 'ஷெல்லிதாசன்' என்பது. ஆங்கிலக் கவிஞரிலே அவன் உள்ளங் கவர்ந்த பெருங்கவிஞன் ஷெல்லி. பாரதி போலவே மனித இனம் யாவும் விட்டு விடுதலையாகிச் சிட்டுக்குருவி போலச் சிறந்திடக் கனவு கண்ட 'அக்கினிக் குஞ்சு' ஷெல்லி. ஷெல்லியின் நெட்டைக்கனவு 'வானம்பாடி'யாக வடிவெடுத்தது. அந்த மகாகவிஞ்னின் அடிச்சுவட்டிலே நடைபயின்ற பாரதியின் கவிக்கனவு 'குயிலா'ய் மலர்ந்தது. வானம் பாடியின் இசை. அது எழுந்த சூழல். அந்த இசை தன்னுள் எழுப்பிய தன் மறப்பு, கிறக்கம் என்பவற்றோடு ஷெல்லியின் பாடல் நிறைவுறுகின்றது. பாரதியின் குயிலோ குயிலியாகிக் காதல் புரிந்தது. காதலுக்கேற்பட்ட தடைகளாலே துவண்டது. மறுபிறப்பிலாவது தன் காதல் கைகூடும் என்ற நம்பிக்கையோடு தன் காதலன் வரவிற்காகக் காத்துக் கிடந்தது. அவனை மானிட வடிவில் (குயிலாகத் தான் எடுத்த மறுபிறவியிலே) கண்டு உண்மை உணர்த்தி அவனோடு கூடிக் கனிந்தது.

"முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்
சித்தம் மயங்கிச் சில போழ்திருந்து''

தன் காதலன் களிப்புறுமாறு செய்துவிட்டு, 'பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்த்'' தானும் தான் வீற்றிருந்த புதுச்சேரி மாநதோப்போடு மாயமாக மறைந்து விடுகின்றது.

குயிலைக் கதைத் தலைவியாய்க் கொண்டு பாரதி கற்பனைக் கதை ஒன்றினைப் படைக்கின்றான். தனது கற்பனையுலகில் வாசகர்களையும் கலந்து விடச் செய்கின்றான். இக் கலப்புக்களிற்கு அவனது கவிதா சக்தி உரமூட்டுகின்றது. கதை என்னவோ சாதாரண காதற் கதைதான். கருத்தொருமித்த காதலைச் சிதைத்திட எழுகின்ற இடையூறுகளும் அந்த இடையூறுகளுக்கு எதிர் நிற்கலாற்றாத காதலரின் அவலச் சாவும் அவற்றின் விளைவாக எழும் சோகச் சுவையும் காலாதி காலமாகப்பாடு பொருளாய் அமைந்து வருவனதாம். ஒன்றைப் போலவே ஓராயிரங் காதற் கதைகள் உலக இலக்கிய ங்கள் எங்கும் ஒரு காலத்தில் எழுந்ததை யார்தாம் அறியார்? அந்த ஆயிரத்துள் ஒன்றாகக் குயிற்பாட்டையும் தள்ளி விடலாமா, என்ற கேள்வி எழுமாயின் அது நியாயமானதே. அதற்கு விடை காணமுன் குயிலின் கதையை மிகச் சுருக்கமாக நோக்குவோம்.

புதுச்சேரி மாந்தோப்பில் குயிற் பறவையாய்ப் பாவலனின் உள்ளத்தே குடியேறி அவனை அலைக்கழித்தவள் முற்பிறப்பில் சின்னக் குயிலி என்ற பெயர் கொண்ட வேட்டுவ மங்கை; சேர நாட்டின் மலையகச் சிற்றூர் ஒன்றின் தலைவனான வீரமுருகன் என்பவனின் மகளாய்ப் பிறந்தவள்; மூன்று தமிழ் நாட்டிலும் இவள் போல அழகி வேறில்லை என்று இசை போக்கியவள். அவளுக்கு மாமன் மகனாய் அமைந்தவன் மாடன். அவனுக்கு அவளிலே கொள்ளை ஆசை. காமன் கணைக்கு இலக்காகிய அந்த அப்பாவி. பொன்னும் மலரும் புதுத்தேனும் கொண்டுவந்து குயிலிக்குத் தந்து அவளின் அன்பை இரக்கின்றான். அவளுக்கு அவன் மீது மையல் பிறக்கவில்லை. இரக்கந்தான் உண்டாகின்றது. "வருந்தாதே, உன்னையே மணப்பேன்'' என்று அவனுக்கு வாக்களிக்கிறாள். சின்னக்குயிலி.





இந்நிலையில் தேயமெங்கும் பரவிய அவளின் அழகும் பண்பும் ஏற்படுத்திய தாக்கம், தென்மலைச் சாரலின் வேட்டுவத் தலைவனான மொட்டைப்புலியன் செவிக்கும் எட்டுகின்றது. அவன் தன் மகனான நெட்டைக் குரங்கனுக்கு மகட்பேசி வீரமுருகனை அணுகுகின்றான். வீரமுருகனும் தன் மகளை அவன் மக னுக்கு மணஞ் செய்து வைக்க இசைகின்றான். பன்னிரண்டு நாளில் மணம் நிகழும் என்று இரு பகு தியாரும் ஒப்பந்தம் செய்து கொள் கின்றனர்.

இச்செய்தி கேட்டு மாடன் ஏமாற்றமும் துயரமும் மிக்கவ னாய்ச் சின்னக் குயிலியைச் சென்று காண் கின்றான். அவ்வே ளையிலும் சின்னக் குயிலிக்கு அவன்மீது இரக்கந்தான் உண்டாகின்றது.

"காயுஞ் சினந்தவிர்ப்பாய் மாடா கடமையினால்
நெட்டைக் குரங்கனுக்குப் பெண்டாக நேர்ந்தாலும்
கட்டுப்படி அவன்தன் காவலிற்போய் வாழ்ந்தாலும்
மாதமொரு மூன்றில் மருமஞ்சில செய்து
பேதம் விளைத்துப் பின்னிங்கே வந்திடுவேன்
நாலிரண்டு மாதத்தே நாயகனாய் நின்றனையே
பெற்றிடுவேன் நின்னிடத்தே பேச்சுத் தவறுவனோ?
மற்றிதனைநம்பிடு வாய்..............''

என்று அவனுக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தாள்.

பின்னொரு நாள் சின்னக்குயிலி தன் தோழியருடனே காட்டினிடைச் சென்று களித்தாடி நிற்கின்றாள். அவ்வேளை வேட்டைக்கென வந்த சேர மான் மைந்தன் மானொன்றறைத் தொடர்ந்து வந்தவன், அவளின் வடிவழகைக் கண்டு மையல் மிகக் கொள்கின்றான்; அவளைத் தன்னவளாய்த் கொள்ள உறுதி பூண்கின்றான். சின்னக்குயிலியும் அவனுக்குத் தன் சித்தத்தைப் பறிகொடுத்தாள். இருவரும் நோக்கிய நோக்கிலே அவர்களின் ஆவியிரண்டும் கலந்து போயின. அந்நிலையில் அரசன் மகனென்று அஞ்சிய தோழியர், அவளைத் தனித்து விட்டு அகன்று போயினர். சேர இளவரசனோ, அவளை அணுகித் தன் ஆசைப் பெருக்கையெல்லாம் எடுத்துரைத்துத் தன்னோடு சேரவேண்டுகின்றான். அந்தப்புரத்து மகளிரோடு தன்னையும் ஒருத்தியாய் ஆக்கி விடுவானோ என்று அஞ்சி..

"பத்தினியாய் வாழ்வதல்லால் பார்வேந்தர் தாமெனினும்
நத்தி விலைமகளாய் நாங்கள் குடிபோவதில்லை
பொன்னடியைப் போற்றுகின்றேன் போய்வருவீர்.''

என்று சின்னக்குயிலி மறுதலித்தாலும் அவன் மீதெழுந்த காதலை அவளால் தவிர்க்கக் கூடவில்லை. போக விடை கொடுத்தாலும் "என்னைவிட்டுப் போயினரே'' என்று வருந்தி அவள் உள்ளம் ஊசலாடுகின்றது. ஆனால் அவன் போகவில்லை. அவளின் காதற் குறிப்பை அவள் கண்களிலே கண்டு பக்கத்திற் சென்று பளிச் சென்று அணைத்து முத்தமும் பதித்து விட்டான், சின்னக்குயிலி சிறை கொண்டாள் போல விலக. அரசன் மகனோ அவளே தன் மனையாட்டி என்று வாக்குறுதி அளித்து.

'வேத முறையில் விவாகம் செய்வேன்'

என்றுரைத்துச் செல்கின்றான். போலக் காட்டிப் பின்னரும் தழுவிடச் சின்னக்குயிலியும் தன் வசம் இழந்து அவன் கட்டணை ப்பில் கிடந்து இருவரும் இவ்வுல கையே மறந்ததை அவ்வேளை நெட்டைக் குரங்கன் நெருங்கி வந்து பார்த்துவிட்டான்.

"பட்டப்பகலிலே பாவிமகள் செய்தியைப் பார்
கண்ணாலங் கூட இன்னுங் கட்டி முடியவில்லை
மண்ணாக்கி விட்டாள் என் மானந் தொலைத்துவிட்டாள்''

என்று கலங்குகின்றான். அதே வேளை இங்கு நடப்பதனை யார் வாயினாலோ கேட்டறிந்த மாடனும், "நீரோடும் மேனி நெருப்போடும் கண்ணுடனே' அங்கு வந்து விட்டான். இந்த இருவரும் கண்டது ஒரு காட்சி; கொண்டதோ பெருஞ்சீற்றம்! காதலரோ,

"தேவ சுகங்கண்டு விழியே திறக்கவில்லை
ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவிக் கிடந்தனர்................''

இவ்வாறு பரமானந்த சுகத்தில் மூடிய விழிகள் நான்கு. வெங்கொடுஞ் சீற்ற நெருப்பில் பொறி பறந்த விழிகளும் நான்கு. அந்த விழிக்குடையோர் ஆலாய்ப் பறந்து வந்து வெட்டினர். வெட்டிரண்டு வீழ்ந்தன. ஆனால் சட்டென எழுந்த மன்னன் மகன் வெட்டி வீழ்த்தினான். அவ்விருவ ரையும். அவர்கள் பிணமானார்கள். மன்னன் மகனும் சோர்ந்து வீழ்ந்து மரணவாயிலை அணுகிக் கொண்டிருந்தான்.

"பெண்ணே இனிநான் பிழைத்திரேன் சிலகணத்தே
ஆவி துறப்பேன் அழுதோர் பயனில்லை
சாவிலே துன்பமில்லை தையலே இன்னமும் நாம்
பூமியிலே தோன்றிடுவோம் பொன்னே நினைக்கண்டு
காமுறுவேன் நின்னைக் கலந்தினிது வாழந்திடுவேன்
இன்னும் பிறவியுண்டு மாதரசே இன்பமுண்டு
நின்னுடனே வாழ்வனினி நேரும் பிறப்பினிலே''

என்று சொல்லி இறுதியாகக் கண்மூடினான். இதனோடு சின்னக் குயிலியின் காதற்கதை கண்ணீர்ப் பெருக்கினிலே கலந்துவிடக் காண் கின்றோம்.

மீள விழியில் மிதந்த கவிதையெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?இலக்கயி
என்று பித்தன் போல் பிதற்றி.
கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே பண்கூத் தெனுமிவற்றின் சாரமெல்லாம்
ஏற்றி அதனோடே இன்னமுதைத் தான் கலந்து
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியிலே
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்

என இந்தப் பேரழகை முழுமையாகச் செதுக்கிக் காட்ட முற்படுகையில் மெய்ம்மறந்த இரசனை வெள்ளத்தில் படிப்போ ரின் மனங்களையும் மூழ்க வைத்து விடுகிறான் பாரதி. உண்மையில் பாரதியின் வேதாந்தப் பொருள் சமய தத்துவத்திற்கு உட்பட்டதோ இல்லையோ என்பது ஒரு புறமாகாட்டும்.

குயிற்பாட்டைப் பொறுத்த வரையில் குயில் என்பது தூய இசை, கவிதை இயற்கையின் மலர்ச்சி, அவை ஏற்படுத்தும் பாவனாசக்தி என்பவற்றின் குறியீடாகவே அமைந்து விடுகின்றது என்றுதான் சொல்லத் தோன்று கின்றது.

அந்நிய ஏகாதிபத்தியத்தின் கடுமைகளிலும் கொடுமைக ளிலுமிருந்து விடுபடப் புதுச்சேரிக்கு வந்த பாரதி. நாள்தோறும் தான் உலாவிவந்த மாந்தோப்பின் கட்டுக் காவல்களையெல்லாம் உடைத் தெறிந்து தனது சுதந்திர உள்ளத்தைப் பறக்கவிட்டு அந்தப் பறப்பிலே கண்ட வனப்புக்கள், குரூரங்கள், தடைகள், விடுதலை என்பவற்றைத் தன் பாவனாசக்தி கொண்டு வெளிப்படுத்தியதே குயிற்பாட்டு.

பாரதியின் பாடல்கள் அனைத்தையும் படித்து விட்டு அவனுடைய குயிற்பாட்டையும் படித்து முன்னவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அவையாவிலும் மேலான செந்தமிழ்ச் சொல்லின்பத்தைப் புதுமையான வருணனைகளை, வியத்தகும் உவமை உருவகங்களை, மனப்படிவுகளை, உணர்வுகளை, குறிக்கோள்களை, கனவுகளை ஏக்கங்களையெல்லாம் குயிற்பாட்டிலே தான் காண முடிகிறது.

## கூப்பிடு தூரத்தில் வாழ்க்கை!




தற்கொலை புரியப் போய்
மரணம் மறுதலிக்க
வாழ்க்கைக்குள் மீண்டும்
துப்பப்பட்டவனே; சொல்
பேய்களின் விருந்து
மண்டபமாய்
உன்மனசு மாறியதெப்படி?
மூளையில் எப்போது?
முள் முளைத்ததுனக்கு?

மரணத்தின் கர்ப்பப்
பையில்
கலைந்து போனவனே
கைக்குட்டை இந்தா
கண்களைத் துடைத்துக்
கொள்
உயிரின் உன்னதம்
தெரியுமா உனக்கு?
மனித ராசியின்
மகத்துவம் தெரியுமா?
உயிர் என்பது
ஒரு துளி விந்தின்
பிரயாணம் இல்லையப்பா!
அது
பிரபஞ்சத்தின் சுருக்கம்
உன்னை அழித்தால்
பிரபஞ்சத்தின்
பிரதியை அழிக்கின்றாய்
பிரபஞ்சத்தை அழிக்க
உனக்கேதப்பா உரிமை?

பூமியைக்
கை விடப் பார்ப்பவனே
பூமி உன்னைக்
கை விடவில்லையப்பா!
காற்று உன்னை மட்டும்
விட்டு விட்டு வீசியதா?
தன் கிரகணக் கீற்றுகளை
நிலா உன் மீது
நிறுத்திக் கொண்டதுவா?
பூக்கள் உன்னைக் கண்டு
இலைகளின் பின்னால்
தலை மறைவானதுவா?

தன் சிகரங்களில் வசிக்க
வாழ்க்கை உன்னை
வரவேற்கிறது
நீ ஏன்
மரணத்தின் பள்ளத்தாக்கை
நகங்களால்தோண்டுகிறாய்?
தம்பி!
சாவை சாவு தீர்மானிக்கும்
வாழ்க்கையை
நீ தீர்மானி
புரிந்து கொள்
சுடும் வரைக்கும்
நெருப்பு
சுற்றும் வரைக்கும் பூமி
போராடும் வரைக்கும்
மனிதன்
மனிதன்

# கைரேகை சாஸ்திரம்



1. ஆயுள் ரேகை 2. புத்தி ரேகை
3. இருதய ரேகை 4. விதி ரேகை

## விதி ரேகை THE LINE OF FATE OR DESTINY


## விதி ரேகை இருக்குமிடம்

உள்ளங்கையின் கீழ்ப்பக்கமான மணிக்கட்டிலிருந்து புறப்பட்டு புத்தி ரேகை, இருதய ரேகை இவைகளைத் தாண்டி நடுவிரலின் அடிப்பாகம் வரை நேராகச் செல்லும் ரேகைக்கு விதிரேகை என்று பெயர். இதையே தனரேகை என்றும் சொல்வர்.

விதி ரேகை முன்வினையையொட்டி, உலகில் மனித சமுதாயத்தில் நம்முடைய முன்னேற்றத்தின் நிலையை அறிவிக்கும். மற்றும், வாழ்க்கையில் வெற்றியை முன் கூட்டியே தெரியுப்படுத்தும் சாதனமும் ஆகும்.

விதி ரேகை மணிக்கட்டிலிருந்து கிளம்பி மேலே சென்று நன்கு அமைந்தால், அத்தகையவர்கள் பிறரால் நன்கு மதிக்கப்படும் அளவிற்கு உடல் அமைப்பைப் பெற்றவர்களாகவும், நல்ல அதிர்ஷ்டசாலிகளாகவும், எதிர்பாராத வகையில் லாபங்களை அடைபவர்களாகவும், திகழ்வார்கள்.


(படம் -23)




மேலே கூறியபடி விதிரேகை, அமைந்து கையில் காணப்படும் இருதய ரேகை, எண்ண ரேகை, ஆயுள் ரேகை முதலியவைகளும் நன்கு காணப்பட்டால், அப்படிப்பட்டவர்கள் தங்கள் சொந்த முயற்சியாலேயே வாழ்க்கையில் எல்லாவித நலன்களையும் அடைவார்கள்.

விதி ரேகையே இல்லாதவர்களும் பலருண்டு. அத்தகையவர்கள் வாழ்க்கையில் முன்னேற்ற மற்றவர்களாகவும் சாதாரண வாழ்க்கைத் தேவைகளையே பெற முடியாமல் வாழ்வே ஒரு பாரமாக அமைந்து வருந்துபவர்களாகவும் இருப்பார்கள். விதிரேகையில்லாத சிலருக்கு வாழ்க்கைத் தேவைகள் இருந்தாலும், காரணம் புரியாமல் உற்சாகம் பெற்றுப் பின் மன அமைதியற்று யந்திரங்களைப் போன்று வாழ்க்கை நடத்துவார்கள்.

விதி ரேகை இரண்டு துண்டாகக் காணப்பட்டால் அந்த வயதளவில் எதிர்பாராத இன்னல்களும் செய் தொழில் நஷ்டமும் சமூகத்தில் மதிப்புக் குறைவும் ஏற்படும். (படம் 24)




விதி ரேகை சனி மேட்டைத் தாண்டி நடு விரலின் மூன்றாவது கணுவையும் கடந்திருந்தால், அத்தகையவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் போதிய வாய்ப்புக் கிடைக்காது. முயற்சிகளில் தோல்விகளும் உண்டாகும்.

விதி ரேகை முழுவதுமாக இல்லாமல் ஓரளவே மேல் நோக்கிச் சென்று நின்றுவிட அதன் அருகிலேயே மற்றொரு ரேகை எழும்பி இறுதிவரை செல்லுமாகில் (இப்படிப்பட்ட ரேகையை உடைந்த ரேகை எனக் கொள்ள வேண்டாம்) அந்த ஆயுளளவில் தாம் அதுவரை செய்து வந்த உத்தியோகமோ, தொழிலோ மாறுபட்டு, வேறு பதவியையோ, தொழிலையோ மேற்கொள்ள நேரிடும். ஆனால் பதவிமாறுதல் உயர்ந்ததாகவோ தாழ்ந்ததாகவோ இருக்கும் என்பதை ரேகையின் அமைப்பைக் கொண்டே முடிவு செய்ய வேண்டும்.

அதாவது விதி ரேகையைத் தொடர்ந்தாற்போல் எழும் மற்றொரு ரேகை சுத்தமாகவும் அழுத்தமாகவும் காணப்பட்டால் அத்தகைய வாழ்க்கை மாறுதல் முன் இருந்ததை விட உயர்வாகவே அமையும். அந்த ரேகை மேல் எழுந்த வாரியாகத் தோன்றினால், அத்தகைய வாழ்க்கை மாறுதல் முன்னிருந்ததை விட தாழ்வாகவே அமையும் என்று ஊகித்தறிய வேண்டும். (படம் - 25)




விதிரேகை உள்ளங்கையின் நடுவிலிருந்தோ, கட்டைவிரலுக்கு எதிர்ப்புறத்திலிருந்தோ எழுந்திருந்தால், குடும்ப வாழ்க்கைக்குக் கட்டுப்படாமல் தனிமையில் வாழ்க்கை நடத்துபவர்களாக இருப்பார்கள்

விதி ரேகை இவ்வாறு அமைந்திருப்பதுடன் புத்தி ரேகை நேராக அமைந்திருந்தால், அத்தகையவர்கள் சுய நலம் மிக்கவர்களாகவும், பிறருக்காக சிறிதளவும் விட்டுக் கொடுக்கும் சுபாவமற்றவர்களாகவும் இருப்பர்.

(படம் - 26)




விதி ரேகை கட்டை விரலின் அருகில் ஆயுள் ரேகைக்குள்ளே எங்கு ஆரம்பித்திருந்தாலும் அத்தகைய ரேகையுள்ளவர்கள் காம உணர்ச்சி அதிகம் உள்ளவர்களாக இருப்பார்கள். இத்தகைய விதிரேகை அமைப்புடன், புத்தி ரேகை பலமற்றுக் காணப்பட்டால், காம வேகத்தை அடக்க மாட்டாது மனம் போனபடி நடந்து ஒழுங்கீனர்களாகி விடுவார்கள். (படம் - 27)




விதி ரேகை, ஆயுள் ரேகையுடன் சேர்ந்திருந்தாலும் பிணைக்கப் பட்டிருந்தாலும், அத்தகையவர், தம்முடைய பெற்றோர்களுக்காவது மற்றவர்களுக்காவது உதவி புரிய வேண்டிய நிலையில் இருப்பார்கள். மற்றும் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலையும் ஏற்படும். இளம் வயதிலேயே திருமணமாகி குடும்பப் பொறுப்பை ஏற்கும் தம்பதிகள் சிலரின் கைகளில் இத்தகைய ரேகைகளைக் காணலாம்.

(படம் - 28)




விதி ரேகை ஆயுள் ரேகையிலிருந்து எழுந்து மேல் நோக்கிச் சென்றால் பிறர் உதவியின்றி தம் முயற்சியாலேயே வாழ்க்கையில் வெற்றியடைவார்கள்.

விதி ரேகை இருதய ரேகையால் தடுக்கப்பட்டு நின்று விட்டால் அப்படிப்பட்டவர்களுடைய முன்னேற்றங்கள் அன்புக்குரிய மனைவி, பெற்றோர் முதலியவர்களாலேயே தடைப்படும்.

அவ்வாறு இருதய ரேகையால் தடுக்கப்பட்ட விதி ரேகை இருதய ரேகையுடன் சேர்ந்து, இரண்டும் ஆட்காட்டி விரலின் அடியில் குரு மேட்டிற்குச் சென்றால், காதலின் மூலமாக தம்முடைய எண்ணம் நிறைவேறப் பெற்றவர்களாகவும், உயர்ந்த பதவியை விரும்பி அதை சுலபமாகப் பெறுபவர்களாகவும் திகழ்வார்கள்.

விதி ரேகை மோதிர விரல் பக்கம் சாய்ந்திருந்தாலும் அல்லது விதி ரேகையிலிருந்து ஒரு கிளை ரேகை மோதிரவிரல் அடிப்பாகத்திற்குச் சென்றாலும், அத்தகைய ரேகையைப் பெற்றவர்கள், புகழ் பெற்ற வக்கீல்களாகவோ பாரிஸ்டர்களாகவோ, மக்களுக்கு நல்வழி காட்டும் தலைவர்களாகவோ திகழ்வார்கள். (படம்- 23ல் புள்ளிகளைக் காண்க)

விதி ரேகை மோதிர விரலின் அடிவரை சென்றிருப்பதுடன், அங்கிருந்து சில கிளைகள் மற்ற கிரகமேடுகளுக்குச் சென்றால், அந்த மேட்டுக் கிரகத்திற்குரிய விஞ்ஞானம், வியாபாரம், கலைகள் இவைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள்.

விதி ரேகையிலிருந்து ஒரு கிளை சுண்டு விரலின் அடியில் புதன் மேட்டை நோக்கிச் சென்றிருந்தால், பேச்சுவல்லமையும், விஞ்ஞானஅறிவும், வியாபாரத் துறையில் முன்னேற்றமும் உடையவர்களாகத் திகழ்வார்கள்.

விதி ரேகையிலிருந்து ஒரு கிளை மோதிர விரலின் அடியில் சூரிய மேட்டின் மீது பாய்ந்தால் நாடகக் கலையிலும் பொதுஜன சேவையிலும், சாகித்தியத்திலும் வல்லமையுள்ளவர்களாவார்கள்.

விதி ரேகை ஆட்காட்டி விரல் பக்கம் சாய்ந்திருந்தாலும் அல்லது விதி ரேகையிலிருந்து ஒரு கிளை ரேகை ஆள்காட்டி விரல் பக்கமாகச் சென்றாலும், அத்தகையவர்கள் ஒரு காரியாலயத்திலோ சமூகத்திலோ பிறர் மீது ஆணை செலுத்தும் பதவியில் இருப்பார்கள். நாடகம், சினிமா போன்றவைகளில் புகழ் பெற்ற நடிகர்கள் பலரின் கைகளில் இத்தகைய கிளை ரேகை காணப்படும். மேலே கூறிய விதி ரேகையோ கிளை ரேகையோ ஆட்காட்டி விரலின் கீழே உள்ள குருமேட்டின் மீதே பாய்ந்திருந்தால் அப்படிப்பட்டவர்கள் நாட்டின் தலைவராகவோ, அரசர் அல்லது ஜனாதிபதியாகவோ, கவர்னர்களாகவோ, படைத்தலைவர்களாவோ, வாணிபத்துறையில் புகழ்மிக்கவர்களாகவோ, தொழிலதிபர்களாகவோ, தொழிலாளர் தலைவர்களாவோ விளங்குவார்கள். (படம் 23ல் புள்ளிகளைக் காண்க)

விதி ரேகை உள்ளங்கையின் வெளிப்புறத்திலிருந்து (சந்திர மேட்டிலிருந்து) எழுமாகில்,

நிலையாக ஓரிடத்தில் தங்காமல் எப்பொழுதும் பிரயாணம் செய்வதிலேயே அதிக ஆவலுள்ளவர்களாகவும் சுதந்திர உணர்ச்சியும் தனித்தன்மை பொருந்திய செயல்கள் மிகுந்தவர்களாகவும் இருப்பார்கள்.


அந்த ரேகை இருதய ரேகையுடன் சேர்ந்து ஆள் காட்டி விரல்வரை சென்றிடுமாகில் சாகசச் செயல்களைப் புரிபவர்களாகவும், பந்துக்கள், தாயாதிகள் போன்ற ரத்தசம்பந்தமுள்ளவர்கள் மூலம் மிக்க செல்வம் பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

விதி ரேகை புத்தி ரேகை வரை சென்று நின்றுவிடுமாகில் அவர்கள் நன்கு ஆலோசிக்காமல் எதையும் விரைவில் முடிவு செய்து விடுவார்கள். அப்படிச் செய்கின்ற காரியங்கள் அவர்களுடைய மூடத்தனத்தாலேயே தோல்வி அடைந்து போகும்.

விதி ரேகை புத்தி ரேகையிலிருந்து எழுமாகில் அத்தகையவர்கள் தம் வாழ்நாளின் பிற்பகுதியில் அதிர்ஷ்டத்தாலன்றி தம் முயற்சியாலேயே வெற்றி காண்பவர்களாக இருப்பார்கள்.

விதி ரேகையில் தீவு காணப்பட்டால் அந்தக் குறி காணப்படும் வயதளவில் தாம் வகித்து வரும் பதவியிலிருந்து நீக்கப்படுதலும், தம் ஆணை செல்லாமையும் பலவிதமான இன்னல்களும் ஏற்படும்.ஆனால் சாதாரணமாகத் தாம் அனுபவித்து வரும் சுக வாழ்விற்கு எந்த விதக் குறையும் ஏற்படாது.

(படம் -29)




விதி ரேகையில் சதுரம் காணப்பட்டால், தாம் செய்து வரும் தொழிலில் முதலில் அதிக நஷ்டம் ஏற்படுதலும் பிறகு ஒரு விதமான மாறுதல் ஏற்பட்டுத் தொழிலில் முன்னேற்றமடைவதும் நடைபெறும்.

## விதி ரேகை பற்றி மேலும் சில குறிப்புக்கள்

விதி ரேகை ஆயுள் ரேகையிலிருந்தோ அல்லது மணிக்கட்டிலிருந்தோ அல்லது உள்ளங்கையின் நடுவிலிருந்தோ அல்லது சந்திர மேட்டிலிருந்தோ தோன்றக்கூடும்.

சந்திர மேட்டிலிருந்து ஒரு கிளையும் சுக்கிர மேட்டிலிருந்து ஒரு கிளையும் புறப்பட்டு விதி ரேகையை அடைந்திருந்தால் அப்படிப்பட்ட விதி ரேகையின் நீளத்தையும் பலத்தையும் தன்மையையும் பொறுத்து ஜாதகர்களின் காதல் விவகாரங்களிலும், எண்ணங்களிலும் கனவுகளிலும் நன்மைகளோ தீமைகளோ ஏற்படக்கூடும்.

விதி ரேகை எங்காவது உடைந்திருந்தால் அதனால் பயப்பட வேண்டாம். உடைதல் கெட்ட அறிகுறி அல்ல. உடைந்த இடத்திலிருந்து அவருடைய வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்படும் என்பதன் அறிகுறியே அது. உடைந்த ரேகையின் முடிவில் ஆரம்பமாகும் மற்ற ரேகையின் தன்மையைப் பொறுத்து மாறுதல்களின் நன்மையோ தீமையோ ஏற்படலாம்.

உள்ளபடி அமைந்துள்ள விதி ரேகைக்குஇணை விதிரேகையாக ஒன்று அமைந் திருப்பது மிக்க நல்லது. மேலும் அவைகள் மாறுபட்ட போக்கில் அமைந்திருந்தால் சிறந்த பலனை எதிர்பார்க்கலாம்.

(தொடரும்)

ஸ்ரீனிவாசன்

# வியாசரின் பதில்கள்

ஜோ.ஜெ.டி கொழும்புத்துறை
★ எனக்கு நடிகை சினேகாவை பிடிக்கும் வியாவிற்கு யாரைப் பிடிக்கும்.



● நாரியர் மீது பிடிப்பில்லை இப்போது நாரிப்பிடிப்புத்தான் இருக்கிறது.

★ பாதை திறப்பு ஏன் தாமதமாகிறது. சாவி தொலைந்து விட்டதோ?
● இல்லை. நீண்ட காலமல்லவா பூட்டு. கறள் ஏறிவிட்டது.

★ கத்திக் குத்தில் வீரம் காட்டும் காடையர் பற்றி?
● துப்பாக்கி வர தம்பாட்டில் நிற்கும்.

## ஆண்களுக்கா பெண்களுக்கா முதலில் காதல் உண்டாகின்றது?

★ அடுத்த நவம்பர் 27 கொண்டாட்டங்கள் ருடா நாட்டில் நடை பெறும் என்பதில் ஐயம் உண்டோ?
● அன்பனே, அஞ்சற்க! நிச்சயம் நடக்கும்.

ப.சுதர்ஷன் பளை
★ வியாசர் அவர்களே! மகாபாரதம் கூறியது யார்?
● "அவர்களே" தான்.

★ ஒரு மனிதனைப் பூரணப் படுத்துவது தாயா? தாரமா?
● தாய்க்குப் பின் தாரம்.

S.ஜீவா ஊர்காவற்றுறை
★ சார்! பழைய நிலைமை வரும் சாத்தியம் தெரிகின்றது. அப்படி என்றால் நேரமும் மாற்றப்படுமா?
● நாம் நடமாடும் நேரம் மாற்றப்படும்.

தயாளன் சாவகச்சேரி
★ டியர் வியாசர் சார்! சந்திரிகா-ரணில் இருவருக்கும் உள்ள வேறுபாடு யாது?
● மகனே! காலம் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

முரளிதரன் காரைநகர்
★ நவீன உலகில் பெண்கள் அணியும் ஆடைகள் பல இக்காலசமூகத்தை சீரழிக்கிறது. இது பற்றி என்ன நினைக் கின்றீர்கள்?
● பெண்கள் ஆடையைப் பார்க்கும் ஆண்களைப்பற்றி என்ன நினைக்க முடியுமோ அதையே அவர்கள் பற்றியும் நினைக்க முடியும்.

E.ஜிஎம்ச யாழ்ப்பாணம்
★ வியாசரே! நான் ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கு அவள் வீட்டருகே போகிறது வழக்கம். அவள் முன்பு வீட்டிற்கு வெளியே நிற்கின்றவள் இப்போது என்னைக் கண்டதும் ஓடுகிறாளே ஏன்?



● உமது தொந்தரவு கூடி விட்டது போலும்மபா என்று கோடிக்குள் ஓடுகிறாள் போலும்.

எஸ்.கவிதரன் சண்டிலிப்பாய்
★ ஐயா சாதி சாதி என்று மார்தட்டும் மனிதர் பற்றி யாது நினைக்கிறீர்?
● அதை விட்டால் அவர் பாடு திண்டாட்டம்.

முகி யாழ்ப்பாணம்
★ புனிதமான காதல் வாழும் என்கிறார்கள் உண்மையா?
● ஆம்; சாஜகான் – மும்தாஜ் வாழ்கிறார்களல்லவா?

T.விவேக் ஊர்காவற்றுறை
★ காதலில் தோற்பவர்கள் ஆண்களா? பெண்களா?
● தோற்பவர்கள் ஆண்கள். நம்பி மோசம் போகின்றவர்கள் பெண்கள்.

எம்.வி.சார் ஊர்காவற்றுறை
★ காதலில் தோல்வியுற்ற ஆண்கள் தாடிவளர்த்து மது போதைக்கு ஆளாகின்றனர் அப்படி என்றால் பெண்கள்.
● சோடியாகச் செல்வார்கள்.

ஜோ.ஜெடி கொழும்புத்துறை
★ திருமணமானவர்கள் புதிய புதிய காதல் லீலைகளில் ஈடுபடுகின்றனரே?
● அதை ஏனைய்யா நீர் பார்க்கிறீர்.

## காதலித்து திருமணம் செய்பவர்கள் திடீரென விவாக ரத்து செய்வது ஏன்?

தவசி இத்தாவில்
★ ஐவகை நிலங்களுக்கும் ஐவகை காதல் ஒழுக்கம் இருந்தது. தற்போது யாழ் மண்ணின் காதல் ஒழுக்கம் எப்படி?

கண்ணன் எழுதுமட்டுவாள்
★ காதலித்து திருமணம் செய்பவர்கள் திடீரென விவாகரத்து செய்வது ஏன்?
● "சீதனப்" பொருத்தம் பொருந்தவில்லைப் போலும்.

## ஐயா, சாதி சாதி என்று மார்தட்டும் மனிதர் பற்றி யாது நினைக்கிறீர்?


★ சிறுவர்கள் சிகரெட் பிடிக்கின்றார்களே இதை நிறுத்த என்ன வழி?
● சிறுவர்களிடம் காசு கொடுத்து சிகரெட் வாங்கும் பெரியவர்கள் முதலில் திருந்த வேண்டும்.

த.அஜந்தகுமார் வதிரி
★ வியாசர் ஐயாவே! 'பாபா' படத்துக்கு நான் பாட்டு எழுதகிறதா ஒரு ஐடியா. பாட்டுக்கு முதல் அடியை எடுத்து விடுவீரா?
● பித்தா.......

சிவா அரியாலை
★ புதுக்கவிதை எங்கள் தேசத்தின் பொதுக் கவிதை என்பது சரியா?
● "ஒழுங்கற்ற வசன அமைப்பு" புதுக்கவிதை என நான் வரைவிலக்கணம் செய்துள்ளேன்.

முருகன் புத்தூர்
★ வியாசரே! காதலித்து மனம் பேதலித்து நிற்கும் இளைஞர்க்கு நீர் கூறுவது?
● தோல்வி தான் வெற்றியின் முதற்படி. அதோ தெரிகிறதே அந்தப் பிரபஞ்சம் அதன் உண்மைப் பொருளை உணருங்கள், பேதமை நீங்கும்... என்பேன்

T.சிந்து மத்தியூஸ் வீதி
★ ஆண்களுக்கா பெண்களுக்கா முதலில் காதல் உண்டாகின்றது?




● ஆண்களுக்கு "அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்." நான் சொல்ல வில்லை கம்பன் சொல்கிறான்.

நா.மகேந்திரலிங்கம் கோப்பாய்
★ வியாசர் அவர்களே! மேலைத் தேய நாகரிகத்தை நம் நாட்டுப் பெண்கள் கடைப்பிடிக்கிறார்களே ஏன் ஐயா?
● மேலைத்தேய நாட்டிற்குப் போகப்போகிறவர்கள் அல்லவா ஒத்திகை பார்க்கிறார்கள்.

தாஷ் சாவகச்சேரி
★ வியாசர் சார் அவர்களே! திருமண பந்தத்தின் மூலம் இல்லறத்தில் இணைந்து கொண்டவர்கள் திடீரென மனைவி மீது சந்தேகங் கொண்டு அவரை இம்சிக்கும் ஆண்கள் குறித்து....
● சந்தேகம் கொள்வது தப்பு... சந்தேகம் கொள்ளக் கூடியதாக நடப்பதும் தப்பு.

பிள்ளை மீசாலை
★ நண்பன் என நினைத்துப் பழகினேன். ஆனால் அவன் என்னை காதலி ஆக்குகிறானே! இதற்கு என்ன செய்யலாம்?
● கிரந்தம் முற்றினால் பவுந்திரமாக்கும் என்பது தெரியாதா உமக்கு.





● குச்சொழுங்கைக் காதல் ஒழுக்கம் உயர்வு கண்டுள்ளது.

நிசாந்தினி சாவகச்சேரி
★ ஆண்கள் தாம் நட்புறவு கொள்ளும் பெண்கள் இன்னொரு ஆடவனுடன் நட்புறவுடன் பழகினால் அவர்கள் மீது வெறுப்புக் காட்டும் வக்கிர புத்தியுடைய ஆண்கள் குறித்து.. கொஞ்சம் சொல்லுங்களேன்?
● தனி உடமையைப் பொது உடமையாக்கினால் எவ்வளவோ எதிர்ப்பு வருமல்லவா, அதுபோன்றுதான் இதுவும்.

வினேஷ் சாவகச்சேரி
★ அழகான பெண்களைக் கண்டு மனதைப் பறி கொடுப்பது தவறா?
● தவறேயில்லை. மானம் பறிபோகாத வரை.

## டியர் வியாசர் சார்! சந்திரிக்கா- ரணில் இருவருக்கும் உள்ள வேறுபாடு யாது?




"சங்குநாதம்," பெயரில் வந்துள்ள வாரவிதழ் பொங்கமுதாய்ப் பூத்துநிற்கப் பேனா முனை நிற்போர் ஆக்கங்கள் அள்ளி வரும் நன்கு ஆமுண்மை! தேக்கங்கள் நன்றாய் உளவேதான் அங்கன்றோ!! போக்கட்டும் "சங்கு நாதம்" பொங்குதுயர் வாசகர்க்கு ஆக்கங்கள் மேலுமணி செய்ய முழங்குகவே!!! தேனமுதம் நன்கு செழிக்கட்டும் சீர்தமிழும் வானமும் மண்ணும் மதிக்க வளம் ஓங்க! எங்கும் நிறைந்து இனிதருளும் ஆண்டவன் பொங்குமருள் நன்கு பொலியட்டும் ஈழத்தில் மட்டுமன்றிப் "பாருலகு எங்கும் பரவட்டும்", சொட்டுமறிவெங்கும் சுவறட்டும் நன்றேதான்.

கவிஞன்சுகசீவன்
கச்சாயூர்

கடந்த வார சங்குநாதம் கண்டு அகமகிழ்ந்தேன். சங்கு நாதத்தில் இடம் பெற்ற கவிஞர் கண்ண தாசனின் அர்த்த முள்ள இந்து மதம்,இலக்கிய நயம் சிந்திக்க வைப்பவை. சங்கு நாதத்துக்கு எனது பாராட்டுக்கள். தொடரட்டும் உன்பணி.

கே.அரசேஸ்வரன்
நல்லூர் வடக்கு.

வலம்புரியின் வாரமலராக சங்கு நாதம் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நீ சுமந்து வரும் கவிதைக் கலசம், வியாசரின் பதில்கள், மகளிர் உலகம், சிறுவர் அரங்கம் என்னை மிகவும் கவர்ந்தவை. நீ மென்மேலும் சிறப்பாக திகழ என் வாழ்த்துக்கள்.

த.தனரூபினி
பருத்தித்துறை

நின் வருகைக்காய் காத்திருந்த வாசகர் வரிசையில் நானும் ஒருவன். உன் வருகை கண்டதும் மிக சந்தோஷம். உனது படைப்புக்கள் ஒவ்வொன்றும் சூப்பர். எம்மவர் கைகள் என்றும் உனக்காய் காத்திருக்கும்.

ஆளியூரான்

பெண்ணிற்கு பெருமை வருவது
மண்ணிற்கு மகவு வரும்போது
சேயொன்று வரும் பொழுதே
தாயென்று உவகையடைவார்
அதுபோல்,
வலம்புரி எனும் தாயுடலில்
வசித்திங்கு பிறந்திட்டசேயான
சங்குநாதமே - உன்னால்
பூரிப்பது உன் தாய் மட்டுமல்ல
நாமும் தான்.

சுதன்
வடலியூர்

சங்குநாதமே! உன் அட்டைப் படத்தின் அழகுதான் என்னே! இன்றைய சூழ்நிலையில் அதுவும் யாழ் மண்ணில் சங்குநாதம் வெளிவருவதை எண்ணி, நான் பெருமைப்படுகின்றேன்.

சி.சயந்தன்
வட்டுக்கோட்டை

தரணியில் வலம் வரும் வலம்புரியே!
அதில் வாரம் ஒரு முறை வரும் சங்குநாதமே!
கொண்டோம் உன் இதழில் பெரு மகிழ்ச்சி!
அதில் கண்டோம் உன் கவி த்திறனை
வாசகர் மனதை கவர்ந்து வரும் சங்குநாதமே!
உன்திறனை எட்டு திசைகளிலும் கொட்டி முழங்கு
நம் மொழியை வளர்த்தெடுக்க வந்த நாதமே.
உன் இனிய நாதம் தொடர்ந்து ஒலிக்க எனது
வாழ்த்துக்கள்

பாலசிங்கம் தர்சிகா.
கந்தர்மடம்

அரசியல் விமர்சனத்தில் ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் இலக்கிய நயத்தில் – யாம் இன்புற்றிருக்கக் கூடிய ஈழத்தமிழர்பால் வல்லரசு நாடொன்று ஈடுபாடு கொண்டிருக்கும் தகவலையும், உள்ளங்களின் சங்கமம் சிறுகதையில் ஊறி உள்ளத்தைப் பறிகொடுத்து எல்லா விடயங்களையும் ஏற்று இன்முகத்துடன் கற்றிட ஒவ்வொரு இதழின் விடய தானமும் ஓயாமல் படித்திட தூண்டும், ஔடதம் போல் எமக்குக் கிடைத்த அரும் பெரும் பொக்கிஷமே! ஓங்குக உன் பணி உளமார வாழ்த்து கிறேன்!

ஞா.சுதர்சினி
கைதடி

நேரான பாதையிலே நடை பயின்று சோராது பக்கம் சாராதுசீராக நீ வாழ்க! வளர்ந்திடுக!! ஆராரோ ஆரிவரோ பாடுவார்கள் தூங்கி விடாதே துவங்கு உன் சேவையை.

நீலாவாசன்
கொற்றையூர்

சங்கு நாதமே! நீ ஒரு நாதம் தான். நீ வாரா வாரம் குடா நாட்டையே சுற்றி வலம்புரி கின்றாய் சங்கு நாதமே! எங்கும் எப்போதும் உனது பெயர் ஓங்கட்டும். உனது வரவிற்காய் எதிர்பார்ப்புடன் இருக்கும் வாசகர் உள்ளங்கள் குளி ரட்டும். வாரமலரே! வாழ்க, வுனர்க் என்றும் நிலை பெற்று.

பா. ஜெயகௌரி
ஏழாலை

# அர்த்தமுள்ள இந்து மதம்

## பாகம் 01

## கவிஞர் கண்ணதாசன்



## பாவமாம், புண்ணியமாம்

இதுவரை யாருடைய பெயரையும் நான் குறிப்பிடவில்லை.

இப்போது ஒருவருடைய பெயரைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

பட அதிபர் சின்னப்பதேவரை நீ அறிவாய்.

சிறுவயதிலிருந்தே அவர் தெய்வ நம்பிக்கையுள்ளவர்.

சினிமாத் தொழிலிலேயே மதுப்பழக்கமோ, பெண்ணாசையோ இல்லாத சிலரில் அவரும் ஒருவர்.

மிகவும் உத்தமர்கள் என்று சொல்லத்தக்க உயர்ந்தோரில் ஒருவர்.

முப்பது முப்பதைந்து வயது வரை, அவரது வாழ்க்கை கடுமையான வறுமையிலும் ஏழ்மையிலும் கழிந்தது.

அப்போதும் அவர் நாணயத்தையும் நேர்மையையும் விட்டதில்லை.

குஸ்தி கோதா நடத்தினார். சிறிய பால் பண்ணை நடத்தினார். ஜூபிடர் பிக்சர்ஸ் படங்களில் ஸ்டண்ட் நடிகராக வேலை பார்த்தார்.

அவரது வரலாறு உழைத்து முன்னேற விரும்புகிறவர்களுக்கு ஒரு பாடமாகும்.

அந்த வரலாறு உழைத்து முன்னேற வரும்புகிறவர்களுக்கு ஒரு பாடமாகும்.

அந்த நேரத்தில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையில் அவருக்கு ஆறு ரூபாய் வரை கடனாகிவிட்டது.

கடைக்காரன் அவர் கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கினான்; அந்தக் கடையிருக்கும் பக்கமே போக முடியாதபடி அவதிப்பட்டார்.

அடிக்கடி கோவைக்குப் பத்து மைலுக்கு அப்பாலிருக்கும் மருதமலைக்குப் போய் "முருகா! முருகா!' என்று அழுவார்.

அந்தக் கோவிலோ ஜன நடமாட்டமில்லாத கோவில்.

கடைக்காரன் கோபித்துக் கொண்ட அன்று இரவு, அந்த மருதமலைக் கோவிலில் போய் உட்கார்ந்து கொண்டு அழுதார்; "முருகா! காப்பாற்று" என்று வேண்டிக் கொண்டார்.

நள்ளிரவில், காடுகள் நிறைந்த அந்த மலையை விட்டு இறங்கினார்.

வழியில் ஒரு சிகரெட் பாக்கெட் கிடந்தது.

அதைக் காலால் உதைத்துக் கொண்டே நகர்ந்தார்.

கொஞ்சதூரம் வந்ததும் என்ன தோன்றிற்றோ?

அந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்துப் பார்த்தார்.

உள்ளே இரண்டு சிகரெட்டுகளும், பத்து ரூபாய் நோட்டும் இருந்தன.

அப்போது அவரது மனநிலை எப்படி இருந்திருக்கும்?

"நல்லவனாக வாழ்ந்தோம்; தெய்வத்தை நம்பினோம்; தெய்வம் கைவிடவில்லை" என்று தானே எண்ணியிருக்கும்!

அந்த முருகன் அவரை வாழ வைத்தான்.

ஒவ்வொரு நாளும், "முருகா! முருகா" என்று உருகுகின்றார்.

"தனக்கு நஷ்டம் வந்தாலும் பிறருக்கும் நஷ்டம் வரக் கூடாது" என்று தொழில் புரிகிறார்.

அதனால், அவர் நாளுக்கு நாள் செழித்தோங்குகிறார்.

நீயும் நல்லவனாக இரு.

தெய்வத்தை நம்பு.

உனக்கு வருகிற துன்பமெல்லாம், பனிபோலப் பறந்து ஓடாவிட்டால், நீ இந்து மதத்தையே நம்ப வேண்டாம்.

"பாவமாம் புண்ணியமாம; எந்த மடையன் சொன்னான்?"

''சொர்க்கமாம், நரகமாம்! எங்கே இருக்கின்றன அவை?"

"பாவமும் புண்ணியமும் பரலோகத்தில்தானே? பார்த்துக் கொள்வோம் பின்னாலே?"

இவையெல்லாம் நமதுபகுத்தறிவு உதிர்க்கும் பொன் மொழிகள்.

பாவம் - புண்ணியம், சொர்க்கம் - நரகம் என்ற வார்த்தைகளைக் கேட்கின்ற இளைஞனுக்கு, அவை கேலியாகத் தெரிகின்றன.

'நரம்பு தளர்ந்துபோன கிழவர்கள், மரண பயத்தில் உளறிய வார்த்தைகள் அவை என்று அவன் நினைக்கிறான்.

நல்லதையே செய்தால் சொர்க்கத்துக்குப் போவாய் என்றும், அங்கே வகை வகையாக விருந்துகள் உனக்கு காத்திருக்குமென்றும், தீங்கு செய்தால் நரகத்துக்குச் செல்வாயென்றும் அங்கே உன்னை எண்ணெய்க் கொப்பரையில் போட்டு வறுத்தெடுப்பார்களென்றும் சொல்லப்படும் கதைகள் நாகரிக இளைஞனுக்கு நகைச்சுவையாகத் தோன்றுவதில் வியப்பில்லை.

ஆனால் இந்தக் கதைகள், அவனை பயமுறுத்தி; அவன் வாழ்க்கையை ஒழுங்கு படுத்துவதற்காகவே தோன்றிய கதைகள்.

அவனுடைய பற்றாக்குறை அறிவைப் பயமுறுத்தித்தான் திருத்த வேண்டும் என்று நம்பிய நம் மூதாதையர் அந்தக் கதைகளைச் சொல்லி வைத்தார்கள். ஐம்பது பேரையாவது திருத்தியும் இருக்கின்றன என்பதை அறிந்தால், நம் மூதாதையர் நம்பியுரைத்த கற்பனைகள் கூட, எவ்வளவு பலனை அளிக்கின்றன என்பதை அவன் அறிவான்.

பாவம் புண்ணியம் பற்றிய கதைகளை விடு; பரலோகத்திற்கு உன் ஆவி போகிறதோ இல்லையோ இதை நீ நம்ப வேண்டாம்.

ஆனால், நீ செய்யும் நன்மை தீமைகள், அதே அளவில் அதே நிலையில், உன் ஆயுட்காலத்திலேயே உன்னிடம் திரும்பி விடுகின்றன.

அந்த அளவு கூடுவதுமில்லை, குறைவதுமில்லை.

ஒருவனை எந்த வார்த்தை சொல்லி நீ திட்டுகிறாயோ, அதே வார்த்தையில், எப்போதாவது ஒரு முறை நீ திட்டப்படுகிறாய்.

"எப்படித் தீர்க்க நினைக்கிறீர்களோ அப்படியே தீர்க்கப்படுவீர்கள்" என்று கிறிஸ்தவ வேதம் கூறுகிறது.

"செய்த வினை, அதே வடிவத்தில்திரும்பிவரும்" என்றுதான் முதலில் போதித்தது இந்து மதம்தான்.

"பாவம் என்பது நீ செய்யும் தீமை".

"புண்ணியம் என்பது நீ செய்யும் நன்மை."

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்."

"அரசன் அன்று சொல்வான் தெய்வம் நின்று கொல்லும்."

"விநாச காலே விபரீத புத்தி"

இவையெல்லாம் இந்துக்களின் பழமொழிகள்.

ஊரைக் கொள்ளையடித்து, உலையிலே போட்டு, அதை உயில் எழுதி வைத்துவிட்டு மாண்டவன் எவனாவது உண்டா?

பிறர் சொத்தைத் திருடிக் கொண்டு, அதை நிம்மதியாக அனுபவித்து, அமைதியாகச் செத்தவன் எவனாவது உண்டா?

அப்படி ஒருவன் இருந்தாலும், அவன் எழுதி வைத்த உயிலின்படி அவன் சொத்துக்கள் போய்ச் சேர்ந்ததுண்டா?

எனக்குத் தெரிந்தவரை அப்படிப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் 'ரிஸீவர்'கள் தான் சாப்பிட்டிருக்கிறார்கள். இறந்தவனுடைய சந்ததி சாப்பிடவில்லை.

கொலை செய்துவிட்டுத் தலைமறைவாகி, தண்டனையில்லாமல் நிம்மதியாக வாழ்ந்து, வலி இல்லாமல் செத்தவன் உண்டா?

எனக்குத் தெரிந்தவரை இல்லை.

ஒருவன் செய்த எந்த பாவமும் அவன் தலையைச் சுற்றி ஆயுட்காலத்திலேயே அவனைத் தண்டித்து விட்டுத்தான் விலகியிருக்கிறது.

"பாவத்தின் சம்பளம் மரணம்" என்கிறது கிறிஸ்தவ வேதம்.

இல்லை, பாவத்தின் சம்பளம் வயதான காலத்தில் திரும்பிவரும் சிறு சேமிப்பு நிதி; சரியான நேரத்தில் அவனுக்குக் கிடைக்கும் 'போனஸ்!

சாவுக்குப் பின் நடப்பது இரண்டாவது விசாரணை.

முதல் தீர்ப்பு அவன் ஆயுட்காலத்திலேயே அளிக்கப்பட்டு விடுகிறது.

எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. 1953 ஆம் ஆண்டுடால்மியாபுரம் போராட்டத்தில், பதினெட்டு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, நானும், நண்பர் அன்பில் தர்மலிங்கமும், மற்றும் இருபது பேரும் திருச்சி மத்திய சிறையில் இருந்தோம். அங்கே தூக்குத் தண்டனை பெற்ற கைதிகள் சிலரும் இருந்தார்கள்.

அவர்களைத் தனித்தனியாகச் சில அறைகளில் பூட்டி வைத்திருந்தார்கள்.

அவர்களிலே, 'மாயவரம் கொலை வழக்கு' என்று பிரபலமான வழக்கில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஏழு பேர்.

செஷன்ஸ் கோர்ட் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்தது.

அப்போது உயர் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக இருந்தவர் திரு.சோமசுந்தரம்.

பெரும்பாலான கொலை வழக்குகளில் அவர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவது வழக்கம்.

காரணம், பன்னிரண்டு வருடங்கள் கழித்துத் திரும்பப் போகும் குற்றவாளி நல்லவனாகத் திரும்பி வந்து அமைதியான வாழ்க்கை வாழ்வான் என்ற நம்பிக்கையே!

அவர் சட்டத்தோடு தர்மத்தையும் கலந்தேயோசிப்பார்.

செஷன்ஸ் கோர்ட்டின் தூக்குத் தண்டனையொன்றை அவர் ஊர்ஜிதம் செய்கிறார் என்றால், அதை ஆண்டவனே ஊர்ஜிதம் செய்ததாக அர்த்தம்.

மாயவரம் கொலை வழக்கில் ஏழு கைதிகளின் தூக்குத் தண்டனையை ஊர்ஜிதம் செய்தார்.

அவரைத் தொடர்ந்து சுப்ரீம் கோர்ட்டும் அதை ஊர்ஜிதம் செய்தது.

ஜனாதிபதிக்கு கருணை மனு போயிற்று. அவரும் தூக்குத் தண்டனையை ஊர்ஜிதம் செய்தார்.

காரணம், நடந்த நிகழ்ச்சி அவ்வளவு பயங்கரமானது.

மாயவரத்தில் நாற்பது வயதான ஒரு அம்மையார் விதவை. அந்த வயதிலும் அழகாக இருப்பார்.

சுமார் அறுபதினாயிரம் ரூபாய் பெறக்கூடிய நகைகளை அவர் வைத்திருந்தார்.

சொந்த வீட்டில் ஒரு வேலைக்காரப் பெண்ணை மட்டுமே துணையாகக் கொண்டு வாழ்ந்திருந்தார்.

அவரை மோப்பமிட்ட சிலர், ஒருநாள் இரவு அவர் வீட்டுக்குள் புகுந்தார்கள்.

ஐந்து பேர் அவரைக் கற்பழித்தார்கள். அந்த அம்மையார் மூச்சுத் திணறி இறந்து போனார்.

இறந்த பிறகும் இன்னொருவன் கற்பழித்தான்.

ஆம்; மருத்துவரின் சர்டிபிகேட் அப்படித்தான் கூறிற்று.

நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன! கொலைகாரர்கள் ஓடிவிட்டார்கள்.

பிடிபட்டவர்கள் ஏழு பேர்.

சிறைச்சாலையில் அந்த ஏழு பேரில் ஆறுபேர் "நாளை தூக்குக்குப் போகப் போகிறோமே!" என்று துடித்துக் கொண்டிருந்தார்கள்.

"முருகா முருகா" என்று ஜபித்துக் கொண்டிருந்த்ார்கள்.

ஆனால் ஒருவன் மட்டும் சலனம் இல்லாமல் அமைதியாக இருந்தான்.

சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளை மற்ற கைதிகள் அணுகிப் பேச முடியாது.

நானும் நண்பர் அன்பில் தர்மலிங்கமும் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று, அவர்களை அணுகினோம்.

சலனமே இல்லாமலிருந்தானே அந்த மனிதன், அவனிடம் மட்டுமே பேச்சுக் கொடுத்தோம்.

உடம்பிலே துணிகூட இல்லாமல் சிறைச்சாலை விதிகளின்படி நிறுத்தப்பட்டிருந்த அந்த மனிதன், அமைதியாகவே பேசினான்.

நாளை சாகப்போகிறோம் என்ற கவலை அவனுக்கில்லை. அவன் சொன்னான்:

"ஐயா, இந்தக் கொலைக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. ஏற்கனவே நான் மூன்று கொலைகள் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கொலை செய்யும் போதும் நான் ஊரில் இல்லாதது மாதிரி 'அலிபி' தயார் செய்துவிட்டு, இந்தக் கொலையைச் செய்வேன். மூன்று கொலைகளிலும் நான் விடுதலையானேன். இந்தக் கொலை நடந்த அன்று, நான் விடுதலையானேன். இந்தக் கொலை நடந்த அன்று, நான் மாயவரத்திலேயே இருந்தேன். ஆண்டவன்தான் என்னை அங்கே இருக்க வைத்திருக்கின்றான். பல நாட்களாக எனக்கு வலைவீசிய போலீசார், சரியான சாட்சியங்களோடு என்னைக் கைது செய்து விட்டார்கள். காரணம், கொலை செய்தவர்களிலே மூன்று பேர் என் சொந்தக்காரர்கள். சாட்சியம் சரியாக இருந்தால், எனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது. ஐயா! இந்தக் கொலைக்காக நான் சாகவில்லை. ஏற்கெனவே செய்த கொலைகளுக்காகவே சாகப் போகிறேன்."

அவன் சொல்லி முடித்தபோது, 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழியே என் நினைவுக்கு வந்தது.

அப்போது மாலை ஐந்து மணி இருக்கும். அறைக்கதவு மூடப்படும் நேரம். நானும் தர்முவும் எங்களுடைய அறைக்குத் திரும்பினோம்.

தர்மு தன்னையும் மறந்து சொன்னார்:

"என்னதான் சொல்லையா, செய்யற பாவம் என்றைக்கும் விடாதய்யா!"

ஆமாம், பாவம் கொடுத்த, 'போனஸ்' தான் செய்யாத கொலைக்குத் தண்டனை.

அன்று இரவு நான் தூங்கவே இல்லை.

காலை ஐந்து மணிக்கு, "முருகா! முருகா!" என்று பலத்த சத்தம்.

கைதிகள் தூக்குமேடைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

அப்போது நான் உணரவில்லை. இப்போது உணருகிறேன்.

"என்ன விலை நிர்ணயிக்கிறாயோ, என்ன விலை கொடுக்கிறாயோ, அதே விலை திரும்ப வரும்."

(தொடரும்)

## சிரிக்கலாம் வாங்க

ஒருவர்:- இந்த ஆபீஸ்லே கிளார்க்கா இருந்து என்ன பிரயோசனம்? குண்டூசிக்கு குடுக்கிற மதிப்பைக் கூட எனக்கு தர்றதில்லை
மற்றவர்:- ஏங்க?
ஒருவர்:-குண்டூசிக்கு குசன் இருக்கே!

நோயாளி:- டாக்டர் நீங்க மருந்து சீட்டில் எழுதிக் கொடுத்த மருந்து மட்டும் மெடிக்கல்ஷாப்பில உள்ளவங்களுக்கு புரியலை?

டாக்டர்:- யோவ் அது மருந்து இல்லையா என்னோட கையெழுத்து

ஒருத்தி:-உன் வருங்கால கணவருக்கு சமைக்கத் தெரியாதாமே...?

மற்றவள்:- என்ன செய்யறது. செல்லமா வளர்ந்தவராம் கலியாணம் ஆனதும் ஒரே மாசத்துல சமையல் கத்துக் கிறதா எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறார்.

வாடிக்கையாளர்:- என்னது.... இந்த ஓட்டல்லே பத்தியச் சாப்பாடு தயார்னு போர்ட் மாட்டியிருக்கு?

சிப்பந்தி:- ஓட்டலைச் சுத்தி இரண்டு மூணு பிரசவ ஆஸ்பத்திரிகள் இருக்கே

மகன்:- எப்ப கிளாசுக்கு வந்தாலும் பழங்கதையையே பேசிக் கொண்டிருக்கிறார் அந்த வாத்தியார்.
தந்தை:- யாருடா அது?
மகன்:- எங்கள் சரித்திர வாத்தியார்.

*தலைவருக்கு ஆள் உயரமாலை போட்டவங்க மேலே தலைவர் ரொம்ப கோபமாய் இருக்கிறாரே ஏன்..?*

*அவங்க போட்ட மாலையிலே ஐந்தடி நீளத்திற்கு வெறும் நார் தான் இருந்திச்சு.*

கோபு:- கோட்டிலே Fineகட்டினாயா எதற்கு?
கரன்:- ஒரு பெண்ணை பார்த்து Fine என்று சொன்னதற்கு

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

**பரணீதரன்**

**04**

கொஞ்ச நாட்களாகவே கணவனிடம் ஒரு புதிய மாற்றத்தைக் கண்டாள் அவள். யாருடனும் சேராத மோகன்தாஸ், ஒரு மாத காலமாக 'மேத்தா' என்ற தடியனுடன் நெருங்கிய நட்பு பாராட்டுவதைக் கண்டு துணுக்குற்றாள். அவன் மோகன்தாசை விட வயதில் மூத்தவன். மைத்துனர் கர்ஸன்தாசுக்கு நண்பன். வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவன் அரட்டையடிப்பதும் கண்களை 'உருட்டி உருட்டி'ப் பார்ப்பதும் அவளுக்குச் சிறிதும் பிடிக்காது. ஆண்கள் பார்ப்பது நல்ல பார்வையா கெட்ட பார்வையா என்பதைப் பெண்கள் ஒரு நொடியில் கண்டு பிடித்து விடுவார்களே! தன் கணவனை அவன் தீச்செயல்களில் ஈடுபடுத்துவான் என்று அவள் பயந்தாள்.

அவள் பயந்தது நியாயம்தான். மேத்தா ஒரு முழுச் சோம்பேறி. கர்ஸன்தாசைக் கெட்ட வழிகளில் ஈடுபடுத்தியது போல், அவன் மோகன்தாசையும் மெல்ல மெல்லத் தன் வலையில் சிக்க வைத்து விட்டான்.

மோகன்தாசுக்கு இருட்டைக் கண்டாலே பயம். திருடர்கள், பேய், பிசாசு என்றால் குலை நடுக்கம். இரவில் படுக்கை அறையில் விடி விளக்கு இல்லாவிட்டால் அவன் தூங்க மாட்டான். இதற்காகத் கஸ்தூரி கூட அவனை எத்தனையோ முறை கேலி செய்திருக்கிறாள தனக்குத் தூக்கம் வரவில்லை என்று விளக்கை ஊதி அணைத்திருக்கிறாள். அதற்காக மோகன்தாஸ் சண்டையும் போட்டிருக்கிறான்.

மோகன்தாஸ் ஒரு கோழை என்று மேத்தாவுக்குத் தெரியும். தன் மீது அவனுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட வேண்டும் என்பதற்காக தனக்குத் திருடர்களைக் கண்டால் அச்சமே கிடையாது என்று சொல்லுவான். பேய் பிசாசுகளைக் கண்டால் நாயை விரட்டுவது போல் விரட்டுவேன். என்று வீராப்பு பேசுவான். "டேய் மோகன், நேற்று ஒரு பாம்பை உயிருடன் பிடித்தேன் தெரியுமா?" என்று கூட ஒரு தரம் பொய் சொல்லி இருக்கிறான். "இத்தனை பலமும் தைரியமும் உனக்கு எப்படி வந்தது?" என்று ஒரு நாள் மோகன்தாஸ் அவனைக் கேட்டான். அதற்கு மேத்தா, "நான் மாமிசம் சாப்பிடுகிறேன். நீயும் சாப்பிட்டுப் பார்! அப்புறம் சொல்லுவாய். உன் அண்ணன் கூடச் சாப்பிடுகிறானே. அவனை வேண்டுமானால் - கேட்டுப்பார் ருசியாக இருக்கும். மாமிசம் சாப்பிட்டால் நாம் பலசாலிகளாகி விடுவோம், பிறகு, வெள்ளைக்காரர்களை நம் நாட்டை விட்டுச் சுலபமாக அடித்து விரட்டி விடலாம்" என்றான். அவ்வளவுதான். மோகன் தாஸ் ஒப்புக்கொண்டு விட்டான். தினமும் ஆற்றங்கரையில் 'புலால் புசிக்கும்' கோஷ்டி ஒன்று கூடியது. மேத்தா சமைத்துக் கொண்டு வருவான். எல்லோரும் 'சப்புக்' கொட்டிச் சாப்பிடுவார்கள்.

மேத்தாவின் நட்பு ஏற்பட்டதிலிருந்து மோகன்தாஸ் நேரத்திற்கு வீட்டிற்கு வருவதில்லை. என்பதைக் கஸ்தூரி கவனித்தாள். முன்பெல்லாம் பள்ளிக்



கூடம் விட்டால் நேராக 'வீட்டுக்கே வருவான். இப்போதெல்லாம் எங்கோ, ஊர் சுற்றி விட்டு, வம்பளந்து விட்டு ஏழு மணிக்குத்தான் வந்தான். வந்ததும், 'பசிக்கவில்லை, வயிறு சரியாக இல்லை' என்று ஏதாவது சாக்குச் சொல்லி இரவு உணவைத் தட்டிக் கழித்தான். அவன் அருகில் வந்தாலே மசாலா வாடை வீசிற்று. பாவம், கஸ்தூரி அவள் பயந்தபடியே நடந்து விட்டது.

"ஐயோ, இந்தப் பாழாய்ப் போன மேத்தா, என் கணவரைப் படுகுழியில் தள்ளி விடுவானே! இதை அவரிடம் பக்குவமாகச் சொல்ல வேண்டுமே" என்று தக்க தருணத்திற்காக காத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் நடுநிசி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த மோகன் திடீரென்று 'ஓ' வென்று அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். அவன் முகமெல்லாம் வியர்வையால் பனித்திருந்தது.

"தூக்கத்தில் பயந்து கொண்டு விட்டீர்களா?" என்று கவலையும் கேலியும் கலந்த குரலில் கேட்டாள் கஸ்தூரி.

"ஆமாம்! என் வயிற்றில் ஆடு ஒன்று அலறுவது போல் கனவு கண்டேன். பயந்தே போய் விட்டேன். குடிக்க ஒரு குவளை தண்ணீர் கொடு" என்று கேட்டான். அந்த பயங்கரக் கனவின் அதிர்ச்சியிலிருந்து அவன் இன்னும் விடுபடவில்லை.

கஸ்தூரிக்குச் சந்தேகமேயில்லை, 'மேத்தாவுடன் சேர்ந்து கொண்டு, உண்ணக் கூடாத ஆட்டு இறைச்சியைக் கணவர் வயிறு புடைக்கத் தின்று விட்டு வந்திருக்கிறார். இன்று எப்படியாவது அதைப் பற்றிப் பேசி விட வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தாள்.

"இதோ பார் மோகனா! நான் சொல்கிறேன் என்று கோபித்துக்கொள்ளக் கூடாது. அந்த அயோக்கியன் மேத்தாவுடன் சேராதீர்கள். அவன் பெரிய போக்கிரி. அவன் சகவாசம் வேண்டவே வேண்டாம்" என்று மன்றாடினாள்.

"சீ வாயை மூடு! என் நண்பர்களைப் பற்றிப் பேசுவதற்கு உனக்கு என்ன துணிச்சல்? யாருடன் சேருவது, யாருடன் சேரக் கூடாது என்று எனக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு நீ யார்?" எரிந்து விழுந்தான் மோகன்தாஸ். வாயடைத்துப் போனாள் கஸ்தூரி.

இனியும் பேசாமல் இருப்பது ஆபத்து என்ற முடிவுக்கு வந்த அவள், விஷயத்தை மெள்ள மாமியாரிடம் கூறலாமா என்று யோசித்தாள். "ஐயோ; மோகன்தாஸ் இப்படி மோசமாக நடந்து கொள்ளுகிறான் என்று புட்லிபாய் அறிந்தால் துடித்துப் போய்விடுவாளே! அது மாத்திரமல்ல, நான் அம்மாவிடம் சொன்னேன் என்று தெரிந்தால் இவர் கோபம் இன்னும் அதிகமாகுமே.... கடவுளே நான் என்ன செய்வேன்? ஒன்றும் புரியவில்லையே" என்று துடித்தாள். பிறகு வெகுநேரம் சிந்தித்துப் பார்த்து விட்டு "உங்கள் பிள்ளை ராத்திரியில் சரியாகச் சாப்பிடுவது இல்லை, கொஞ்சம் விசாரியுங்கள்!" என்று மட்டும் சொல்லி வைத்தாள்.

புட்லிபாய் விசாரித்த போது மோகன்தாஸ், வயிறு வலியைக் காரணமாகச் சொல்லி அம்மாவிடமிருந்து தப்பித்துக் கொண்டு போனதை கஸ்தூரி தன் அறையிலிருந்து கவனித்தாள். அடராமா, அம்மாவைத் தெய்வமாக நினைப்பவராயிற்றே. அவரிடமே பொய் சொல்லுகிறாரே அவர். இனி என்னதான் செய்யத் துணிய மாட்டார்?' நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவளால்.

மோகன்தாசுக்கு மனச் சாட்சி உறுத்திற்று. "இனி புலால் உண்ணப் போவதில்லை. அதை மறைப்பதற்காகத்தானே பெற்ற தாயிடமே பொய் சொல்ல நேர்ந்தது.

மேத்தாவிடம் தன் முடிவைக் கூறினான். மோகன்தாஸ் ஒரு முடிவு செய்து விட்டால் அதை மாற்ற முடியாது என்று அறிந்திருந்த மேத்தா, கஸ்தூரிதான் இதற்கெல்லாம் காரணம் என்றும் புரிந்து கொண்டான். அவள் மீது பழி தீர்க்க வேண்டும் என்ற ஒரு பொல்லாத எண்ணம் அவனுக்குத் தோன்றியது: எதை வேண்டுமானாலும் செய்யத் துணியும் கல் நெஞ்சுக்காரன் ஆயிற்றே அவன்.

மோகன்தாசுக்கும் கஸ்தூரிக்கும் இடையே இருந்து வந்த சிறு தகராறுகளை அவன் அறிவான். தன் மனைவியைப் பற்றிய சந்தேகங்களையும் மோகன்தாஸ் சில சமயம் மேத்தாவிடம் உளறியிருக்கிறான். புகைந்து கொண்டிருந்த குப்பையைக் கிளறி விட்டான் மேத்தா. நண்பன் உள்ளத்தில் நஞ்சைச் செலுத்தினான். அது அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது.

"உன் மனைவி நடத்தை கெட்டவள். அவளை நம்பி மோசம் போகாதே."

மாபாதகன், விளையாட்டாகச் சுமத்தி விட்டான் விபரீதப் பழியை, அந்தப்பாவி நாக்கில் நரம்பின்றிக் கூறி விட்டான். அதை அப்பாவி மோகன்தாசும் நம்பி விட்டான்.

அன்று இரவு படுக்கை அறையில் மோகன்தாஸ் முரட்டுத்தனமாகப் பேசினான். மேத்தா சொன்னதை அவளிடம் அப்படியே கூறினான். பதைபதைத்துப் போனாள் ஒரு பாவமும் அறியாத அந்தப் பேதை.

"ஐயோ இதென்ன அபாண்டம்! நீங்கள் என் மீது இந்தப் பழியைச் சுமத்தலாமா?"

"மேத்தா சொன்னான். போதிய ஆதாரம் இல்லாமல் அவன் பேசவே மாட்டான்."

"அவன் சொல்லுவதை நம்புகிறீர்களே! என் வயிற்றில் வளரும் உங்கள் சிசுவின் மீது ஆணை. நான் பரிசுத்தமானவள். என்மீது பழி கூறுபவனின் வாய் வெந்து விடும். அவன் தலையில் இடி விழும்."

"என்ன என் நண்பனுக்கா சாபம் கொடுக்கிறாய்?"

"ஐயோ நண்பனா அவன்? எமன்! அவன் எனக்கு மட்டும் களங்கம் கற்பிக்கவில்லை! உங்களையும் கெடுத்துப் பாழாக்குகிறான். அவனுடன் நீங்கள் சேராதீர்கள். காலில் விழுந்து கெஞ்சுகிறேன்!"

"கேட்க வேண்டிய அவசியமில்லை! உன்னை நான் சந்தேகிக்கிறேன். மனைவியைச் சந்தேகிப்பது கணவனின் உரிமை, தெரிந்துகொள்!"

வயிறும் பிள்ளையுமாக இருந்த நிலையில் கஸ்தூரியால் இந்த அதிர்ச்சியைத் தாள முடியவில்லை. தலை சுற்றியது. துவண்டு போய் அப்படியே கட்டிலில் சாய்ந்து விட்டாள்.

கஸ்தூரிக்கு அடிவயிற்றில் என்னவோ செய்தது. அலைகடல் பொங்குவது போல் ஒரு கொந்தளிப்பு; பிரளயப் பேரிரைச்சல், சாதாரண வார்த்தையா சொல்லி விட்டார் கணவர்?

"நடத்தை கெட்டவள்"

அந்த நிசப்த வேளையில் பயங்கரமாக எதிரொலித்தன அந்த வார்த்தைகள். ஒரு தரம் புரண்டுபடுத்தாள் அவள். வயிற்றில் வளரும் சிசு கை கால்களை உதைத்தது. அப்போது தாய்க்கு லேசாக வலித்தது. பல்லைக் கடித்துக் கொண்டவள், அந்த வலியில் ஒரு இன்பம் இருப்பதையும் உணர்ந்தாள். "எனக்குத் தான் தூக்கம் வரவில்லை. நீயாவது தூங்கக் கூடாதா? கையையும் காலையும் ஏன் இப்படி உதைத்துக் கொள்கிறாய்? யார்மீது உனக்கு ஆத்திரம்? என்னை அழவிடுகிறார் என்று உன்அப்பா மேல் உனக்குக் கோபமா? சே... பாவம்! அவர் நல்லவரடா... யார் சொன்னதையோ கேட்டுக் கொண்டு எதையோ பேசுகிறார். அது நான் செய்த பாவம். நீ தூங்கு" என்று மகவுக்கு மனத்தால் தாலாட்டு இசைத்தாள். ஆனால் தாயோ இரவெல்லாம் விழித்துக் கொண்டிருந்தாள்.

மோகனதாசும் ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டி விட்டானே தவிர, நடந்து போன நிகழ்ச்சிகளைப் பற்றி சிந்தித்துப்பார்த்த போது தன்னையே நொந்து கொண்டான். கஸ்தூரியின் மீது அவனுக்குச் சந்தேகங்கள் தோன்றவே காரணம் இல்லை. அதற்கான ஆதாரங்களே கிடையாது. இருந்தாலும் அத்தனை இளம் வயதில் அப்படியொரு எண்ணம் அவனை ஏனோ அரித்தெடுத்தது. கஸ்தூரி தன்னை மதித்து நடக்கவில்லை என்று தப்புக் கணக்குப் போட்டு, அதற்காக இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்து கொண்டு, சுடு சொற்களால் அவள் இதயத்தைப் புண்படுத்திக் கொண்டிருந்தான். இந்நிலையில் தான் மேத்தா போட்ட சொக்குப் பொடி அவனை மயக்கி விட்டது.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### கொஞ்ச நேர மனைவி

ஒரு தடவை ஆபிரகாம் லிங்கன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அமெரிக்கா நாட்டு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

லிங்கனைஅடுத்து ஓர் இளம் பெண் அமர்ந்திருந்தாள்.

லிங்கன் அவளை நோக்கி, "நான் புகைப்பிடிக்கலாம் என நினைக்கிறேன். உங்க்ளுக்கு ஏதும் ஆட்சேபனை இல்லையே!" என்று மரியாதையுடன் கேட்டார்.

"வீட்டில் உங்கள் மனைவி முன்பு எவ்வளவு அடக்கமாக புகை பிடிப்பீர்களோ அந்த மாதிரி புகை பிடியுங்கள்" என்றாள் அந்த இளம் பெண்.

"என் மனைவியின் முன்னால் நான் புகை பிடிப்பது இல்லை" என்றார் லிங்கன்.

"அப்படியா, தயவு செய்து நான் ரயிலை விட்டு இறங்கும் வரை என்னை உங்கள் மனைவியாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் அந்த இளம் பெண்.

### ஆங்கிலம் தெரியாதா?

சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

அவர் அமர்ந்திருந்த அதே பெட்டியில் சில இளைஞர்களும் இருந்தனர்.

அவருடைய துறவிக் கோலத்தைக் கண்ட இளைஞர்கள் அவருக்கு ஆங்கில மொழி தெரியாது என்று எண்ணிக் கொண்டு அவரைப்பற்றி கேலியும் கிண்டலுமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

சுவாமிகள் அவர்கள் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் - பொருட்படுத்தாமல் மௌனமாக அமர்ந்திருந்தார்.

இறுதியில் எல்லாரும் இறங்க வேண்டிய ரயில் நிலையம் வந்தது.

இளைஞர்களுடன் சேர்ந்து விவேகானந்தரும் இறங்கினார்.

விவேகானந்தரை வரவேற்க ஒரு பெரிய கூட்டம் ரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தது.

சுவாமி விவேகானந்தரைக் கண்டதும் திரண்டிருந்த மக்கள் வாழ்த்தொலி எழுப்பி அவருக்கு மாலைகள் அணிவித்தனர்.

தம்மை வரவேற்க வந்த கூட்டத்தினருடன் விவேகானந்தர் சரளமாக ஆங்கில மொழியில் உரையாடியதைக் கண்ட இளைஞர்கள் திகைப்பும் - வியப்பும் அடைந்தனர்.

அவர்கள் சுவாமி விவேகானந்தரின் பாதம் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

## வரவு!

பேதையும் பேரிளம்
பெண்ணும்
தாம்நோக்கி நகுவது
ச(மாதான)(ங்குநாத)த்தின்
வரவா்லோ!

*தமிழன்,*
*உசன்.*

## யாரறிவார்!

தடையின்றி சிரியுங்கள்
ஏனெனில்!
உங்கள் சிரிப்பு ~ இவ்
உலகில்
ஒரு சில வினாடி தானோ
யாரறிவார்!?

*சா.மேரிசானினி*
*யாழ்/கன்னியர் மடம்*

## பேராண்டியே..!

புன்னகை மலர்ந்த
முகத்துடன்
இனிய வார்த்தை கூறி
என் மனதைக்
கனிய வைத்த
என் பேராண்டியே.

*மு.குணபாலன்*
*அளவையூர்*

## அம்புலிக் கதைகள் கேட்டிடணும்

நித்தமும் ஒற்றுமை
நிலைத்திங்கு
நிம்மதிக் காற்று
வீசிடணும்
அப்போது நானும்
பாட்டியிடம்
அம்புலிக்கதைகள்
கேட்டிடணும்!

*சூரியதிலா*
*ஈச்சமோட்டை*

## ரசனை

வாழத்துடிக்கும் குழவியும்
வாழ்ந்து கெட்ட கிழவியும்
வாசகரின் மனத்தினை
வருடி விட்ட நிழற்படம்
சங்குநாதத்தில் கண்டதும்
வாயில் வந்த சொற்களை
வசன கவிதையாக்கியே
வாசகர்கள் ரசிக்கவே
வரைந்து இங்கு தந்துள்ளோம்.

*நீர்வை*
*மணி*

## நீயும் நானும்.....!....!

"உற்றுப் பார்த்தேன் உன் வாயை
உனக்கும் பல்லு இருக்கவில்லை
தடவிப்பார்த்தேன் என் வாயை
தனிப் பல் கூட எனக்கில்லை
பல்லில்லாத காரணத்தால்
நீயும் நானும் ஒன்றானோம்"

*அ.டினோஷா,*
*கண்டுக்குளிமகளிர் கல்லூரி*

## அன்பு!

வம்சத் தொடர்ச்சியின்
வடிவமிது
முதுமையில் மழலையின்
இனிமை
பாசத்தொடர்ச்சியின்
படலமிது
வாச்மலராக பிஞ்சு
நேச மலரிடம் அன்பு
பயில்கிறது.

*மு.தவேந்திரன்*
*சண்டிலிப்பாய்.*

## அழமாட்டேன்!

அம்மாவும் வேலைக்கு
அப்பாவும் வேலைக்கு
அம்மம்மா நீ இருந்தால்
அழமாட்டேன் ஒரு நாளும்

*ரஜினி ஏபிரகாம்லிங்கன்*
*பாஷையூர்*

## ஆறுதல் தந்திடுமா!

காணாமற் போன தன்
மகனை எண்ணி
கலங்கி நிற்கும் இத்
தாய்க்கு
இப் பிஞ்சுக் குழந்தையின்
கொஞ்சும் சிரிப்பு
ஆறுதல் தந்திடுமோ?
யாரறிவார்?

*வி.டர்மினி*
*மானிப்பாய்.*

## கலையும் காரிருள்!

வானத்தைக் கவ்வியிருந்த
காரிருள் கலைகின்றது!
வெளிச்சத்தின் மெல்லிய
கீற்றின் பிரவேசம்
பட்டி தொட்டியெங்கும்
பாட்டி முதல் பேரன் வரைக்கும்
மீண்டும் மகிழ்ச்சி
முகிழ்ப்படைந்து கொள்கின்றது

*பிரபா*
*சுழிபுரம்.*

## புன்முறுவல்!

"முற்றிப் பழுத்த
பழமொன்று
முன்னால் மகிழ்ந்து
இருக்கையிலே
முளை விட்ட
அரும்பொன்று
புன் முறுவல் பூக்குதிங்கே"

*இ.அ.அமலரட்ணம்*
*யாழ்ப்பாணம்.*

## சிரிப்பு!

மானிடனே!
வாழ்க்கையின் முடிவை
எண்ணி
அனுபவச் சிரிப்பு
வாழ்க்கையின் ஆரம்பத்தை
எண்ணி
அறியாச் சிரிப்பு

*வி.விஜேந்திரா*
*யாழ்.பல்கலைக்கழகம்*

## அன்னை பூமியிது!

அன்னை தந்தையை
இழந்து விட்டாய்! – ஆனாலும்
அன்பொழுகப் பார்க்கிறாய்!!
ஆண்டவனே நீதானப்பா!!
எனக்கு எல்லாமே நீதான்!
உனக்கும் நானே தான்!
அன்னை பூமியிது!
அதில் வாழ்வதே!
ஆனந்தம் கண்ணே!

*மாருதி*
*ஆவரங்கால்*

## கற்றுக் கொள்!

ஏய் பாட்டி!
வெண்ணிலா பாட்டு
சொல்லி
என்னை ஏமாற்றி
விடாதே.....! மாறாக
போர்க் கழுகிடம்
இருந்து
உயிர் பிழைக்கும் -
வழியை
கற்றுக்கொடு.

*N.சசிவர்ணன்*
*பண்டத்தரிப்பு*

## சந்தோஷம் தருமோ?

அம்மம்மா... அம்மம்மா
அப்பாவும் அம்மாவும்
எனக்கென்னம்மா தருவாங்க?
எப்பம்மா வருவாங்கள்...?
சமாதானம் வருதாமே...?
சந்தோஷம் தருமாமே...?

*நா.துஷா*
*கொக்குவில்.*

## வசதியற்ற வாழ்வு!

வருந்தொடர் துயர்களினால்..
இருப்பிழந்திங்கு
தெருவினிலிருக்கையிலே..
தளிரே!
உடுத்தியுனை அழகு
பார்க்கக் கூட
உண்மையிலித் தேசத்தில்
இம் மூதாட்டிக்கு
வசதிவாய்ப்பில்லையம்மா!

*சிந்துயா*
*திருநெல்வேலி.*

## பாட்டியும் பாலகனும்!

பல்விழுந்த பாட்டியின்
பழங்கதை கேட்டிடும்
பாலகனின் குதூகலம்
படத்திலே பார்த்திட
பார்ப்பவர் மனத்திலே
பாட்டெழுத வருகுதே
பத்திரிகையிலே இதைப்
பார்ப்பவர் சிலருக்கும்
பாடிடும் ஆசை வராதோ!

*தி.மயூரகிரி*
*யாழ்.இந்துக்கல்லூரி*

## சொல்லாச்சி...!

இஞ்சார் குஞ்சி ஆச்சி..
இப்பானே கொஞ்சம்;
இப்படி இருக்கிறம்
இல்லாட்டி இப்பவும்
இருக்கோணும் பங்கருக்க!
இல்லியே சொல்லாச்சி..!

*தம்பியண்ணா*
*மீசாலை*

## தேவையில்லை!

பாட்டி இனி
'பாசும்' தேவையில்லை
பால்மா வாங்கவென்று
பாவம் நீ அலையத்
தேவையில்லை!
பாரு..பாரு...சமாதானம
வருது!
பாரு..பாரு பாரம் குறையப்
போகுது!

*செ.செந்தூரன்*
*உஷன்*

## உதயச் சிரிப்பு!

உதயச் சிரிப்பு கண்டு
உள்ளம் மகிழ்ந்த பாட்டி
கவலை மூட்டைகளை
ஏற்றி
அனுப்பிவிட வண்டி
நிற்கிறதோ!

*ம.லதா*
*மண்டைதீவு*

## எத்தனை?

நான் கூட
இரண்டு இடம் பெயர்வுகளை
இன்றுவரை சந்தித்து விட்டேன்
வரண்டு போன உன் தேகம்
எத்தனை இடம் பெயர்வுகளை
எதிர் கொண்டிருக்குமோ?

*புதுமை*

# மௌனத்தீச்

## பாதை திறப்பு!

ஊர் இழந்து
உறவைத் தொலைத்து
உறவான..
வஞ்சமில்லாக் கொஞ்சும்
நெஞ்சங்கள்,
வார்த்தை பகரும்
பக்குவம், பாதைதிறப்போ!

*சி.பவனராணி*
*இராஜ வீதி.*

## பரிதாபம்!

ஷெல் தாக்குதலில்
செத்துப் போன தாயைத் தேடி
வன்னிக் குழந்தையொன்று
தன் எதிர் காலம்
தெரியாமல்
சமாதான வரவையெண்ணி
வாய்விட்டு சிரிக்கின்றது

*ப.உதயகுமார்*
*அளவெட்டி*

## கவலை வேண்டாம்!

கண்ணே பாப்பா கவலைப் படாதே
உன் உயர்விற்காக உதிரம்
சிந்துவேன்
உன் விடிவுக்காக எதையும்
தாங்குவேன்
உன் வாழ்வுக்காக உயிரையும்
விடுவேன்

*க.செபநேசன்*
*யாழ்ப்பாணம்*

## இன்பமழை சொரிகிறது!

மன அமைதியை தேடும்
இம்முதிய தாய்க்கு
அன்பே வடிவான மழலைக்
குழவி
இன்பமழை சொரிகிறது.

*ஈஸ்வரன்*
*யாழ்ப்பாணம்.*

## அஞ்சாதே!

பிஞ்சேயுன் பெற்றோர்கள்
புதைகுழிக்குப்
போயினரோ?
அஞ்சாதே!
அருகிலுனை
அணைப்பதற்காய்...
பாசம் பொழியும்
பாட்டியிருக்கிறாள்!

*க.சிந்துதாசன்*
*பொலிகையூர்*

## வாழ்க்கை

கனவுகளையும்
கவலைகளையும் மனதினுள்
புதைத்து விட்டு
மழலை முகம் பார்த்து
ஆறுதல் அடைகின்றேன்.

*எஸ்.மதி,*
*அல்வாய்.*

## மொழியாதோ.....?

ஊரின்றி உறவின்றி
உதவுபவர் யாருமின்றி
உழல்கின்ற சிறு பூவே
மௌனமாய்ப் புன்னகைத்து
நீ பேசும் மொழி யாதோ?!

*பிறேம்*
*கோப்பாய்*

## சிந்தனை!

"பாட்டிக்கு முத்துப் பல்
காட்டிடும் சேயே!
நாட்டிற்கு விடுதலை
வேண்டியா
உன் சிந்தனை
ஓடுகின்றது"

*கண.ஜீவகாருண்யம்*
*யாழ்ப்பாணம்*



## புன்முறுவல்!

இளையவனே!
உன் புன்னகையின்
மோனம் தான் என்னே!

*தர்ஷி*

## பார்வை...!

பாட்டியின் பார்வை
பையனைக் கேட்கிறது
ஐயா - நீ
நாட்டுக்கா?
வீட்டுக்கா?

*சு.ப.தர்சினி*
*அச்சுவேலி*

## பேசுகிறது..!

சொல் கொண்ட செல்வந்தர்
எல்லாம்
சினம் கொண்டு மோத
பல்லில்லாப் பருவங்கள்
இரண்டு
புரியாத மொழியை புரிந்து
பேசுகிறது.

*K.ஜெயக்குமார்*
*மட்டுவில் கிழக்கு.*

## சமாதானம் பிறக்குமா?

நீங்கள்
ஊர்விட்டு ஊர்
வந்தீர்களா?
நாடு விட்டு நாடு
வந்தீர்களா?
என்ன நிம்மதியாய்
சிரிக்கின்றீர்கள்?
நாளை சமாதானம்
பிறக்கும் என்றா?


*வி.மயூரதாஸ்*
*வராத்துப்பளை*

# ...ன் தேடல்கள்

பிரிவு தந்த உறவு!

...புச் செல்வா
அப்பாவும் அம்மாவும் செம்மணியில்
புருசனும் புள்ளையும் களுத்துறையில்
...த்தத்தில் நானும் நீயும் அநாதைகள்
...லைகள் மறந்து கொஞ்சம் சிரிப்போமா

க.ஸ்ரீதேவி



தணியுமா?

...தத்
...லமுறை இடைவெளிகளைக்
...ந்தீயினும்
...ரியுமா போரின் கொடூரம்.

தமிழ்த்தாடி

உணர்வுகளின் பரிமாற்றம்

...ன்மையான இரு
உள்ளங்கள்
...வ ஒன்றாகக் கூடி - தம்
...ர்வுகளைப் பரிமாறும்
வேளையில்
... உள்ளத்தின் ஏக்கத்திற்கான விடை
...பழத்திடம் இருந்த,
...க்கின்றது போலும்.

பேரினா
திருநெல்வேலி.

தேடல்

...தம் ஓய்ந்தவேளை
...தாபிமானம் முளைவிட்ட வேளை
...ண்ட பயணத்தின் இடைவேளை
...ந்தவை போது மென்று
...ளை மலரப்போகும் சமாதானத்தை
...கள் முகங்களில் தேடுகிறீர்களா?

K. தயாளன்
சாவகச்சேரி

அன்பின் குமுறல்!

...து முதிர்ந்த என் முகத்தில்
...ன தேடுகிறாய் அன்பையா?
...லை அம்மாவையா நானும்
...ர் போல் ஏங்கும் ஒரு
...ந்தைதான் துன்பம்
...ண்டாம் என்னுடன் வா

R. கமலாதேவி
கதுமலை

அன்பு கிடைக்குமா?

...ளைகளிடத்தில் அன்பு இல்லை
...றாரிடம் அன்பு இல்லை
...மழலை மொழி பேசும்
...ந்தையிடம் அன்பு கிடைக்குமா?
... முதிய அன்னைக்கு!

ஆதி.
நாவலர் வீதி

அறியாமை

காலச் சக்கரம்
பின்னிருப்பதைக்
காணத் தவறியதனால்
பழுத்தோலையாகி விட்ட
பாட்டி முகம் பார்த்து
குருத்தோலையாய் இங்கு
குழந்தை சிரிக்கிறது

ஜெ.உமாசுதன்,
வடலியடைப்பு.

துயரங்கள் ஓடிவிடும்!

பாட்டியுடன் குலவும்
பச்சைக் குழந்தை
உனக்கு
நாளைய விடியலில்
நலங்கள் பல
காத்திருக்கும்
பூஞ்சிரிப்பு என்றும்
புதுமலராய் நிலைக்கட்டும்.

ப.சைந்தவி
மட்டுவில்

சீராய் மனதில் பதிப்பேன்!

பாட்டி! இனிய பாட்டி
பாட்டுச் சொல்லித்
தருவாய்
சேர்ந்து இசையைப்
பொழிவேன்
சிறந்த கதையும் சொல்லு
சீராய் மனதில் பதிப்பேன்

கவிஞர்
கந்தமுருகேசதாசனார்

இறைவன் சிரிப்பு

மழலையின் சிரிப்பினில்
இறைவனைக்
கண்டவர்களே!
இன்று தான்!
இறைவனின் சிரிப்பினில்
மழலையைக் கண்டீர்
போலும்!

எஸ்.எம்.எஸ்.ஷால்டர்
சமரபாகு

பாட்டி சிரி!

பாட்டி உன்னை
பீடித்திருந்த துன்ப மெல்லாம்
என் வரவின் பின் தொலைந்த
தென்ற சந்தோஷமா உனக்கு?
சிரி பாட்டி..... இன்னமும்
உரக்கச் சிரி
அதைப் பார்த்துக் கொண்டே
நான் பசி மறப்பேன்!

வி.ஷாந்தினி
இமையாணன்

நேசம்!

வீசும் நல்வாசம் போல்
வேஷம் மோசம் அறியா - நம்
பாசம், தேசம் பேசும் வண்ணம்
வாழட்டும்.

க.நா.முகுந்தன்

புன்னகை!

சமாதானம் ஏற்பட்டு
ஊருக்கு போகின்றோம்
என்று புன்னகைக்கிறாயா?
உன் பேரனுடன்

T.டிலக்சனா
நவாலி

மௌனமாய் ஒரு மகிழ்வு!

மௌனத்தின் தேடலுள்
உம் மகிழ்வு கண்டோம்
மண் வெளிக்கும் சேதி
சொல்லி
மகிழக் கண்டோம்
கண்சுருங்கக் கதை பேசிக்
களிக்கும் உங்கள்
மண்மகிழ்வு நிலைத்திருக!
வாழத்துகின்றோம்.

ச.சாரங்கா
சங்கத்தானை

தாற்பரியம்!

துப்பாக்கி ரவைகளின்
துவம்சம் செல்லடி
சிதறிப்போன உறவுகள்
இத்தனைக்குப் பிறகும்
இளந்தளிரின் புன்னகை
இதற்குட் தான்
புதைந்திருக்கின்றது
தமிழனின் தாற்பரியம்

த.ஜீவராஜ்
தம்பலகாமம்.

தினமும் இனி!

ஓ...... தாய்க்குலமே
கவலைவிடு நிலாக் காட்டி
உணவு உண்டது
அக்காலம்
இக்காலம் நிலவுக்கே
உணவு
ஊட்டுவது! விடு கவலை
பிறக்கிறது விடிவு.

இ.ஷோபா
யாழ்ப்பாணம்

இனியும் வேண்டும்!

பாசத்தின் உறைவிடமாய்
பவ்வியமாய் எனைக்காத்து
இதய ஸ்தானத்தில்
உயர்ந்து நிற்கும்
தாய்மைத் தெய்வமே!- உன்
இதமான வாயுரை - என்றும்
எனக்கு வேண்டும்!!

பிரஷா,
நல்லூர்.

சிரிப்பு வருகிறதா....?

பிஞ்சு உள்ளம் நிறைந்த
பிஞ்சு பாலகனே
உனக்கே இந்த
உலகத்தை பார்க்க சிரிப்பு
வருகிறதா..??

யு.நிசார்மினி
சுழிபுரம்.

இளந்தளிரே.......!

ஓ இளந்தளிரே உன்
இதழ்களில் ஏனிந்த
இளநகை?
ஓ சமர்க்களம் சென்ற
சகோதரனை
சந்திக்கப் போகும்
சந்தோஷமா?
இல்லை களுத்துறையில்
வாடும் தந்தையை
காணப்போகும் களிப்பா?

வா.செந்தில்குமரன்
சாவகச்சேரி

வென்று காட்டு!

வேலனுக்கு நினைந்து
பெற்ற மகவே!
காலன்கள் இங்கு கனபேர்
கைவசம்
சூலத்தை எடுத்தந்த
வேலன் மகனாக
ஞாலத்தை வென்று
காட்டு.

கு.சிவநேசன்,
யாழ்.பல்கலைக்கழகம்

கவர்ந்ததோ!

பிஞ்சே! - உன்
பஞ்சு உள்ளம்
பாட்டியின் கதையை
பார்வையால் ரசிப்பதேன்?
ஓ.................
இன்றைய எம்
ஈழத்தின் செய்தி
உன்னையும்
கவர்ந்ததோ.

எஸ்.அம்பிகா
யாழ்பல்கலைக்கழகம்

சக்கரம்

குழந்தாய்!
நீ சிரிப்பது
பாட்டியின் பல்லிற்கா?
சமாதானத்தின்
உதயத்துக்கா?
அட, உனக்கும் தெரிந்து
விட்டதா?
இதெல்லாம் - ஒரு
வண்டிச் சக்கரம் என்று!

ஆதி.அஜந்தன்
அனலையூர்

உரைக்கும் வார்த்தை!

நெஞ்சை நிமிர்த்த
வேண்டி
பிஞ்சைத் தட்டிக் கொடுக்க
முனையும் மூதாட்டி
முன்னே உரைக்கும்
வார்த்தை
''கேண்மையுடன் பண்பை
நீயும்
உண்மையுடன் காத்திடு
என்பதோ..?!''

சி.சிறிதர்,
அல்வாய்.

பிஞ்சின் ஏக்கம்!

காலைப் பொழுதில் - நான்
கண்விழிக்குமுன்னே
வேலைக்குப்போன அம்மா
வீட்டுக்கு வர,
மாலைப்பொழுதாகி - அந்தி
மயங்கிவிடும் - புட்டிப்
பாலையாவது தாருங்கள் பாட்டி
புசித்து விட்டு நானும்
உங்கள் மடியில்
கொஞ்சி விளையாட!

சுபா
திருநெல்வேலி.

நகைக்கிறதோ....?

சமாதானம் மலர்ந்து
யுத்தம் ஓய்ந்து -
இந்நாட்டில்
தமிழருக்கு விடிவு வந்து
விட்டதோ - அன்றி கோடை
கால மழை மேகமோ?
என்று
நகைக்கிறதோ - இம்
மழலையும்! .....

ந.சாரங்கன்
நல்லூர்

கண்களின் மொழி!

கண்கள் பேசும் பாஷை
யாருக்குப் புரியும்?
இரு ஜோடி கண்களும்
என்ன பேசுகின்றன?
சமாதானப் பேச்சா?

ச.தமிழினி
சுழிபுரம்

மகிழ்வு!

காவோலையும்
குருத்தோலையும்
கலந்து மகிழும் வாழ்க்கை
கண்டங்களை கடந்து
விட்டால்
கனவிலும் கிடையாது.

P. கௌரிதாபன்

தேடுகின்றேன்!

தேசப்படம் வரையப்பட்டிருக்கும்
நேசம் பொதித்த உன்முகத்தில்
ஆசைப்பட்டுத் தேடுகின்றேன்
அர்த்தங்கள் பலதை

கிரிசாந்
திருநெல்வேலி

வழி!

என்
அம்மாவும் அப்பாவும்
யுத்தத்திற்கு பலி
அம்மம்மா தான் இனி
என் வாழ்க்கைக்கு வழி

ஸ்ரீ.சோபிகா,
வட்டுக்கோட்டை.

சிரிப்புத்தானே வரும்...!

தாயிழந்து தவித்து
முகாரி கேட்டு வளரும்
மழலைக் குஞ்சுக்கு
பாட்டியின் தாலாட்டைக்
கேட்க
சிரிப்புத்தானே வரும்...!

சி.திருச்செந்தூரன்
யா/நெ/ம/ம/வி.

## மௌனத்தின் தேடல்கள் - 05



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத் திகதி :- 31.03.2002
அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்-05
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# பல கலையும்

சிறுகதை

P. கௌரிதாபன்

அன்று அவள் மனம் அப்படியே நடுங்கிப் போய் விட்டது. என்றும் இல்லாத பெரும் மாற்றம். முகம் சுழித்துக் கூட பேசாத அவள் கணவன் முகம் பார்த்துப் பேசி முழுதாய் இரண்டு நாட்கள் கடந்து விட்டதன் துயரம் மறையும்முன்னரேசுடுவார்த்தை "ஆட்டக்காறி ஆடவா கோயிலுக்கு?" விசம் தீட்டிப் பாய்ந்த வார்த்தைகளைதாங்க எப்படித் தான் முடியும்.

அவள் சுமி என்ற சுமித்தா பல்கலைக்கழகத்தின்மூன்றாம் வருடமாணவி. படிப்பை பாதியிலே நிறுத்தி விட்டு தன் மனதிற்குப் பிடித்த பெற்றோர் நிச்சயித்த திருமணம்.கணவன் சுதாகரன் அரச வங்கி ஒன்றில் கணக்காளன். கைநிறையச் சம்பளம். அழகான குடும்பம். இனிமையான வாழ்க்கை சுமார் ஆறுமாதம் கடந்திருக்கும் இனிமை திடீரென பாதாளத்தில் விழுந்தது.

"என்ன சுதா இண்டைக்கு இவ்வளவு வெள்ளன வேலையால வந்து விட்டியள். உடம்புக்கு ஏதாவது......?" கேட்டுக் கொண்டு இரண்டெட்டில் கணவனை அடைந்தாள் சுமி ஆனால்,

மிக விரைவாக மனைவியைதவிர்த்து விட்டுள்ளே சென்று குளியலறைக்குள் மறைந்தான் சுதா. கதவு வேகமாக சாத்தப்பட்டது.

சாத்தப்பட்ட கதவு தன் முகத்தில் மோதிவிட்டது போல துடித்து விட்டாள் சுமி.

இந்த மாற்றம். பாராமுகம் இரு நாட்களாக தொடர்ந்தது. அதன் வெளிப்பாடு இன்று.

இன்று வெள்ளிக்கிழமை. அத்தோடு விடுமுறை இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. கணவனை சமாதானப்படுத்த என நினைத்த சுமி வெளிவிறாந்தையில் அன்றைய தினசரியில் மூழ்கிப் போயிருந்த கணவனின் அருகே வந்தமர்ந்தவள்......

"சுதா இண்டைக்கு வெள்ளிக்கிழமை........" என்று இழுத்தாள். சலனமில்லாமல் இருந்த சுதா சற்றே பத்திரிகையையிறக்கி மனைவியை கோபமாய் வெறித்தான்.

"ஏன் வெள்ளிக்கிழமை எண்டது எனக்கு தெரியாதோ? நீ என்ன புதுசாய் சொல்லுறாய்" அன்பாய், ஆசையாய்,காதலாய் பேசிய மனைவியின் உணர்வு மீது வெறுப்பென்றுவார்த்தைகளை விசிறி அடக்கினான்.

காதலால் சுண்டிச் சிவந்திருந்த அழகிய சுமியின் முகம் மழைக்கால மேகம் போல இருண்டு வந்ததை கண்டதில் ஒரு சந்தோசம் அவனுக்கு. ஆனால் எத்தனை வெறுப்பைக் காட்டினாலும் சலித்திடாத தமிழிச்சி அவள். மீண்டும் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

"இல்ல இண்டைக்கு கோயிலுக்கு போட்டு வருவமே..... தயங்கித் தயங்கி வார்த்தைகளை வெளி விட்டாள் சுமித்தா.

என்ன கோயிலுக்கா! ஆட்டக்காறி ஆடவோ கோயிலுக்கு. மிக வேகமாய் அவளின் செவிப்பறைகளைத் தாக்கியது. சுதாகரனின் வார்த்தைகள்.அவனுக்கே தெரியும், அந்த வார்த்தைகள் மிக அதிகம் என்று.

ஆனால் என்ன செய்ய. தன்னுள்ளே கோபத்தை இதைவிட வேறு வழிகளில் வெளிப்படுத்த அவனால்முடியவில்லை. மனதின் ஒரு மூலையில் மிகப் பயங்கரமான வலிதான் அவனுக்கு. அந்த வலிக்கு காதல் என்னும் பெயர் என்பதெல்லாம் அவனுக்கு நன்றாய் தெரியும். ஆனால் என்ன செய்ய.......

துடித்து பதைபதைத்து நிமிர்ந்தாள் சுமி. பிறந்து வளர்ந்து படித்து திருமணம் வரை இப்படி ஒரு சொல்லை இது வரை கேட்டதில்லை. ஆனால் இன்று கணவன் என்ற உரிமையில் அந்நியன் ஒரு



வன்! ஆக ஆறுமாத அறிமுகம் கொண்ட ஒருவன் இப்படியான வார்த்தைகளை வீசுவதா? அழக்கூட அவளால் முடியவில்லை. எங்கோ துடிக்கிற துடிப்பில் இதயங்கூட வெடித்து விடுமோ என்று கூட நினைத்தாள். என்ன செய்ய, ஏது செய்ய, திருப்பி கணவனை அதே போல் வார்த்தைகளால் சிதறடிக்க அவளுக்கும் தெரியும். ஆனால் முடியாது ஒரு போதும் அவளால் முடியாது. காதலித்து வந்த கணவன் அல்ல, கணவனாக வந்து காதலிக்கப்பட்டவன். ஒரு போதும் அவனை விட்டுக் கொடுக்க அவள் மனம் இடங்கொடுக்கப் போவதில்லை ஏனென்றால் அவள் பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்.........

அன்றைய வெள்ளிக்கிழமை அந்த நிமிடமே அஸ்தமித்து விட்டது. இருவருக்கும் தனித் தனியே சாப்பாடு, தனித்தனியே படுக்கை, ஒருவர் எதிரில் வந்தால் மற்றவர் திரும்பிச் செல்லுதல். இப்படியே ஒரு வீட்டுக்குள் மேலும் இரண்டு நாட்கள். இருவருக்கும் தவிப்புத்தான்.

"என்ன சுமி அதற்குள்ள சாப்பிட்டாச்சா? இஞ்சவா நான் இருக்கிறேன் இன்னும் கொஞ்சம் சாப்பிடு........

சொல்ல சுதாவுக்கு ஆசை தான்.

"ஏன் இண்டைக்கு வேலை அதிகமா..? நான் தலையை பிடித்து விடவோ...?

கேட்க சுமிக்கும் ஆசை தான். ஆனால் இருவரின் இதயமும் மற்றவரால் உடைக்கப்படுமோ என்ற பயம் இருவரையும் தடுத்து விட்டது.

அன்று திங்கட்கிழமை கணவன் கிளம்பிச் சென்ற பின்னர். வழக்கம் போல் கணவன் எடுத்துப் போட்டிருந்த உடுப்புகளை துவைப்பதற்காக எடுத்தவள் கீழே கிடந்த அந்த வெள்ளைப் பேப்பரை முதலில் கவனிக்கவில்லை. ஆனால் அவள் வாழ்க்கையில் புயல்கிளம்ப காரணமான கடிதம் தான் அந்த வெள்ளைப்பேப்பர். விடுமா அவளை.

தற்செயலாக அதைக் கண்ட சுமி எடுத்துப் பிரித்தாள். பிரித்ததும் புரிந்து விட்டது, தன்னுடைய கையெழுத்தெண்டு. ஆனால் எப்போது இப்படி ஒன்றை எழுதினேன் என்றது அவள் நினைவுக்கு வரவில்லை. மெல்ல கடிதத்தை படிக்கத் தொடங்கினாள்.

அன்புள்ள என் உயிர் காதலன் மதிவதனுக்கு!

நீங்கள் இங்கே நலம். நான் உங்கு நலமா.........

புரிந்து விட்டது. அவளுக்கு அழகான காதல் கடிதம் என்று மட்டுமல்ல. எப்போது யாருக்கு தான் அதை எழுதியது என்றும். ஆனால் அது எப்படி தன்னுடைய கணவன் கைகளிற்கு கிடைத்தது என்று மட்டும் விளங்கவில்லை. என்ன செய்ய? எப்படி இந்தப் பிரச்சனையை தீர்ப்பது. இடி தாக்கிய பச்சை மரம் போல் சுவரோடு சாய்ந்தாள் சுமி....

பல்கலைக்கழகத்திற்கு அவள் அன்று புதுமுக மாணவி. மெலிதான ஒரு நடுக்கத்துடனேயே சென்றாள். வாசலில் இறங்கி போட்டிருந்த பாட்டாச் சத்தம்எழுப்பாமல் மெல்ல நடந்தாள். இன்னும் அவளைப்போல் எத்தனையோ படபடத்த இதயங்கள் ஆண் பெண் பேதமின்றி வந்து கொண்டு இருந்தனர். திடீரென ஒரு முரட்டுக் குரல் "ஏய் நீதான் இஞ்சா வா........"

மெல்லத் திரும்பிப் பார்த்தாள் சந்தேகமில்லை. வேப்ப மரத்தின் நிழலில் சில மாணவர்கள் ஐந்து அல்லது ஆறுபேர் இருக்கலாம். தன்னைத்தான் கூப்பிடுகிறான். மெல்ல சைக்கிளை அவர்களை நோக்கித் திருப்பினாள்.

"ஏய் கெதியா வாவன்டி..... ஆடி அசைஞ்சு வா்றதிற்கிடையில் வகுப்புத் தொடங்கப் போகுது"

தானும் படிக்கத்தான் வந்தது என்றதை மறுக்காதவன் போல சீறினான் ஒருவன்.

வேப்ப மரத்து நிழலில் நின்ற அவர்கள் அவளுக்கு "வேப்பமர உச்சியிலே பேய் ஒன்றுஆடுதெண்டு..."பாடலை நினைவு படுத்தினார்கள். பொங்கி வந்தசிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"என்னடி பெயர்"......இன்னொருவன் கேட்டான். "சுமித்தா...." தயங்கி வந்தது பதில். "என் உனக்குகொப்பர் இல்லையா...

"இருக்கிறார்"

"அப்ப அவற்ர பெயரையும் சேர்த்துச் சொல்லு சரியா"....சுமித்தா "கதிர்காமநாதன்" சரியாகக் கூறிவிட்ட திருப்தி அவளுக்கு. "என்னடிகதிர் காமநாதனோ"... மச்சான் பெயர் சரியில்லை என்ன செய்வம். அவன் திரும்பவும் கேட்டான். "அப்ப பெயரை மாத்திடுவோம்" மற்றவன் பதில் கூறினான் கழகத்திற்கு படிக்க வந்ததை மறந்து பெயர் சூட்டும் விழா நடத்தியது மாணவர் கூட்டம்.

"இண்டையில இருந்து உன்ர் பெயர் திருமதி சுமித்தா மதிவதனன் ...சரியோ" ஆர்கேட்டாலும் இப்படித்தான் சொல்ல வேண்டும்.

இரண்டொரு தடவை அப்பெயரை அவளிடமே சொல்லக் கேட்டார்கள், அத்தோடு அவளைப் போக விட்டார்கள். பல நாட்கள் நீண்ட இந்தத் தொல்லை சில மாணவர்களின் படிப்பிற்கே முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால் அவள் மட்டும் தொடர்ந்து கொண்டே இருந்தாள்.

அன்றும் அப்படித்தான் அவர்களின் பகிடிவதை தாங்க முடியாமல் "ஏன் நீங்களெல்லாம் படிக்க வாறியளோ அல்லது இப்படி மற்றவையை கரைச்சல்படுத்த வாறியளோ?" வாய் விட்டே கேட்டு விட்டாள்.

"என்னடி என்ன கேட்கிறாய்? இண்டையில் இருந்து உனக்கு கஸ்ரகாலம் தான். எங்களை எதிர்த்துக் கேட்கிறாய் ஆ......? அண்மையில் பார்த்த தமிழ்ப் படத்தின் பாதிப்பு அவன் வார்த்தைகளிலும் பாவம் இந்த தலைமுறைகள்.

நீ இஞ்ச படிக்க வேண்டும் எண்டு நினைத்தால் நாங்கள் சொல்லுறதை உடன் செய்து முடி. இல்லை எண்டால்" தடித்துண்டுக்கு கால் கை முளைச்ச மாதிரி ஒருவன். பின்னர் கேள்விப்பட்டாள் அது தான் மதிவதனன் என்று.

"ஏய் சுமி உந்த பொறுக்கியளோட உனக்கு பிரச்சினை வேண்டாம். பேசாமல் சொல்லுறதை செய்து போட்டு வா! கிசுகிசுத்தாள் நண்பி ஒருத்தி.

"ஒரு கடிதம் எழுது நாங்கள் சொல்லுறபடி ஒரு கடிதம் எழுது. இல்லை எண்டால்..." அவன் சொல்லில் வேகம் இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் சொன்னதை எழுத ஆயத்தமானாள் சுமி.

"அன்புள்ள என் உயிர் காதலன் மதிவதனனுக்கு!" திடுக்கிட்டுப்போனாள் சுமி. ஆனால் அவளால் தவிர்க்க முடியவில்லை, தாங்கவும் முடியவில்லை.

முகத்தில் விசிறப்பட்ட நீர் திடீரென அவளை நிஜ உலகுக்கு கொண்டு வந்தது. மெல்ல மெல்ல கண்களை விழித்தாள் சுமி.

எதிரே கணவன் சுதா, கையிலே நீர் கொண்ட பாத்திரம். என்ன சுமி? ஏன் என்ன நடந்தது? நான் பேசின கோபமா? அதுக்கு இப்படி ஏதன் செய்யிறதா? அடுத்தடுத்து எத்தனை கேள்விகள். எதற்கும் பதில் சொல்லாமல் சுவரில் மாட்டி இருந்த கடிகாரத்தை நோக்கினாள். நேரம் மதியம் 12.30 காட்டியது. ஐயோ அவர் சாப்பிட வந்துவிட்டார். நான் இன்னும் சமைக்கவே இல்லை. பதறிய சிந்தனைகளுடன் ஒரு அன்பான, அழகான நல்ல மனைவி எழுந்தாள், வேகமாய் ஆனால் காயப்பட்டிருந்த அவள் உணர்வுகள் உடலைத் தடுமாற வைத்தது. வேகமாய் அவளைத் தாங்கிக் கொண்ட சுதா அருகே இருந்த கதிரையில் இருத்தினான்.

"ஏன் என்ன நடந்தது" பற்றற்ற குரல். அதற்கும் பதில் கூறாமல் அந்தக் கடிதத்தை கணவனின் முன் நீட்டினாள் சுமித்தா.

"நானே கதைக்க வேணும் எண்டு நினைச்சனான்" அதுக்குள்ள உன்ர கையில கிடைச்சிட்டுது.

சற்று மௌனமாக இருந்த சுமி "எப்படி இது உங்கட கையில கிடைச்சது. மெல்லக் கேட்டாள்.

"ஏன் கிடைக்கக்கூடாதெண்டு நினைச்சியா? குதர்க்கமாய் வந்தது கணவனின் பதில்"

"இல்ல! சொல்லுங்கோ என்னண்டு கிடைச்சது" கொஞ்ச நாளைக்கு முந்தி தபால்ல வேலை செய்யிற இடத்திற்கு வந்தது.

"என்ன தபால்ல வந்ததோ?" மௌனம் காத்தான் கணவன். ஆனால் இன்னும் முகத்தில் அதே வெறுப்பு அன்பின் உறவுகள் தனக்கு மட்டும் இல்லாமல் பிறருக்கும் சொந்தம் என்ற எண்ணம் எப்படி அவனை மாற்றி விட்டது.

"இந்தக் கடிதம் நான் தான் எழுதினனான். ஆனால்" அவ்வளவும் போதும் சுதாவை கொல்வதற்குஒரு முறை நடுங்கி விட்டு அடங்கியது அவன் உடல்.

மனைவியை நிமிர்ந்து கூட பார்க்காமல் மௌனமாய் இருந்தான். சுமி மெல்ல மெல்ல நடந்ததை சொல்லத் தொடங்கினாள். திடுக்கிட்டுப் போனான் சுதா. வேகமாக கடிதத்தை வாங்கி மேலே போடப்பட்டிருந்த திகதியைப் பார்த்தான். சந்தேகமே இல்லை. இந்தக் காலப் பகுதியில் அவள் அங்கு தான் படித்துக் கொண்டிருந்தாள். ஆரோ விசமி செய்த வேலை தான்.

மனைவி அருகே இருந்தும் அவளை நம்பாது யாரோ ஒருத்தன் அனுப்பிய கடிதத்தைப் பெரிதாக எடுத்தது எவ்வளவு பிழை. மெல்லத் தன் மனைவியை அணைத்துக் கொண்டு கேட்டான் சுதா.

"என்னை..... என்னை மன்னிப்பாயா? கண்மணி" கனகாலத்தின் பின் அந்த அன்பான கண்மணியை கேட்ட சுமித்தாவால் அதற்கு மேலும் தாங்க முடியவில்லை. ஓ......வென அழுதாள்.

"நான் இதைப் பற்றியெல்லாம் முன்னரே உங்களிடம் சொல்லியிருக்க வேணும். சொல்லாதது என்ர பிழை தான். நீங்கள் கவலைப் படாதீங்கோ........." கணவன் மார்பில் சாய்ந்தபடி கூறினாள் சுமி என்ற சுமித்தா.....

ஒரு காலம் அரைவாசியில படிப்பை நிறுத்தி விட்டேனே என்ற கவலை அரித்துக் கொண்டிருந்தது அவள் மனதை. இனி அப்படி எண்ணம் ஒரு போதும் வராது.

## ஜோக்ஸ்

*நோயாளி - ஆஸ்பத்திரி வாசல்ல ஒரு குடை ராட்டினத்தை நிறுத்தி வைச்சிருக்கீங்களே எதுக்கு டாக்டர்?

வைத்தியர் - மயக்க மருந்து தீர்ந்திட்டா பேஷண்டை அதுல உட்கார வெச்சி வேகமாக சுத்தி விடத்தான்!

*பிரயாணி:- மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எவ்வளவு கொண்டக்டர்?

கொண்டக்டர்:- ஒரு கொண்டக்டர் தான்.

வி.கவாஸ்கர், மானிப்பாய்

# சரியா தப்பா? செய்யிறது சரியா தப்பா??

## “தற்கொலை” குறித்து வாசகர்களுடன்....



மேகம் - சுகமாக மிதந்தபடி செல்கிறது வானத்தில். இருந்தாற்போல் 'கறுத்து - கலைந்து - அல்லோலகல்லோலப்பட்டு மழையாகப் பூமிக்கு வருகிறது. குன்று, குழி எங்கும் வெள்ளமாய்ப் பாய்கிறது - தனக்கு கஷ்டகாலம் வந்து விட்டதென சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே...... வெயில் எறிக்க ஆவியாகிச் சென்று மீண்டும் மென்மையான மேகமாய் மிதந்து கொண்டு சுகமாய் அசைகிறது. வாழ்க்கையும் இது போலத்தான். ''பிரச்சினைகள் எப்போதும் நிலையானவை அல்ல இன்பம் - துன்பம் இரண்டினதும் கலவையே வாழ்க்கை.'' அப்படித்தான் எல்லா வாழ்வு தொடர்பான கட்டுரைகளிலும் எல்லோரும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்! இருந்தும் பயனென்ன? தற்கொலைகளும் நிகழ்ந்து கொண்டு தானே இருக்கிறது. அறிவு பூர்வமாக ஆராய்ந்து இங்கு ஒன்றைக் கூறமுடியும். ''நேற்று உங்களை அழுத்திய பிரச்சினையை இன்று சிந்திக்கும் போது சிரிப்பாக இருக்கும் 'அட.. இதுக்கா மண்டையை உடைத்தேன் என்று, அது போலத்தான் இன்றைய பிரச்சினைகளும் நாளை தோன்றும். ஆக எந்த பிரச்சினைகளுமே நிலையானவை அல்ல.

நிரந்தரமற்ற பிரச்சினைகளுக்காய் நிரந்தரமான தீர்வு காண (அதுதான் தற்கொலை என்கிறார்கள்) முயல்வது சரியா தப்பா? சிந்தியுங்களப்பா!!!

# வாழ்வில் பிரச்சினைகள் சகஜம்!

## தற்கொலை அவற்றிற்குத் தீர்வாகுமா?

### -வைத்திய கலாநிதி சா.சிவயோகன் சங்குநாதத்திற்குப் பேட்டி-



அண்மைக் காலத்தில் தற்கொலை செய்து கொள்வதில் இலங்கை முதலிடத்தில் இருந்தது. அதில் யாழ்ப்பாணம் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பங்கு வகித்தது. இப்பிரச்சினை குறித்தும் இதற்கான காரணங்கள் குறித்தும் பேசக்கூடிய, உளமருத்துவத் துறையில் வைத்தியராக பணிபுரிந்து வருகின்ற, எமது சமூகத்தை பல கோணங்களினூடு தெரிந்து வைத்துள்ள, வைத்திய கலாநிதி சா.சிவயோகன் அவர்களிடம் 'சங்குநாதம்' சார்பாக செவ்வி காணச்சென்றேன். தற்கொலை குறித்து யதார்த்த பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்த அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்

★கேள்வி:- இலங்கையில் தற்கொலை வீதம் உயர்வாக உள்ளதென அண்மைக்கால புள்ளி விபரங்கள் சுட்டி நிற்கின்றன. இதற்கான காரணம் எதுவாக இருக்கிறது?

● *பதில்:-* நீங்கள் சொல்வது உண்மை. சிறிது காலத்திற்கு முன்னர் தற்கொலை வீதத்தில் இலங்கை முதலாம் இடத்தில் இருந்து வந்துள்ளது. ஆனால் தற்போது இந்த நிலையில் ஒரு சிறிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனாலும் பாரிய வீழ்ச்சி என்று கொள்ள முடியாது. ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது தற்கொலை வீதத்தில் இலங்கை முன்னணியில் இருப்பது துரதிஷ்டமே! தற்கொலை வீதத்தில் இப்போது இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தில் இலங்கை இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உயர்வான தற்கொலை வீதத்திற்கு ஓரிரண்டு காரணங்களைக் குறிப்பிட முடியாது. இது பல காரணங்கள் சேர்ந்த ஓர் விளைவு எனத்தான் கொள்ள வேண்டும். வேலைவாய்ப்பின்மை, வறுமை, காதல் தோல்வி போன்ற முக்கியமான காரணங்களுடன் தற்கொலை செய்வதற்கான வாய்ப்பு இங்கு அதிகமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இலங்கையில் கிருமிநாசினிகள் அறிமுகப்படுத்திய அந்தக் காலப் பகுதியில் இலங்கை தற்கொலை வீதத்தில் முதலாம் இடத்தில் இருந்தமை இதற்கு சான்றாகும். அத்துடன் 'தற்கொலை' என்பதை பிரச்சினைகளுக்கான ஓர் தீர்வாக நம் முதியோர் அல்லது பெரியோர் இனங்காட்டிச் சென்றுள்ளனர். உதாரணமாக ஏதோவோர் பிரச்சினையின் நிமித்தம் ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார் எனின் அதை நோக்கும் இளையோர் மனதில் தற்கொலை ஓர் தீர்வாக பதிவிக்கப்படுகிறது. அத்துடன் இத்தற்கொலைச் சம்பவங்களை ஊடகங்கள் முக்கியத்துவப்படுத்தி, கவர்ச்சியாக வெளிப்படுத்தும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் சிலசமயங்களில் தற்கொலை-பிரபல்யத்திற்கான ஒரு பாதை என இளையோர் மனதில் பதிவிக்கப்படுகின்றமையும் தற்கொலை அதிகரிப்பிற்கான ஒரு காரணம் என கொள்ள முடியும். (இளவயதினரிடையே தற்கொலை வீதம் உயர்வாக இருப்பதற்கு இது முக்கியமான ஓர் காரணம் ஆகும்) ஆகவே சமூகத்தால் கற்றுத்தரப்பட்ட 'மாதிரிகள்' (Models) தற்கொலைக்கான வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளது எனலாம். முக்கியமாக எமது திரைப்படங்களின் மூலம் தற்கொலை தொடர்பானஎண்ணக்கருக்கள் மிக இலகுவாக விதைக்கப்படுவதைக் காணலாம்.

> தற்கொலை எண்ணம் வருவது சகஜமான ஒன்று. அப்படி வரும் போது உங்கள் பிரச்சினைக்கு ஏன் தற்கொலையை ''மட்டும்'' தீர்வாக எடுக்கிறீர்கள் என உங்களையே ஒரு முறை தீரவிசாரித்துக்கொள்ளுங்கள். எமக்கு கிடைத்துள்ள இந்தப் பிறப்பு மிகவும் பெறுமதியானது. அவ்வாறிருக்க அதனை இடை நடுவில் முடித்துக் கொள்ளும் முடிவு கவலைக்குரியது.
>
> வைத்திய கலாநிதி -சா.சிவயோகன்

இரு கதாநாயகிகள் தோன்றும் அநேக திரைப்படங்களில் ஒருவரை என்ன செய்வது? என்று வரும் போது இயக்குநரோ அல்லது கதாசிரியரோ அவரை இலகுவாகத் தற்கொலை செய்ய வைத்து விடுவர். கதை சுலபமாக முடிந்து விடும்! பார்த்துக் கொண்டிருப்பவர்களின் முடிவு?.. இவ்வாறு மாற்றுத் தீர்மானங்களை எடுக்க முடியாது தற்கொலை செய்து கொள்ளும் கதாநாயகி அல்லது கதாநாயகர்களைக் காட்டும் போது, சமூகத்திலும் அதற்கான பிரதிபலிப்புக்கள் தென்படவே செய்கிறது. ஆகவே வழமையான தனி மனித பிரச்சினைகளுடன் இவ்வாறான காரணிகளும் தான் இலங்கையில் தற்கொலை வீதம் உயர்வடைய வழிவகுக்கிறது எனலாம்.

★கேள்வி:- இலங்கையின் உள்ளே பிரதேசவாரியாக நோக்கும் போது யாழ்ப்பாணத்தில் தற்கொலை வீதம் எவ்வாறுள்ளது?

● *பதில்:-* 1985 இற்கு முன்னர் உள்ள புள்ளி விபரங்களின் அடிப்படையில் தற்கொலை வீதத்தில் யாழ்ப்பாணம் இரண்டாவது இடத்தில் இருந்தது. முதலாவது இடத்தில் அனுராதபுரம் இருந்தது. துரதிஷ்ட வசமாக இந்த யுத்த காலத்தில் இது தொடர்பான அண்மைக் கால புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை. தற்போது தான் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் ஒன்றைக் கூற முடியும். இங்கு யுத்தம் முனைப்படைந்த காலப்பகுதிகளில் பொதுவாக தற்கொலை வீதம் (வழமையான தற்கொலை) குறைவாகவே காணப்பட்டு வந்துள்ளது. இதற்கான காரணத்தை இரண்டு கோணத்தில் கூறமுடியும். ஒன்று இவ்வாறான காலத்தில் சமூகத்தின் ஒட்டு மொத்தமான கவனமும் வேறு பக்கம் திசை திருப்பப்பட்டு தனிமனித பிரச்சினைகளிலும் பார்க்க மேற்படி பிரச்சினை அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இரண்டாவது காரணம் தற்கொலை என்பது உளவியல் ரீதியாக ஒருவருக்கு ஏற்படும் கோபத்தின் வெளிப்பாடு. ஒருவருக்கு கோபம் ஏற்படும் பொழுது பிறரில் கோபிக்க முடியாத சந்தர்ப்பத்தில் தன் மீதே கோபங்கொண்டு தன்னை அழிப்பதன் மூலம் பிறரை தண்டிக்கும் ஓர் ஆயுதமாக தற்கொலையை கையாளுகிறார்கள்.

★ கேள்வி:- 'தற்கொலை' ''தற்கொலை முயற்சி'' இவ்விரு பதங்களுக்கும் இடையிலான வேறுபாடு அவற்றிற்கிடையேயான தொடர்பு குறித்து விளக்கம் தருவீர்களா?

● *பதில்:* இங்கு தற்கொலை எனும் போது அதனை மேற்கொண்ட நபர் தன்னை மாய்த்துக் கொண்டுவிட்டார்என்றும், தற்கொலை முயற்சி எனும் போது ஒரு நபர் தன்னை மாய்த்துக் கொள்ளும் நோக்கத்தில் சில விரும்பத்தகாத நடத்தைகளில் ஈடுபட்டு அதிஷ்ட வசமாக மற்றவர்களால் காப்பாற்றப்பட்டவர்களின் செயற்பாட்டை குறிப்பிடுகின்றது.



மேலெழுந்த வாரியாக நோக்குகையில் இவ்விரண்டும் ஒன்று போல இருந்தாலும் உன்னிப்பாக அவதானிக்கையில் இரண்டிற்கும் இடையில் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தற்கொலை செய்து கொண்டவர்களைப் பார்த்தால் தற்கொலைக்காக நீண்ட காலம் திட்டமிட்டு, ஆயத்தங்களை மேற்கொண்டு நிதானமாக தமது தற்கொலையை நிகழ்த்தியவர்களாகக் காணப்படுவர். ஆனால் தற்கொலை முயற்சி செய்பவர்கள் திடீரென உணர்ச்சிவசப்பட்டோ அல்லது அதீத கோபத்தாலோ தற்கொலையை நாடியவர்களாக காணப்படுவர். இவர்களின் தற்கொலை முயற்சி கூட மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

★ கேள்வி:- இந்த இடத்தில் உங்களிடம் ஒரு கேள்வி - தற்கொலை செய்தவர்கள் எல்லாம் உண்மையில் தாம்இறக்க வேண்டும் என எண்ணி அதனைச் செய்துள்ளனரா? அல்லது தமது தற்கொலை முயற்சியின் மூலம் எதையாவது சாதிக்க நினைத்து துரதிஷ்ட வசமாக உயிரைப் பறிகொடுக்கின்றார்களா?

● *பதில்:-* தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பலருக்கு உண்மையில் தாம் இறக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதில்லை. திடீர் என்று உணர்ச்சி வசப்பட்டு எதையாவது செய்து விடுவார்கள். அடுத்த கணம் (கிணற்றில் விழுந்து, அல்லது மருந்து குடித்து..) கேட்டால் உண்மையில் தாம் இறக்க விரும்பவில்லை எனத்தான் கூறுவார்கள். சிலர் உண்மையில் இறக்க வேண்டும் என எண்ணி இறந்தே விடுவார்கள். இங்கு அனுதாபத்திற்குரியவர்கள் திடீரென உணர்ச்சி வசப்பட்டுத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, இறுதிக் கணத்தில் தமது இறப்பைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாமல் இறந்து போகிறவர்கள் தான். ஆகவே தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் தாம் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் மற்றவர்களிடம் இருந்து உதவியை, ஆதரவைப்பெறுவதற்கே அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவர்களுக்கு உண்மையில் தாம் இறந்து விடவேண்டும் என்ற எண்ணம் முழுமையாக இருப்பதில்லை.

★கேள்வி:- தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தப்பியோருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

● பதில்: நிச்சயமாக எங்களது அனுபவத்தினடிப்படையில் இவர்களுக்கு சிலதைக் கூறமுடியும். இவ்வாறான தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் உண்மையில் மிகப் பாரிய பிரச்சினை ஒன்றுக்கு முகங்கொடுத்து அதிலிருந்து தப்புவதற்கு இந்த முடிவை எடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர். அந்த நேரம் அவர்களுக்கு வேறு வழிகள் பற்றி அறிவுரை சொல்வதற்கோ அவர்களது முடிவு பிழையானது எனச் சுட்டிக்காட்டுவதற்கோ பொறுப்பானவர்கள் இல்லாமல் போகலாம். எனவே இவர்களுக்கு இவ்வாறான சமயங்களில் உதவி அளிக்கக் கூடிய உதவி மையங்களை இனங்காட்ட வேண்டும்.

பொதுவாகத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பின்னர் அவர்களுக்கு ஒரு குற்ற உணர்வு இருக்கும். எனவே இந்த உணர்வில் இருந்து அவர்களைப் பாதுகாக்க முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

குடும்பத்தாரைப் பொறுத்தவரை அந்தச் சமயத்தில் குழப்பம் அடையாமல் அவர்களை புரிந்து கொள்ள வேண்டியமை மிக அவசியமானதாகும். பொதுவாக கவனிக்கப்படாத ஒரு விடயம் இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தப்பியவர்களுக்கு மருத்துவ சிகிச்சையின் பின்னர் கடமை முடிந்தது என அவர்களை விட்டு விடுகிறார்கள். அவர்கள் உண்மையில் எதற்காக அந்த முயற்சியில் ஈடுபட்டார்களோ, அந்தப்பிரச்சினை முடிவு காணப்படாமல் அவர்களை மீண்டும் மீண்டும் அம் முயற்சிக்கு தள்ளுவதாகவே காணப்படும். எனவே மருத்துவ சிகிச்சையின் பின்னர் இவர்களுக்கான உள சிகிச்சை, அரவணைப்பு என்பன அவசியமாகிறது. அத்துடன் அவர்களுக்கு தேவையாக உள்ள சமூக, பொருளாதார உதவிகள் பற்றியும் பரிசீலித்தல் அவசியமாகும்.

★கேள்வி:- 'தற்கொலை' என்பது மதத்கோட்பாடுகளின் படி ஓர் பாவமான செயல், இப்பதம் குறித்து உங்கள் கோணத்தில் என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

● பதில்:- நானும் இது பற்றி அறிந்துள்ளேன். சட்டத்தில் கூட தற்கொலை செய்யும் உரிமை எவருக்கும் இல்லை எனத்தான் கூறப்பட்டுள்ளது.

எங்கள் துறை சார்ந்த ரீதியிலும், ஓர் உள நிபுணர் என்ற வகையிலும் நாம் எது பற்றியும் பொதுவாக தீர்ப்பிடுவதில்லை அச்சமயத்தில் அவர் ஏன் அப்படிச் செய்தார். அவரை பிரச்சினைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி? என்பது தொடர்பாகத் தான் நாம் சிந்திக்கிறோம். சிந்திக்க வேண்டும்.

**T.T.மயூரன்**

> பிரச்சினைகளின் அழுத்தத்தால் மனது பாரமாகி உங்களையே அழிக்க வேண்டும் போல் அடிக்கடி தோன்றுகிறதா? எந்த முடிவை எடுப்பதற்கு முன்னும் உங்கள் மனப் பிரச்சினைகளுக்கு மார்க்கம் காண பின்வரும் முகவரிகளில் மனது விட்டுப் பேசிப் பாருங்களேன்!
>
> - உள சிகிச்சைப் பிரிவு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
> - உள சிகிச்சைப் பிரிவு, மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை.
> - சாந்திகம், உள சிகிச்சைப் பிரிவு, 15, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
> - “உள மருத்துவத்துறை”, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்.

# மரண விளையாட்டு

## தொடர்கதை

### அங்கம் 05

மாயவன்

காலை வேளை இளஞ்சூரிய வெளிச்சத்தில் நீச்சல் தடாகம் தங்கமெனப் பளபளத்தது.

தடாகத்திற்கு அருகில் நீள சோபாக்களில் ரூபீஸ் த சிங்கிள் பீஸ் நீச்சல் உடைகளில் சில அழகிகள் சாய்ந்திருந்தனர். வேறு சில அழகிகள் தடாகத்தில் நீந்துவதற்காக நீச்சலுடை அணிந்து காலை வெயிலில் உடல் அங்கங்கள் ஆங்காங்கே பளபளக்க வந்து கொண்டிருந்தனர்.

திடீரென்று வாத்தியங்கள் இசைத்தன. கரையிலிருந்த அழகிகளும் நீந்துவதற்கு ஆயத்தமாகிய அழ்கிகளும் அவசர அவசரமாக எழுந்து நின்றனர்.


வாயிலில் நின்ற காவலாளி திடீரென்று அலேட் பொசிசனில் நின்றான். பூனைபோல் பென்ஸ் கார் வந்து நின்றது. ஸ்டென்கன்களுடனும் மிஷிங்கண்களுடன்- காவலர்கள் வர ஒரு கையில் இரும்புச் சங்கிலியில் கட்டிய சிறுத்தையை ஏதோ நாய்க் குட்டியைக் கூட்டிவருவது போல் இழுத்துக்கொண்டு வந்தான். அகில உலக தீவிரவாதிகளின் தலைவர் அப்துல் ரகீம்.

அப்துல் ரகீம் ஆறரை அடி உயரம். சிவந்த நிறம் தினமும் மேற்கொள்ளும் உடற்பயிற்சியால் உடல் கட்டாகவும் திரணை திரணையாகவும், வாளிப்பாகவும் காணப்பட்டது. கறுப்புநிற ஜீன்சும் அதே நிறக்கோர்ட்டும் அணிந்திருந்தான். வயது 29 விழிகளின் தீவிரவாதிக்குரிய கொடூரம் தெரிந்தது. டேக்லான்டோ கராத்தே, குங்.:.பூ மார்ஷியாஸ் ஆர்ட்ஸ் ஆகிய கராத்தே வகைகளில் கைதேர்ந்தவன். செய்த கொலைகள், கொள்ளைகள் அளவு கணக்கில் அடங்கா.

உலகில் பல இடங்களில் இயங்கும் தீவிரவாத கும்பல்களுக்கெல்லாம் தலைவன் இவன். அதனால் தீவிரவாத உலகத்திற்கு மன்னனாக விளங்கினான். தான் இட்ட கட்டளைகளை சரியாக செய்யாதவனை சிலவேளை தன் செல்லப்பிராணி ஆன டைகர் என்ற சிறுத்தைக்கு இரையாக்குவான். அல்லது விரும்பிய அங்கங்களை எடுத்து விடுவான். சிலவேளை தோட்டாக்களால் உடலை பொத்தலாக்குவான். கழுத்தை சீவுவான். இப்படி ஏதாவது எந்த நேரம் செய்வான், எதைச் செய்வான், எப்படிச் செய்வான் என்று எவருக்கும் தெரியாது. பாகிஸ்தானை தன் முக்கிய ஆட்சித் தளமாக கொண்டுள்ளான். இவன் அதிகாரத்திற்கு உட்பட்ட 12 தீவிரவாத அமைப்புக்கள் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் இயங்கி வருகிறது. அந்த 12 அமைப்புக்களில் ஒன்றுதான் அன்ரனியின் கீழ் இயங்கிய தீவிரவாத குழு ஆகும்.



நீச்சல் தடாகத்தை அப்துல் ரகீம் நெருங்கியதும் ஒவ்வொரு அழகிகளும் தலைகுனிந்து வணங்கினர். காவலாளிகள் நாலாபுறமும் சிதறி பாதுகாப்பு வலயம் அமைத்தனர். ஒரு 18 வயது பருவப்புயல் அவனை நெருங்கி அவனுடைய கோர்ட்டை கழற்றி எடுத்தாள்.



அப்துல் ரகீம் நீராட்டத்திற்கு ஆயத்தமானான். இரு கால்களையும் ஒன்று சேர்த்து 'ப்ளக்' என்று நீருக்குள் கைகளை நீட்டியபடி பாய்ந்தான். அவனைத் தொடர்ந்து ஒவ்வொரு வாளைமீன்களாக நீச்சல் உடைகளில் நீருக்குள் தாவினார்கள். அவனைச் சூழ்ந்து நின்ற அழகிய யுவதிகள்.

கைகளை மாற்றி மாற்றி நீரில் போட்டு நீந்தினான். அப்துல் ரகீம் நீந்திக் கொண்டிருக்கும் போது ஒரு காவலாளி ஓடி வந்து "மன்னா மன்னிக்க வேண்டும் அமைச்சர் யூசுப்கான் தங்களை சந்திக்க விரும்புகிறார்" என்றான்.

"நான் நீராட்டத்தில் இருக்கும் போது யாரையும் சந்திப்பதில்லை என்று அமைச்சருக்கு தெரியாதா? ஆலோசனை மண்டபத்தில் காத்திருக்கச் சொல் வருகிறேன்". என்றான்.

மன்னா விடயம் மிக முக்கியமானதாம். அதனால் தங்களை உடனடியாகச் சந்திக்க வேண்டுமாம்.

அப்துல் ரஹீமிற்கு அமைச்சர் யூசுப்கான் பற்றி நன்றாக தெரியும். ஏதாவது விடயம் முக்கியமாக இருந்தாலொழிய மற்றப்படி தன்னை சந்திக்கமாட்டார். தானே பிரச்சனையை தீர்க்க முயலுவார். என்று. ஆகவே காவலனை நோக்கி "சரி வரச் சொல்"!! என்றான்.

தீவிரவாதிகளின் மன்னன் அப்துல் ரகீமின் அமைச்சரும், ஆலோசகருமான யூசுப்கான் நீச்சல் தடாகத்தை நோக்கி வந்தார். அனுபவமும், ஆற்றலும் நிறைந்தவர் என்று அவர் முகத்திலேயே தெரிந்தது. வயது ஐம்பதை வெட்டியும் உடல் கட்டு சிறிதும் தளரவில்லை. தன் சந்தன நிற மேனியை தூய கதர் ஆடையால் மூடியிருந்தார்.

நீச்சல் தடாகத்தை அடைந்த அமைச்சர் "மன்னா மிகவும் ஆபத்தானதும் பயங்கரமுமான செய்தி ஒன்று வந்துள்ளது. தாங்கள் தான் அதனைப் பற்றி ஆலோசனையை செய்து தீர்வு கூறவேண்டும் என்றார்" யூசுப்கான்.

"யூசுப்கான் செய்தி கடுமையாக இருந்தாலொழிய தாம் என்னை நாடி வந்திருக்க மாட்டீர்கள் தாங்களே பிரச்சினையை கான்சல் பண்ணியிருப்பீர்கள்" என்றான் அப்துல்ரகீம்.

"சரி அனைவரையும் மந்திராலோசனை மண்டபத்திற்கு அழையுங்கள் நான் இதோ வருகிறேன்." என்று கூறி நீச்சல் தடாகத்தை விட்டு வெளியே வந்தான். ஓர் அழகி நீண்ட கோர்ட்டை அணிவித்தாள்.

டைகரை அழைத்துக் கொண்டு தன்னுடைய காரில் ஏறி அரண்மனை நோக்கி விரைந்தான். முன்னும் பின்னும் ட்ரக்குகளிலும் ஜீப்புகளிலும் பூரண ஆயுதம் தரித்த காவலாளிகள் வந்து கொண்டிருந்தனர்.

அகில உலக தீவிரவாதிகளின் மன்னன் அப்துல் ரகீமின் அரண்மனை செல்வச் செழிப்பையும் பயங்கரத்தையும் அதில் ஓர் அழகையும் கொண்டு காட்சி அளித்தது. திரும்பிய பக்கமெல்லாம் காவலாளிகள் டாங்கிகளிலும், ட்ரக்குகளிலும், ஜீப்புகளிலும் விரைந்து கொண்டிருந்தனர். அரண்மனையின் ஒவ்வொரு பாகத்திலும் காவலாளிகள் ஆயுத மேந்திய வண்ணம் நின்றனர்.

அரண்மனையின் ஆலோசனை மண்டபத்தில் நீண்ட நீள் வட்ட மேசையில் சுமார் 25 பேருக்கு மேல் சுற்றிவர இருந்தார்கள். மண்டபத்தில் ஒரு ஏசி குளு குளு என்றிருந்தது. ஒவ்வொரு தூணிலும் மேல் கூரையிலும் பலவடிவ மின் விளக்குகள் காணப்பட்டன.

சிறுத்தை குட்டி டைகரின் உறுமல் சத்தம் அரண்மனை எங்கும் எதிரொலித்தது. காவலாளிகள் விரைவாக சல்யூட் அடித்தனர். ஆலோசனை மண்டபத்தில் கூடியிருந்தவர்களும் எழுந்து நின்று சல்யூட் பண்ண அப்துல் ரகீம் மண்டபத்தினுள் நுழைந்தான்.

பச்சை நிற புல் சூட்டில் இருந்தான். இடையில் தோட்டா பெல்ற் காணப்பட்டது. அதில் பிஸ்டல் ஊசலாடியது. ஒருகையில் சிறுத்தைக் குட்டியை அனாயசமாக பிடித்துக் கொண்டு ஏட்டு பொடிக் கார்ட்ஸ் சூழ மந்திராலோசனை மேசையை அடைந்தான்.

அமைச்சர், படைத்தளபதி, கிளை தீவிரவாத அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரை இருக்கச் சொல்லி தானும் அமர்ந்தான்.


அமைச்சர் யூசுப்கான் எழுந்து சபை கூட்டப்பட்டதன் காரணத்தை கூறலானார். "மன்னா இலங்கையில் ஷியாம் சுந்தர் என்ற எழுத்தாளன் 'தீவிரவாதம்' என்ற நூலை வெளியிட்டுள்ளான். அதனை எமது கிளை அமைப்பின் தலைவன் அன்ரனி தடுக்க முற்பட்டு கொல்லப்பட்டான். அப்புத்தகம் நாடுகள் தோறும் பரவினால் எம் நிலை ஆபத்தாக முடியும். "தீவிரவாதம்" என்ற நூல் எல்லா நாடுகளிலும் பரவுமுன் நாம் அப்புத்தகங்களை தடை செய்ய வேண்டும். அத்துடன் நாம் அந்நாட்டிற்கு தகுந்த பாடமும் கற்பிக்க வேண்டும்" என்றார்.

அப்துல் ரகீம் முகம் சாத்தான் முகமாக மாறியது. அப்புத்தகத்தில் எம்மைப்பற்றியும் எழுத முற்பட்டு விட்டார்களா? புத்தகத்தின் பிரதிகளில் ஒன்றை உடனடியாகக் கொண்டு வாருங்கள் என்றான்.

(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி




## மெமொறி (MEMORY)

மெமொறி என்பது கம்பியூட்டரில் தகவல்களை சேமித்து வைக்கும் ஒரு சேமிப்பிடமாகும். நாம் முன்னர் குறிப்பிட்ட ஹார்ட் டிஸ்க், புளோப்பி டிஸ்க், CD - ROM போன்றவை நிரந்தரமாக தகவல்களை சேமித்து வைக்கும் சேமிப்பிடங்களாகும். இவற்றை ஸ்ரோறேஜ் டிவைசஸ் (Storage Devices) என்று அழைப்பர். கம்பியூட்டர் மொழியில் "மெமொறி" என்ற சொற்பதம் மதர்போர்ட்டில் பொருத்தப்பட்டிருக்கும் RAM (Random Access Memory) எனும் ஒருவகை தற்காலிக சேமிப்பிடத்தையே குறிக்கும். இந்த மெமொறியை மெயின் மெமொறி (Main Memory) என்றும் அழைப்பர். கம்பியூட்டர் தனக்குத் தேவையான தற்காலிகமான தகவல்களை சேமித்து வைப்பதற்கு RAM ஐ பயன்படுத்துகின்றது.

உதாரணமாக நாம் வீட்டில் சமைக்கும் போது தேவையான அனைத்து பொருட்களையும் சமையல் தட்டுகளிலிருந்து இறக்கி எமக்கு அருகில், கைக்கெட்டிய தூரத்தில், அடுக்களை மேசையில் வைத்து சமைப்பது போல் தான், கம்பியூட்டரும் தனக்குத் தேவையான தரவுகளை ஹார்ட் டிஸ்க், புளோப்பி அல்லது CD - ROM இல் இருந்து எடுத்து வந்து RAM இல் வைத்துவிட்டு வேலை செய்யும். எமது அடுக்களை மேசை பெரிதாக இருந்தால் நாம் சமையலுக்கு தேவையான அனைத்து, பொருட்களையும் வைத்து இலகுவாக சமையலைச் செய்யலாம். அதேபோல்தான் கம்பியூட்டரிலும் கூடிய RAM இருக்குமானால், கம்பியூட்டர் தனது வேலையை இலகுவாகவும் வேகமாகவும் செய்யக் கூடியதாக இருக்கும்.

சிறிது காலத்திற்கு முன் கம்பியூட்டர் சந்தையில் RAM இன் விலை மிகவும் அதிகமாக இருந்தது. அதனால் எல்லோரும் கம்பியூட்டர்களில் சிறிய கொள்ளளவுள்ள RAM இனையே வைத்தனர். ஆனால் இப்போது RAM இன் விலை பல மடங்குகளால் குறைந்திருக்கிறது. இதனால் தற்போது கம்பியூட்டர் சந்தையில் இருக்கும் கம்பியூட்டர்கள் எல்லாம் சாதாரணமாக 16M, 32M, 64M, 128M, (M - Mega Byte - 1000,000 Byte), என அதிக அளவிலான RAM களை கொண்டவையாக இருக்கின்றன. Byte (பைட்) என்றால் என்ன? மெகா (Mega) என்றால் என்ன? என்பது பற்றி தொடர்ந்து வரும் பகுதிகளில் பார்ப்போம்.

டி-றாம் (DRAM -Dynamic RAM), எஸ்-டி-றாம் (SDRAM - Synchronous DRAM), இ.டி.ஒ டி-றாம் (EDO DRAM -Extended Data



Output DRAM), பி.சி வண்ஹன்றட் எஸ்-டி.றாம் (PC100 SDRAM) என பல தொழில்நுட்பங்களையுடைய RAM கள் இன்று பாவனையில் உள்ளன. இவற்றிலே இன்று பரவலாக எல்லா கம்பியூட்டர்களிலும் பாவிக்கப்படுவது SDRAM ஆகும். PC100 SDRAM என்பது புதிதாக தற்போது கம்பியூட்டர் சந்தையில் புகுந்துள்ள RAM தொழில்நுட்பமாகும். இது சாதாரண DRAM களை விட வேகமானதாகும்.

## காஷ் மெமொறி (CacheMemory)

மதர்போர்ட்டில் இருக்கும் மெமொறிகளில் காஷ் மெமொறியும் முக்கியமானது ஆகும். மெயின் மெமொறி போன்று காஷ் மெமொறியும் தற்காலிக தகவல் சேமிப்பிடமாகும். இது கம்பியூட்டரின் மூளையான CPU இற்கு அருகில் இருக்கும் மிகவும் வேகமான மெமொறியாகும். மேற்குறிப்பிட்ட சமையல் உதாரணத்தில், மெயின் மெமொறியை அடுக்களை மேசைக்கு ஒப்பிட்டோம். அதே போன்று, ஒரு குறிப்பிட்ட கறியை சமைப்பதற்கு உடனடியாகத் தேவையான பொருட்களை அடுப்புக்கு அருகில் முன் கூட்டியே எடுத்து வைத்திருப்பது போல கம்பியூட்டரும் ஒரு வேலையைச் செய்வதற்கு உடனடியாக அல்லது அடுத்தடுத்து தேவையான தகவல்களை சேமித்து வைக்கும் ஒரு சேமிப்பிடம் தான் காஷ் மெமொறியாகும். இன்று கம்பியூட்டர் சந்தையில் சாதாரணமாக 256K, 512K, 1M என பல அளவிலான காஷ் மெமொறிகளைக் கொண்ட மதர்போர்ட்டுகள் உள்ளன.

RAM மெமொறியின் ஒரு வகையான எஸ் -றாம் (SRAM -Static RAM) எனும் மெமொறிகளே காஷ் மெமொறிகளாக பயன்படுத்தப்படுகின்றன. காஷ் மெமொறியில் லெவல் வண் காஷ் (Level 1 Cache) லெவல் ரு காஷ் (Level 2 Cache) என இரண்டு வகை உண்டு. இதில் Level 1 Cache என்பது CPU வின் உள்ளே இருக்கும் மெமொறியாகும். Level 2 Cache என்பது. CPU விற்கு அருகில் இருக்கும் காஸ் மெமொறி ஆகும். இன்று கம்பியூட்டர்கள் சாதாரணமாக இரண்டு விதமான காஷ் மெமொறிகளையும் கொண்டிருக்கின்றன.

(தொடரும்)

நன்றி : நுட்பம்

# கவிதைக் கலசம்




## இத்தனையும் வேண்டும் எங்களுக்கு!

தமிழர் பிரதிநிதிகள் தடை நீங்க வேண்டும்
தாயகத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும்
புரிந்துணர்வு ஒப்பந்தம் போர் நிறுத்த வேண்டும்
பொங்கு தமிழ் மீண்டும் பொங்கிட வேண்டும்
தரைவழிப்பாதை திறந்து விட வேண்டும்
தந்திட்ட வாக்கை அரசு காப்பாற்ற வேண்டும்
கண்டிவீதியால் பயணமதை தொடர்ந்திட வேண்டும்
கண்காணிப்புக்குழு காவலிருந்தே காத்திடவேண்டும்

தமிழிளம் பரிதி

## எங்கும் ஒலிக்கட்டும்!

பொங்கும் தமிழிற்கு புகழினைச் சேர்த்திட
தங்கும் அமைதிக்குச் சாமரம் வீசிட
மங்காப் பொலிவுடன் மாமறை போலவே
எங்கும் ஒலிக்கட்டும் சங்கின் நாதமே

க.தேனுஜா

## புறப்பட்டு விடு..!



இளைஞனே!
உன்னால் இயலாதென்று
போர்த்திப் படுக்காதே - நீ
உறங்கினால் - உன்னில்
கறையான் கூட புற்றெழுப்பும்
நினைத்ததை முடிப்பேன்-என்ற
இலட்சியம் கொண்டு - நீ
புறப்பட்டுவிட்டால் - உன்
எதிர்ப்புக்கள் துகள்களாகும்.

பலமுறை தவறித்தான்
சிலந்தி கூட வலை பின்னுகிறது
பட்டந்தீட்டிய பின்பு தானே
வைரம் ஒளிவீசுகிறது - நீ
உன்னுள் இக்கும் - உன்னைத்
தீட்டிக் கொள் - நீ ஒளிரும் போது
பலர் தம்மிருள் போக்க
வரிசையில் காத்திருப்பர்
காலங்கள் ஓடும்.
உன்புகழ் வானளாவும்.
உன் வாழ்க்கை சரித்திரமாகும்.
அதற்கு நீ இன்றே
புறப்பட்டுவிடு.........!

சோ. கிருஷ்ணா
யாழ் தேசியகல்வியியற்கல்லூரி

## நானிலம் போற்றிட வாழ்வோம்!

இந்து மா கடலின் நித்திலமாம்
இலங்கா புரிஎம் திருநாடாம்
சிந்து நதிக்கரை தோன்றியதாம்
சீருயர் நம்மவர் பண்பாடாம்
சிங்களர், தமிழ், சோனகரும்
சிறப்புடன் பறங்கியரும் சோதரர் போல்
மங்கா வளமுடன் ஒன்று பட்டே
மாநிலம் போற்றிட வாழ்ந்தோமே.

இப்படி வாழ்ந்த எம்மிடையே
இனப்பகை வந்தது எவ்வாறோ
எப்படி யாயினும் இந்நிலையை
எளிதே அகற்ற முயல்வோமே
பல்லின மக்களும் உழைப்போமே
பகைமை என்றும் ஒழிப்போமே
நல்வள நாட்டு மக்களென
நானிலம் போற்றிட வாழ்வோமே.

சி.வேணி
மூளாய்

## புத்துணர்வுப் பூக்கள் மலரட்டும்!

ஆண்டுகள் பல ஓடி மறைந்திட்ட வேளை
ஆண்ட நம்பூமிக்கு போவோமா என்ற
ஆதங்கம் தான் எத்தனை?
'ஆ' வென்று பார்த்து பார்த்து
அலுத்துப் போன உள்ளங்களும்
அழுதழுது வற்றிப் போன கண்களும்
புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் பூரித்துப் போனது
புதுப் பொலிவு பெற்று பார்த்த போது
புதுமையாய் தான் இருந்தது
நாளுக்கு நாள் பத்திரிகையில்
நாலுவிதமாய் வருவதை எண்ணி
மீண்டும் வேதாளம் முருக்கம் மரத்தில்
ஏறுமோ என்று ஏங்கித் தான் போகுது
புண்பட்டுப் போன மக்கள் மனதில்
புத்துணர்வுப் பூக்கள் மலரட்டும்.

உ.காஞ்சனமாலா
ஏழாலை

## இணையட்டும் கரங்கள்!

நத்தும் கடலிடைக் காவியத்தீவிது
எத்தனை கோடி இன்பத்தைத்தந்தது - இன்று
நித்தம் மரணத்தின் நிதர்சனம் வாழுது
ரத்தம் ஆறென இலங்கையில் ஓடுது.

பிள்ளை நெஞ்சிலே பீதியின் பாதிப்பு
பள்ளிப் பருவமே பாழாகிப் போனது - சிரித்துத்
துள்ளிக் குதிக்கும் துயரற்ற பொழுதினிலே
கொள்ளி வைத்திடும் கொடுமையவன் வாசலிலே

இனமும் மதமும் இணைந்து ஒன்றாகி
தினமும் கூடும் திரு நாள் உருவாகி எல்லோர்
மனமும் களிக்க மகிழ்ச்சியில் குளிக்கும்
கனவும் நனவாகக் கரங்கள் இணையட்டும்

உண்மையே தெய்வம் உயிர்களிடம் நேசம்
என்றிட்ட பாரதி எழுதியது வேதம் - நாட்டில்
நன்மையே விளைய நம்பிக்கை வளரட்டும்
துன்னிருள் நீங்க தொடரட்டும் சமாதானம்

சக்தி

## தடம் பதித்த நினைவுகள்!

மனதிலே பல நினைவுகள்
பதியப்படுவதில்லை - ஆனால்;
பதிந்த சில நினைவுகளோ!!!....
மனதை விட்டு அகல்வதில்லை
அவை
வாழ்வையே தடம்புரட்டுகின்றன
பசுமையாகப் பதிந்த நினைவுகள்
முதலில்
சுகமான் தென்றலாக வருடும்
ஆனால்.........!!!
சில் நாளில் அவையே
மறக்க முடியாத தழும்புகளாகும்.

பேபினா
திருநெல்வேலி

## கவனமாகப் பயிலு!

நல்ல மாஸ்டர் உள்ள ரியூசன்களைத் தேடிப் போகிறோம்
நாங்கள் படிக்காத சிலபஸ்களை முடிக்கப் போகிறோம்
கண்சோரும் மனம் சலிக்கும் ஓயப் போவதில்லை.
வரும் ஏப்ரல் மாதம் மட்டும் நாங்கள் தூங்கப் போவதில்லை.

தூரமதிகமில்லைஅந்தோ தெரியுதெங்கள் பள்ளி
அங்கு இப்போ மாணவர்கள் ஸ்ரடிலீவு தம்பி
டேக்கிளாசைத் தானே இப்போ மாணவர்கள் நம்பி
பேப்பர்கிளாஸ் கூட இப்போ வழியுதெடா நிரம்பி



கடவுள் பெயர் சொல்லு கவனமாகப் பயிலு
ஏப்பரல் வரும் ரெஸ்ருக்கு தயாராக நில்லு.

அ.சிவமலர்
கல்வயல்


## நின் நினைவுடனே!



பெண்ணே! - நான்
உன்னை காதலித்தது
வெறும் பொழுது போக்கிற்காகவல்ல
இறுதி வரை உன்னுடன் - என்
வாழ்க்கைப் பயணத்தை தொடர்வதற்காய் - உன்
எண்ணத்துடனேயே - நான்
அந்நிய நாடு சென்று
அகதியாய், அடிமையாய் வாழ்கின்றேன் - என்றும்
நின் நினைவுடனே!... - ஆனால்
நீயோ - என்
காதலுக்கு கைகாட்டிவிட்டுகாதல் திருமணம் (?)
செய்தது தான் ஏனோ..............!

ஆளியூரான்

## என்றுமே பிரிவில்லை....!



உயிரே..................
உன்னை நான் விடமாட்டேன்
என்னை விட்டுப் பிரிய

உயிராலும் உறவாலும் -
பிரிவில்லை எமக்கு
உதாரணம் பல காட்டி
உவமைகள் சொல்லவில்லை
உண்மையை மட்டுமே நான்
உறுதியாய் சொல்லுகிறேன்

நீர், நெருப்பு, காற்று, வான், மண்
உள்ள வரை
நானும் நீயும் என்றும்
நித்தியமே..................................!

குகப்பிரியா
உடுவில்

## ஓடு வோருக்கு ஒரு வார்த்தை!

மண்ணை மறந்து
மானத்தைதொலைத்து
மானிடா எங்கே
ஓடுகின்றாய்?
ஏரோபிளேன் பிடித்து
எதியோப்பியா வழியாக
கனடா நாட்டிலே
கால் பதிக்கவா...?
ஓடு.... ஓடு...... நன்றாய்
ஓடு
நாளை இந்த மண்
உனக்குச் சொந்தமில்லை

வெள்ளைத் தோலின்
பின்னால் போய்
"எயிட்ஸ்"சை விலைபேசி
எடுக்கப் போகின்றாய்
உந்தனுக்கு சொந்தமாய்

ஓடு... நன்றாய் ஓடு
நாளை இந்த தேசம்
விடியும் வரை
மட்டுமே உன்னால்
ஓட முடியும்......!

ப.உதயகுமார், அளவெட்டி

## தவிப்பு!



என் காதல் உனக்கு
புரியவில்லை எனத் தவிப்பு
அதை சொல்ல என்னால்
முடியவில்லை எனத்தவிப்பு

சொன்னால் என்ன முடிவு
சொல்லுவாய் எனத் தவிப்பு
அந்த முடிவை என்மனம்
தாங்குமோ எனத் தவிப்பு

ஆகவே
சொல்லிவிடு நல்லமுடிவை
என்னைத் தவிக்கவிடாமல்.

நி.யூட்
யாழ்ப்பாணம்

## காத்திருப்பு

மௌனமாகிப் போன.....
மனதின் நிசப்தங்கள்
என்னை மெல்ல வருட
உருக்குலைந்த தேசத்தின்
கைதியாய்.............
கலங்கிய கண்களுடன்
என் காத்திருப்பு.................

சா.ராஜீவன்
கோண்டாவில்

# சிறுவர் அரங்கம்



## கல்வியின் சிறப்பு

* கற்கையில் கல்வி கசப்பு கற்றபின் அதுவே சிறப்பு.
* கல்வி என்பது தேன் கூடு அதைக் கட்டி முடிப்பது பெரும்பாடு.
* கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே நிகழ்காலம்.
* பிறப்பு அன்னையால் சிறப்பு கல்வியால்.
* கல்வி என்னும் பயிருக்கு கண்ணீர் என்னும் மழைவேண்டும்.

தொகுப்பு :- லோ.அபிராமி
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## நான் ஒரு பறவையானால்........!



அன்றொருநாள். நான் எனது காய்கறித்தோட்டத்தில் காய்கறி பறித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது சில பறவைகள் எனது காய்கறித் தோட்டத்தை நோக்கி காய்கறிகளை உண்பதற்காக வந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்து என் மனம் நானும் ஒரு பறவையானால்...... என்று எண்ணத் தொடங்கியது.

நான் ஒரு பறவையானால் நீலவானில் வட்டமடித்துப் பறப்பேன், கோலக் குயிலுடன் சேர்ந்து பாடிமகிழ்வேன், வண்ணக்கிளியுடனும், செங்கால் நாரைகளுடனும் சேர்ந்து பறந்து மகிழ்வேன், சாலப் பரந்த கடலைத்தாண்டி அடுத்த தீவுக்குச் சென்று, அங்கு நடக்கின்ற புதினங் களையும் செய்திகளையும் பிறருடன் பகிர்ந்து கொள்வேன். அத்துடன் கிளியின் கொச்சைப் பேச்சை நானும் பேசக் கற்றுக் கொள்வேன்.

பறவை உலகம் எத்தனை அற்புதமானது. விமர்சனமும் வீண் சண்டைகளும் நம்மிடையே இல்லை. நம்மிடையே யுத்தமோ, வறுமையோ இல்லை.

இப்படியாக என் கற்பனைகள் விரிந்து சென்ற வேளையில் எனது தாயின் குரலானது என்னை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது. என் இனிய கற்பனை ஈடேறுமா? என்ற ஏக்கத்துடன் எழுந்து செல்கிறேன்.

ம. சிவரஞ்சினி,
நல்லூர்.

## ஒலிம்பிக் வினா விடை


1. ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் தொடங்கியது?
   கிறீஸ்நாட்டில்
2. ஒலிம்பிக் விளையாட்டின் கொள்கைச் சொற்றொடர் யாது?
   லிட்டியஸ், அல்டியஸ்,
3. போர்டியஸ் இதன்பொருள்
   அதிவேகம்,அதி உயர்வு, அதிவலிமை
4. ஒலிம்பிக்தீபம் எந்த ஒலிம்பிக்கில் முதன்முதலில் ஏற்றப்பட்டது?
   1928ல் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற போட்டியில்
5. ஒலிம்பிக் போட்டிகள் எந்தஆண்டுகளில் நடைபெறவில்லை? ஏன்?
   1916ல் முதல் உலகப் போர்
   1940, 1944 இரண்டாம் உலகப்போர்
6. மௌன ஒலிம்பிக் போட்டி என்றால் என்ன?
   காது கேளாதோருக்காக நான்கு வருடங்களுக்கு 1 முறை நடத்தப்படும் போட்டி.
7. IOC என்றால் என்ன?
   International Olympic Commitiee என்பதன் சுருக்கம்
8. ஒலிம்பிக்போட்டி எத்தனை நாட்களுக்கு நடைபெறும்?
   16 நாட்கள்
9. முற்கால ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றவருக்கு எந்த பரிசு தரப் பட்டது?
   ஆலிவ்மரக்கிளைகளாலானகிரீடம் அணிவிக்கப்பட்டது.

தே.சுபேசன்
யா/ டிறிபேர்க் கல்லூரி.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



## கடவுளுக்கு மூளை இல்லை

பண்பூர் கிராமத்தில் சங்கரன், தேவன் என்னும் இரு சகோதரர்கள் தமதுபெற்றோருடன் வசித்து வந்தனர். ஒரு நாள் சகோதரர்கள்இருவரும் விறகு வெட்டுவதற்காக காட்டிற்கு சென்றனர். விறகை வெட்டி ஆளுக்கு ஒவ்வொரு கட்டாகக் கட்டி சுமந்து வந்தனர். வரும் வழியில் களைப்பு மிகுதியால் சற்று ஆறிச் செல்வோம் என்று எண்ணி, ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் விறகுக் கட்டுக்களை இறக்கி வைத்துவிட்டு களையாறினர்.

சிறிது நேரம் களை ஆறியபின்பு தேவன் தமையன் சங்கரனைப் பார்த்து "அண்ணா! இந்தக் கடவுளுக்கு மூளையே இல்லையடா" என்றான். ஏன் "அப்படிச் சொல்கிறாய் என்று தமையன் கேட்டான்." "பின்னை என்னண்ணா சிறிய பூசணிக் கொடிக்கு பெரிய காயையும், இந்தப் பெரிய ஆலமரத்திற்கு சிறிய காயையும் படைத்திருக்கிறார் பார்த்தியா?" என்றான். தமையன் சங்கரன் அதற்கு "அப்படிச் சொல்லாதே கடவுள் ஏதோ ஒரு காரணத்தோடு தான் படைத்திருப்பார்" என்றான்.

பின் இருவரும் ஆலம்வேரில் தலையை வைத்து சிறு தூக்கம் போட்டனர். அப்போது ஆலமரத்தில் இருந்து ஒரு ஆலம் பழம் தேவனின் கண் இமையில் விழுந்து தெறித்தது. தேவன் திடுக்கிட்டு எழும்பி "அண்ணா! கண் வலிக்கிறது" என்று சொன்னான். அதற்கு தமையன் சங்கரன் "கடவுளுக்கு மூளை இல்லையென்று சொன்னாய் அல்லவா? ஆலமரத்தில் பூசணிக்காய்அளவு காய் காய்த்து உன் கண்ணிமையில் விழுந்தால் உன் தலையும் வெடித்து நீயும் செத்திருப்பாய் என்றான்."

"ஓம் அண்ணா கடவுள் மூளையோடு தான் படைத்திருக்கிறார்" என்று சொல்லி, கடவுளைக் கும்பிட்டுவிட்டு விறகுக் கட்டுக்களையும் தூக்கிக் கொண்டு இருவரும் வீடு நோக்கிச் சென்றனர்.

இ.தயாளினி
யா /விக்டோறியா கல்லூரி

## குரங்கும் மனமும்



ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய அரண்மனையில் ஒரு குரங்குக் குட்டியை வளர்த்து வந்தார்.

அந்தக் குரங்கு ஒரு சுவர் ஓரமாக, மிகவும் சாதுவாக உட்கார்ந்திருக்கும். அப்படி இருந்தாலும் கூட அந்த ராஜா தினமும் ஒரு தடியால் அதற்கு இரண்டு அடி கொடுப்பார். அந்த அடியை வாங்கிக் கொண்டு .... குரங்குக் குட்டி அங்கே கிடைக்கும் உணவை உண்டு அமைதியாகக் காலம் கழித்துக் கொண்டிருந்தது.

அந்த ராஜாவுக்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந்தார். அவர் தினமும் ராஜா கூடவே இருப்பார்....... போவார்..... வருவார்.

ராஜா அந்தக் குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார். அது அவர் மனதுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது.

ஆதலால் அவர், "அரசே.... என்ன இது அநியாயம்... வாயில்லா ஜீவன்... அதுவுமில்லாமல் அது மிகவும் சாதுவாக ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறது... அதைப் போய் தினமும் அடிக்கிறீர்களே!" என்று கேட்டார்.

"சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு நான் மரியாதை கொடுக்கிறேன்.இன்றிலிருந்து இந்தக் குரங்கை அடிப்பதை விட்டு விடுகிறேன். இதோ தடியைக் கீழே போட்டுவிடுகின்றேன்" என்றார். தடியைக் கீழே போட்டும் விட்டார்.

அதன் பிறகு தினமும் மாலை வேளையில் ராஜாவும், மந்திரியும் அந்தப் பக்கமாக வருவார்கள்... போவார்கள்.

ராஜா அடிக்கவில்லை என்று தெரிந்ததும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம் பித்தது. அதன் பின்னர் ராஜாவிடம் ஓடி வந்து கொஞ்ச ஆரம்பித்தது! அதற்கு அடுத்த நாள் என்ன செய்த்து தெரியுமா? ராஜா தோளில் ஏறி உட்கார்ந்து........ அந்தக் தடியால் ராஜாவின் காதில் குத்த ஆரம்பித்தது. பார்த்தார் மந்திரி......!

"என்ன இது? ராஜா என்ற மரியாதை இல்லாமல்..." என்று சொல்லி அந்தக் தடியைப் பிடுங்கிக் குரங்கை அடிக்க ஆரம்பித்து விட்டார்!

இப்போது ராஜா அந்த மந்திரியைப் பார்த்து. "இதே வேலையைத்தானே நான் ஆரம்பத்திலேயே செய்து கொண்டிருந்தேன்"! என்று சொன்னார்.

இப்போது மந்திரிக்கு... 'குரங்கும் மனமும் அடக்கி வைத்திருக்கும் வரையில் தான் அடங்கியிருக்கும்' என்ற உண்மை புரிந்தது.

*சிறுவர்களே கதையைப் படித்தீர்களா? நீங்களும் மனத்தினைக் கட்டுப்படுத்தும் பழக்கத்தினைச் சிறுவயதி லிருந்தே பழகிக் கொள்ளுங்கள். மனம் சுத்தமாக இருந் தால்தான் உங்கள் சிந்தனையும் தெளிவாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

தொகுப்பு:- சுஜா

## விந்தையான செய்திகள்

1. உலகில் மிகப் பெரிய புத்தகம் அமெரிக்காவில் உள்ளது.
2. பச்சோந்தியைக் குருடாக்கி விட்டால் அது பார்வையை இழப்பதுடன் தன் நிறத்தை மாற்றும் சக்தியையும் இழக்கும்.
3. முதலாம் மகாயுத்தத்தின் போது ஜேர்மனி இரும்பாலான நாணயங்களை உபயோகித்தது.
4. தத்துக் கிளிக்கு அதன் காது கால்களில் தான் உள்ளது.

தி. மயூரகிரி
யா/ இந்துக் கல்லூரி.

## விடுகதைகள்

* குட்டிக் குதிரைக்கு நூற்றி யெட்டு கடிவாளம் அது என்ன?
  தறி
* அழுது கொண்டே ஒளிதருவான் அவன் யார்?
  மெழுகுவர்த்தி
* ஒற்றைக் கால்குள்ளனுக்கு எட்டுக் கை அது என்ன?
  குடை
* பந்தலிலே தொங்குதடி பாம்புக் கூட்டம் அது என்ன?
  புடோலங்காய்

மு.சர்மிலா
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.

## வீ.எம்.கே. ஜுவலர்ஸின்

### இவரைத் தெரியுமா -பரிசுப் போட்டி இல:-04

**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

'இவரைத்தெரியுமா?
போட்டி இல:-04,
வீ.எம்.கே. ஜுவலர்ஸ்
305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




**குறிப்பு:-**
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: – 04**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................
அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................
அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல03 இற்கான சரியான விடை**



**நடிகை மனோரமா**

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 03 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

**முதற்பரிசு: –** ரஞ்சன், இன்வென்ஸ்ரன், கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**இரண்டாம்பரிசு: –** திருமதி.பா.செல்வராணி, மூளாய்வீதி, வட்டுக்கோட்டை.

**மூன்றாம்பரிசு: –** ம.சதீஸ்கரன், சிறீசாயி ஸ்ரோர்ஸ், கரவெட்டி.

**சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*யோ.பிந்துஜா நல்லூர். தி.நந்தினி மானிப்பாய். ச.ஜானகி நல்லூர். ஜீவகுமார் மானிப்பாய். இ.ராஜி கரவெட்டி. உ.பானுஷா சுன்னாகம். ஜே.அழகன் மட்டுவில். தி.உமாசங்கர் கோப்பாய். நி.அஜந்தன் பளை. சி.தேனுகா திருநெல்வேலி.*

அன்பு வாசகர்களுக்கு!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் 'மகளிர் உலகம்', மற்றும் ஏனைய சில ஆக்கங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.


ஆசிரியர்

**'பேனா நண்பர்கள்' பகுதியில் இணைந்து கொள்ள விரும்பும் வாசகர்களுக்கு!**

நீங்கள், உங்கள் சுயவிபரங்களுடன், அடையாள அட்டையின் நிழற் பிரதியையும் இணைத்து சங்குநாதத்தின் பேனா நண்பர்கள் பகுதிக்கு அனுப்பி வையுங்கள்.

அடையாள அட்டையின் நிழற்பிரதி இணைக்கப்படாத உங்கள் சுயவிபரங்கள் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என்பதனை அறியத் தருகின்றோம்.

*ஆசிரியர்.*






குணரட்ணம் ருத்ரநாத்
வயது: 15
யாழ் இந்துக்கல்லூரி
504, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
கிரிக்கெட், கம்பியூட்டர், மீன்வளர்த்தல்.




வே.சிவகுமார்
வயது: 21
வரணி இயற்றாலை,
வரணி.
கவிதை, வானொலி பத்திரிகை.



சி.ரட்னதாஸ்
வயது: 14
நவாலி தெற்கு மானிப்பாய்
பத்திரிகை, வானொலி கதைப்புத்தகம்.




எஸ்.வாகீசன்
வயது: 18
பங்களா ஒழுங்கை,
மல்லாகம்.
பத்திரிகை, கிரிக்கெட்.



யோ.சிறிகாந்
வயது: 22
192, கச்சேரி நல்லூர் வீதி.
யாழ்ப்பாணம்.
பத்திரிகை, வானொலி

## குறுக்கெழுத்துப் போட்டி

### இல 05



அனுப்ப வேண்டிய முகவரி:-

**குறுக்கெழுத்துப் போட்டி இல 05**
**ஸ்ரீ வாணி நகை மாடம்,**
**இல. 173, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

.......... இங்கே வெட்டுக..............................

**இடமிருந்து வலம்.**
(1)சாத்தியப்படாது (5) கூட்டல் அடையாளம் (6) ஒரு கணித அளவீடு (8) பலவற்றைச் சேர்த்து புளிக்க வைத்துப் பெறுவது (9) தென்னை (11) தம்முடையது (13) கைவளை (16) பாதணி (18) புலமை நிறைந்தவர் வலம்மாறி வருகின்றார் (19) யவருக்கும் இச்சிந்தனை வேண்டும் (20) மாதா (21) உறுதி வலம் மாறி வருகின்றது.

**மேலிருந்து கீழ்.**
(1) தன்னந்தனியனாய் சாதனை படைக்க வல்லோன் (2)வருத்தி இறக்கச் செய் (3) நமது பெயர் அல்ல இறைபெயர் (4) புகை (7) தஞ்சம் (10) துன்பம் கீழிலிருந்து மேலாக நிற்கின்றது (11) தகுதியில்லாதவன் (12) மிகச் சிறிய அளவு கீழிருந்து மேலாக இருக்கின்றது (14) மருந்து (15) ஒத்துப்போ (17)மாயவன் வலம் வரும் வாகனம் (18) அணி (20) கீழிருந்து மேலாக தவ அல்ல.

**குறுக்கெழுத்துப் போட்டி இல04 இற்கான விடைகள்**
**இடமிருந்து வலம்**
1) அரமியம் 4) தழும்பு 6) தலை 7) அவி 9) பய 10) ரவி 12) மல்ம் 13) தசரதன் 15) கசகரணம் 17) வா 18) வதம் 19) பணி 20) மல்லி 21) அசுப

**மேலிருந்து கீழ்**
1) அந்தரங்கம் 2) மிகை 3) வம்பலன் 5) புயம் 7) அவசர 8) விதம் 11) விலை 12) மதம் 13) தகவல் 14) ரணம் 16) சதம 17) வாணிப 19) பசு

பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப் போட்டியில் 'ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-

**முதற் பரிசு:-** க.அபிராமி, இல 25, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:-** இ.இரவீந்திரன், அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

**மூன்றாம் பரிசு:-** திருமதி செ.பாக்கியநாதன், நூலகர், பொதுநூலகம், சங்கானை.

**போட்டியில் கலந்து கொண்டு 'பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**
*கே.அரசேஸ்வரன், நல்லூர் வடக்கு, செ.ஜெரீம் நிரோஷன், வட்டுக்கோட்டை, சி.சயந்தன், வட்டுக்கோட்டை ஏ.சர்மிளா, அரியாலை, ஜோ.டிலுக்சன், யாழ்ப்பாணம், ஸ்ரீ.சொரூபிகா, வட்டுக்கோட்டை, சு.சுதர்ஷ, புலோலி, சு.சிவாஜினி சாவகச்சேரி, ஸ்ரீ.பரமானந்தவல்லி, பண்ணாகம், கேதாரணி, யாழ்ப்பாணம்.*

**குறிப்பு:-**
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல 05" அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:- 31.03.2002

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




## லேசர் வெளிச்சத்துக்கு நடுவே விஜய் - ப்ரியங்கா ஆட்டம்!

ஜி.வி.பிலிம்ஸ் லிமிட்டெட் பட நிறுவனம் தயாரிக்கும் ''தமிழன்'' படத்தில் கதாநாயகனாக் விஜய் நடிக்க உலக அழகி பிரியங்கா சோப்ரா நடிக்கிறார். மற்றும் ரேவதி, நாசர், விவேக், வினுச்சக்கரவர்த்தி, பசி சத்யா, ராஜசேகர், ஆகியோரும் நடிக்கின்றனர்.



கதை வசனம் எழுதி எ. மஜீத் இயக்கும் 'தமிழன்' பட்த்துக்கான படப்பிடிப்பு வெகு மும்முரமாக நடந்து வருகிறது.

''லாலா' லாலா 'லா' முடிச்சோம்
லாலா லாலா 'லவ்' படிப்போம் காதல் வளர்க்கும் கட்சியை
ஆதரிப்போம்
பட்டம் வாங்கும் வயசெமக்கு
பட்டம் விடத்தான் மனசிருக்கு
பறவை கூட்டில் சில நாள் வாழ்ந்திருப்போம்'' கவிஞர் வைரமுத்து எழுதிய இந்தப்பாடலை சங்கர் மகாதேவன், ஜி.கே. லாவண்யா ஆகியோர் பாட டி.இமான் இசையில் பாடல் ஒலிப்பதிவானது.


இப்பாடலுக்கான காட்சி சென்னை துறைமுகத்திலும், பிலிம் சிட்டியில் பிரமாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டும் படமானது.

நடனக்கலைஞர்களுடன் சேர்ந்து விஜய் நடனமாட, வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட 'லேசர் விளக்குகள்' ஒளியில் பாடல் காட்சி படமானது. கே. ஏகாம்பரம் ஒளிப்பதிவு செய்தார்.

கலையை சாபு சிரிலும், எடிட்டிங்கை லெனின் வி.டி.விஜயனும், நடனத்தை ராஜு சுந்தரம், தினேசும், சண்டைப்பயிற்சியை சூப்பர் சுப்பராயனும் தயாரிப்பு நிர்வாகத்தை எம்.எஸ். அமீனும் கவனிக்க, ஜி. வெங்கடேஸ்வரன் தயாரிப்பில் வேகமாக வள்ர்ந்து வருகிறான் 'தமிழன்'
சித்திரைத் திருநாள் அன்று திரைக்கு வருகிறது!

## சிம்ரனிடம் தன் காதலை வெளிப்படுத்தினார் பிரசாந்!

தமிழும், மீனாட்சியும் ஒருவர் மேல் இன்னொருவர் காதல் கொண்டிருந்தார்கள். ஆனால் இருவரும் காதலை மனசுக்குள்ளேயே வைத்து பூட்டிக் கொண்டார்களே தவிர வெளிக் காட்டிக்கொள்ளவில்லை



''இன்று எப்படியாவது காதலை சொல்லி விடுவது'' என்று தமிழ் முடி வெடுத்தான். அவளும் அதே மாதிரி முடி வெடுத் திருந்தாள். இருவரும் அன்று மாலை ஒரு பூங்காவில் சந்தித்தார்கள்.

தமிழ் தனது காதலை சொல்ல முயன்ற போது அவனுக்கு விக்கல் எடுத்தது. அதேபோல மீனாட்சியும் காதலை சொல்ல முயல - பேச முடியாமல் வாய்திக்கியது. இருவருக்கும் காதலை சொல்ல முயலும் போது அதை சொல்ல முடியாத நிலையை நினைத்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்தப் பார்வையில் காதல் தெரிந்தது. கற்பனை விரிந்தது. இருவரும் கட்டித் தழுவியபடி
''விக்குதே விக்குதே நெஞ்சுக்குள்ளே விக்குதே'' என்ற ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்.

இப்படி ஒரு காட்சி தெய்வானை மூவீஸ் தயாரிக்கும் 'தமிழ்' படத்துக்காக ஊட்டியில் படமானது. தமிழாக பிரசாந்தும், மீனாட்சியாக சிம்ரனும் காதல் செய்ய, இப்பாடல் காட்சியை பிரியன் ஒளிப்பதிவு செய்தார்.

பாடல்களை கவிஞர் வாலி, விவேகா, தாமரை, சினேகன், பழனி பாரதி எழுத பரத்வாஜ் இசை அமைக்கிறார்.

கதை, திரைக்கதை எழுதி ஹரி இயக்க, வசனத்தை டைரக்கடர் சண் எழுதியிருக்கிறார். அமுதா துரைராஜ் தெய்வானை துரைராஜ் திவ்யா துரைராஜ் தயாரித்திருக்கிறார்கள்.

## பாப்கார்ன் படத்தில் சிம்ரனின் தங்கை

மோனலைத் தொடர்ந்து சிம்ரன் தங்கை ஜோதியும் நடிக்க வந்துவிட்டார். மேக்கப்பில்லாமல் இவரைப்பார்க்கும் யாரும் இவரா? நடிக்கவா? என்று ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மேக்கப்பிற்குப்பின் அட இவர்தானா அவர்? என்று கேட்கும் படியான அழகு முதல் படத்தில் ஹீரோயினாக நடிக்கும் இவர் நாசர் தயாரிக்கும் பாப்கார்ன் என்ற படத்தில் சிம்ரனின் மகளாக நடிக்கிறார்.




## மீனா- தேவயானி- ரவளி இணையும் படை வீட்டு அம்மன்

'ராஜகாளி அம்மன்', 'பாளையத்து அம்மன்', 'திருப்பதி ஏழு மலை வெங்கடேசா' உட்பட பல வெற்றிப் படங்களுக்கு வசனம் எழுதியதுடன் பிரபல இயக்குனர் இராம நாராயணனிடம் இணை இயக்குனராகப் பணியாற்றிய புகழ்மணி இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.



பேபி பிலிம்ஸ் ஒளிப்பதிவு செய்ய, ஆர்.கே.பாபுராஜ் எடிட்டிங் கவனிக்கிறார். ஜே. துரை தயாரிப்பு நிர்வாகம் செய்ய, எஸ். ஏ. ராஜ்குமார் இசை அமைக்கிறார்.
இராம நாராயணன் எழுதிய
''அடி முத்து முத்து மாரி..
இந்த் சித்து ஏண்டி...'' மேலும்
காளிதாசன் எழுதிய
''பத்து ஊரையும் பாக்குறா பாக்குறா..
படை வீட்டம்மன் நம்மை காக்குறா காக்குறா''
அகிய பாடல்கள் இந்தப் படத்துக்காக சமீபத்தில் ஒளிப்பதிவானது.

இதில் அம்மன் வேடத்தில் மீனா நடிக்கிறார். மற்றும் ராம்கி, தேவயானி, ரவளி, செந்தில், நிழல்கள் ரவி, வினுச்சக்கரவர்த்தி, கே. ஆர். வத்சலா உட்பட பலர் நடிக்கின்றனர்.

## உலகம் சுற்றும் வாலிபனுக்குப்பின் முழுக்க வெளிநாட்டில் எடுக்கப்பட்ட - ஜூனியர் சீனியர்

''வேலை, எனவளே என இரண்டு படங்கள் பண்ணியும் வியாபார ரீதியாக பெரிய வெற்றி பெறவில்லை ஆனால் 'ஜூனியர் சீனியர்' அதை உடைக்கும் என்று எடுத்த எடுப்பிலேயே தனது படத்தைப் பற்றி அழுத்தமாகச் சொல்கிறார் இயக்குனர் சுரேஷ்.

மம்முட்டி, அம்சவிருத்தன், சார்லி, ரமேஷ் கண்ணா, லீனா, சாருலதா எனப் பலர் நடிக்கின்றனர்.



நட்பு- காதல் இரண்டுக்கும் நடுவே ஏற்படும் பிரச்சினைகள் தான் கதை சொல்லியிருக்கும் விதம் புதிது என்கிறார் சுரேஷ்.

மொத்தம் 40 நாட்கள் மலேசியாவில் படமாக்கிவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள். ''பொதுவா இப்போ உள்ள சூழ் நிலையில் எல்லோருக்கும் பிடிக்கிமாதிரி கதை பண்றது கஷ்டம் நினைச்ச மாதிரியே வந்திருக்கு! என்று சந்தோஷமாகச சிரிக்கிறார் தயாரிப்பாளர்

தயாரிப்பாளர் லோகநாதன் ஏற்கனவே சின்னத்திரையில் 'ஜூனியர் சீனியர்' என்ற தொலைக்காட்சி தொடரைத் தயாரித்து கொண்டிருந்தவர். அதே பெயரைப் படத்துக்கும் சூட்டி இருக்கிறார்.

மம்முட்டி கொஞ்சம் சீரியஸ் என்றால் அம்ச விருத்தன் மச்சக்காரர். கதாநாயகி சாருல தாவோடு சூடு கிளப்பறமாதிரி பாடல் காட்சியில் வெளுத்து வாங்கியிருக்கிறார் படத்தில் மொத்தம் 5பாடல்கள் பா. விஜய் இளங்கோ இருவரும் எழுதியுள்ள இந்தப்பாடல்களை எஸ்.பி.பி., ஸ்ரீனிவாஸ், திப்பு, சொர்ணலதா, யுவன்சங்கர்ராஜா ஆகியோர் பாடியுள்ளனர்.

இதில் யுவன் சங்கர்ராஜா பொப் பாடகராக ஒரு பாடலுக்கு நிஜமாகவே படத்தில் ஆடுகிறார்.

இதற்கு இசையமைப்பு அவரே அமைக்கிறார்.

